பொது நூலகம்
கோண்டாவில்
பிரதேச

விலை: ரூபா 20

பக்கங்கள் 28


# உதயன்

சுடர் 30 கதிர் 353 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 28, சனிக்கிழமை 14.11.2015

இன்று ஜாதிக சம்பத சுப்பர் பரிசு
ரூ. 5,937,374.00
வாழ்க்கையை வெற்றி கொள்ள - ஜாதிக சம்பத அதிகமதிகமாக கொள்வனவு செய்து - அதிர்ஷ்டசாலியாகுங்கள் -
NLB அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர்
தேசிய லொத்தர் சபை

## வடக்கில் 1,463 குடும்பங்கள் மழையால் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 14
தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரத்து 463 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.
யாழ்ப்பாணத்தில் மாத்திரம் ஆயிரத்து 388 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 628 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.
அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று வீசிய மினி சூறாவளியால் 30 வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்ததுடன் 150 ற்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததோடு 75 குடும் பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்க பக். 23



வன்னி வீதிகளை மூடியுள்ள வெள்ளம்

# வடக்கு-கிழக்கு முழுவதும் உணர்வுபூர்வ முழு அடைப்பு

### அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த இயல்புவாழ்வு முற்றாக முடங்கியது

யாழ்ப்பாணம், நவம்பர் 14
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக - விடிவுக்காகத் தமிழர் தாயகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் காரணமாக, வடக்கு - கிழக்கு முழுமையாக முடங்கியது. 9 ஆண்டுகளுக்குப் பின்னர், வடக்கு - கிழக்கை இணைத்து ஒரே நாளில் முன்னெடுக்கப்பட்ட இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கினர்.
நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் விடுதலையின்றி வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, நேற்றையதினம் முழுஅடைப்புப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் பக். 24


மேலும் படங்கள் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பக்கங்களில்

## சீரற்ற காலநிலை தொடரும்

கொழும்பு, நவ.14
இலங்கைக்கு அருகே நிலை கொண்டுள்ள சீரற்ற வளி மண்டல நிலைமை காரணமாக இடியுடன் கூடிய மழை தொடரும் என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் பக். 22

## இ.போ.ச. பஸ் தாக்கப்பட்டது

*வர்த்தக நிலையம் மீதும் கல் வீச்சு*

யாழ்ப்பாணம், நவ. 14
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நேற்று நடத்தப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தின் போது யாழ்.மாவட்டத்தில் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கைப் போக் குவரத்துச் பக். 22

## கிழக்குப்பயணத்தை ஒத்திவைத்தார் மைத்திரிபால

கொழும்பு, நவ.14
தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி வடக்கு- கிழக்கில் கடையடைப்பு நேற்று இடம் பெற்றமை காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிழக்கு மாகாணத்துக்கான தனது பயணத்தை ஒத்திவைத்தார்.
மட்டக்களப்புக்கு ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன நேற்று செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார். ஜனாதிபதி, பக். 22

## ஐ.நா. செயற்குழுவின் மீது எமக்கு நம்பிக்கையில்லை

### காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14
இலங்கை அரசுக்கும் எமக்கும் இடையில் தொடர்பாளர்களாக மாத்திரம் ஐ.நாவின் காணாமற்போனோர்செயற்குழு இருப்பதால் எமக்கு எந்தப் பயனுமில்லை. இதன் காரணமாக ஐ.நா. குழுவினால் எமக்கு நன்மை கிடைக்கப் போவதில்லை. ஐ.நா. செயற்குழுவினர் இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்கும் தரப்பாக இருக்கவேண்டும் என்று காணாமற்போனோரின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. செயற்குழுவினர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது அங்கு பிரத்தியேக பக். 23


## மேலும் 28 கைதிகளுக்கு அடுத்த வாரம் பிணை

கொழும்பு, நவ.14
தமிழ் அரசியல் கைதிகளில் மேலும் 28 பேருக்கு அடுத்த வாரம் பிணைஅனுமதிவழங்கப்படுமென நீதி அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.
இதன்மூலம் 2012 ஆம் ஆண்டுக்குப் பின் கைது செய்யப்பட்டு, கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத 59 சந்தேக நபர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும் நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
அத்துடன் கடந்த புதன்கிழமை பிணை அனுமதி வழங்கப்பட்ட 31 கைதிகளில் பக். 22

## கைதிகளின் நிலைமையைக் கூறி கண்ணீர் விட்டார் முதலமைச்சர்

### சுவிஸ் தூதுவருடனான சந்திப்பில்

யாழ்ப்பாணம், நவ 14
அரசியல் கைதிகளின் நிலைமை குறித்துச் சுவிற்சர்லாந்துத் தூதுவருக்கு கூறிக்கொண்டிருந்த போது, வடக்கு பக். 24




## முக்கிய நகரங்களில் நேற்று ஆயுதம் தாங்கிய பொலிஸார்

யாழ்ப்பாணம், நவ. 14
வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தின் காரணமாக, தாயகப் பிரதேசத்தின் முக்கிய நகரங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் ரோந்து நட வடிக்கையில் பக். 22

## கெஹலிய ரம்புக்வெலவுக்கு யாழ்.நீதிமன்று பிடியாணை

### காணாமற்போன லலித்,குகன் வழக்கில்



யாழ்ப்பாணம், நவ. 14
காணாமற்போனவர்களான லலித், குகன் வழக்கில் சாட்சியமளிப்பதைப் புறக்கணித்துவரும் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு யாழ்.நீதிமன்று நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது.
அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு மன்று உத்தரவிட்டுள்ளது.
காணாமற்போனோரைத் பக். 24

உதயன் | சனிக்கிழமை | நவம்பர் 14 | 2015

# முழு அடைப்பால் முடங்



சாவகச்சேரி



மானிப்பாய்


திருநெல்வேலி


யாழ்.நகர்

## வடமராட்சி


பருத்தித்துறை


வல்வெட்டித்துறை


நெல்லியடி


அச்சுவேலி





# கியது தமிழர் தாயகம்









முல்லைத்தீவு








கிளிநொச்சி




வவுனியா





மன்னார்

# கிழக்கிலும் முழு அடைப்பு...




## மட்டக்களப்பு








## திருகோணமலை










## அம்பாறை





# அரசியல் கைதிகளுக்கு கருணை காட்டுங்கள்

## ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு கோரிக்கை மனு அனுப்பியது அகில இலங்கை சைவ மகா சபை

யாழ்ப்பாணம், நவ.14

அரசியல் கைதிகளுக்குக் கருணை காட்டுமாறு கோரி அகில இலங்கை சைவ மகா சபையினர் ஜனாதிபதிக்கு கோரிக்கை மனு ஒன்றை அனுப்பியுள்ளனர். வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஊடாக இந்த மனு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை வரலாற்றில் நல்லாட்சி எனும் மாற்றத்துக்காக தியாக உணர்வோடு களம் இறங்கி ஜனாதிபதியாக ஆட்சிபுரியும் உங்களுக்கு பலதசாப்தங்களாக கண்ணீரையே வாழ்க்கையாக் கிக்கொண்டிருக்கும் மனிதர்கள் சார்பாக, அன்பையும் கருணையையும் போதிக்கின்ற மதங்களின் சார்பாக இந்த மனுவைச் சமர்ப்பிக்கின்றோம்.

உலகம் முழுவதிலும் மனிதர்கள் தாங்கள் நேசிக்கும் கொள்கை, மறுக்கப்படும் உரிமை, கருத்தியல்சார்ந்த முரண்பாடுகளுக்காக போராட்டங்களை முன்னெடுக்கின்ற நிலை வரலாற்றுக்காலம் முதல் உருவாகியுள்ளது. அவை அரசியல் ரீதியான போராட்டங்களாகவே கருதப்படுகின்றன. அவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அதுசார்ந்த விடயங்களில் ஈடுபட்டோர் நல்லிணக்க அடிப்படையில் மன்னிக்கப்படுவர். இவை அனைத்தையும் நீங்கள் அறிவீர்கள். அதற்கு இலங்கையும் விதிவிலக்கு அல்ல என்ற ரீதியில் கடந்த காலங்களில் புரட்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி இயக்கத்தினர் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டமையை மீள நினைவுபடுத்துகின்றோம்.

அந்தவகையில் தனிப்பட்ட நலனுக்காகவோ காழ்ப்புணர்வுகளோ இன்றி கொள்கை சார்ந்த, கருத்தியல் சார்ந்த போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக சிறைகளில் பல ஆண்டுகளாக வாழும் மனிதர்களின் குடும்பத்தினர் அளவற்ற துயருடன் நடைப்பிணங்களாக வாழும் அவலத்தை முடிவுக்கு கொண்டுவர உங்களை அன்பையும் கருணையையும் போதிக்கும் மதங்கள் சார்பில் வேண்டுகிறோம்.

நல்லிணக்கம் பற்றிப் பேசப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்கனவே பல ஆண்டுகள் குற்றம் சுமத்தப்படாமலேயே தண்டனை அனுபவித்த மனிதர்களுக்குக் கருணை காட்டிப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யக் கோரிக்கை விடுக்கிறோம். -என்றுள்ளது. (ற-10)

## ஆலயப் பிணக்குகளை தீர்ப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.14


ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகளை இணக்கப்பாட்டுடன் தீர்த்து வைக்க இந்து சமயப் பேரவை மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குப் பரிபூரண ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு தயார் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்து சமயப் பேரவையினர் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இந்து ஆலயங்களும், இந்து அமைப்புகளும் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து ஆராயப்பட்டன. தற்போது உள்ள சூழ்நிலையில் இந்து அமைப்புக்கள் சமூகப் பணியில் ஈடபடவேண்டிய அவசியம் மற்றும் கடந்த நெருக்கடியான காலங்களில் இந்து சமயப் பேரவை மேற்கொண்ட பணிகள் ஞாபகப்படுத்தப்பட்டு இந்தப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியதன் அவசியமும் அரச அதிபரால் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், யாழ்.மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் உதயகாந்தன், இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன், பேரவை உபசெயலாளர் திருமதி.நாச்சியார் செல்வநாயகம், சைவ உயர்பீட உறுப்பினர் பிரதிஸ்டா பூஷணம் சிவஸ்ரீ ச.சோமஸ்கந்த குருக்கள், பேரவைப் பொருளாளர் த.சற்குணராசா, யோ.துஷ்யந்தன், கோ.சந் திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ரி6)

## மரக்குற்றிகளுடன் வந்த வாகனம் மடக்கிப் பிடிப்பு



பளை, நவ 14

மரக்குற்றிகளுடன் அதிவேகமாக வந்து கொண்டிருந்த ஹன்ரர் ரக வாகனத்தைப் பளைப் பொலிசார் கலைத்துச் சென்று மடக்கிப் பிடித்து கைப்பற்றினர்.

ஏ-9 பிரதான வீதியூடாக அதிவேகமாக வந்து கொண்டிருந்த ஹன்ரரை பளைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் வெனிபொல மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் பெர்ணான்டோ ஆகியோர் தலைமையிலான பொலிஸார் இயக்கச்சி வளைவுப் பகுதியில் வைத்து வழி மறித்துள்ளனர்.

எனினும் வாகனத்தில் வந்தவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் சென்றதை அடுத்தே ஜீப்பில் வாகனத்தைத் துரத்தத் தொடங்கியதாகப் பொலிசார் கூறினர்.

இயக்கச்சி புளியடிச் சந்திப்பகுதியில் பொலிசார் ஹன்ரரை நெருங்கிய போது அதில் இருந்தவர் ஹன்ரரைக் கைவிட்டுத் தப்பிச் சென்றதாகவும், ஹன்ரரில் இருந்து மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டதாகவும் பளைப் பொலிசார் தெரிவித்தனர். (த-109)

## ஆளணிப் பற்றாக்குறையால் வெளிக்கள வேலை பாதிப்பு

### சாவகச்சேரிப் பிரதேச சபையில்

யாழ்ப்பாணம், நவ. 14

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆளணிப் பற்றாக்குறையால் சாவகச்சேரிப் பிரதேச சபையின் வெளிக்கள வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றன என்று அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேச சபையில் ஐந்து தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான ஆளணி உள்ள போதும் இருவரே தற்போது கடமையாற்றி வருகின்றனர் என்றும் ஏனைய மூன்று வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் பிரதேச சபை மேற்கொள்ளவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை நீண்ட எல்லைகளைக் கொண்ட சாவகச்சேரிப் பிரதேச சபையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி புனரமைப்பு வேலைகள், கட்டட நிர்மாண வேலைகள் போன்றவற்றை தற்போது கடமையாற்றும் இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களே மேற்பார்வை செய்து வருகின்றனர். இந்த விடயத்தில் சாவகச்சேரி பிர தேச சபையும் வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களமும் உடனடி நடவடிக்கை எடுத்து வெற்றி டமாகவுள்ள தொழில்நுட்ப உத்தி யோகத்தருக்கான ஆளணியைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று பலதரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-288)

## கஞ்சா கடத்துபவரை கடித்துக் காட்டிக் கொடுத்தது பாம்பு

சாவகச்சேரி, நவ 14

பொலிஸாரினால் நீண்டநாள் தேடப்பட்டு வந்த போதைப் பொருள் கடத்தல்காரரை பாம்பு கடித்துக் காட்டிக் கொடுத்தது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கஞ்சாக் கடத்தலில் நீண்ட நாள் ஈடுபட்டதாகக் கூறப்படும் நாவற்குழிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் பல வழிகளிலும் தேடுதல் நடத்திக் கண்டுபிடிக்கமுடியவில்லை. இந்த நபர் நாவற்குழியில் உள்ள தாயார் வீட்டுக்குப் பற்றைகளுக்கு ஊடாகச்சென்ற வேளையில் பற்றைக்குள்ளிருந்து பாம்பு தீண்டியுள்ளது.

இவர் கடந்த புதன்கிழமை இரவு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவர் பாம்புக் கடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளாரெனச் சாவகச்சேரி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்தனர். தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் நேற்றுமுன்தினம் தொடக்கம் வைத்தியசாலையில் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (த-9)

## 30 லீற்றர் கசிப்பு வைத்திருந்த இருவர் ஏழாலையில் கைது

யாழ்ப்பாணம், நவ.14

ஏழாலையில் பற்றைக்குள் இருந்து 30 லீற்றர் கசிப்புடன் 2 பேரைக் கைது செய்துள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழாலை மேற்கு பெரியதம்பிரான் குளத்துக்கு அண்மையாகவுள்ள பற்றைக்குள்ளிருந்து கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்ததாகவும், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி அங்கு சுற்றிவளைப்பு மேற்கொண்டு அவர்களைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் புன்னாலைக்கட்டுவன் மற்றும் ஏழா லையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களிட மிருந்து 30 லீற்றர் கசிப்பு, கசிப்புக் காய்ச்சுவதற்கான கோடா, மற்றும் உபகரணங்களையும் கைப்பற்றிய தாகப் பொலிஸார் மேலும் கூறினர். (த-4-86)

## வரியிறுப்பாளர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ 14

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பிரஜைகளின் நலன் தொடர்பில் பேசுவதற்கான ஓர் அமைப்பாக யாழ். மாநகர சபை வரியிறுப்பாளர் சங்கத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடலும், சங்க அங்குரார்ப்பண நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல.121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சிந்தனைக்கூடக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

சமீப காலத்தில் தமிழர் பிரதேசத்தில் நிர்வாக மாற்றங்கள் பெருமளவு நிகழ்ந்தாலும் அவை மக்களுக்குப் பயனுறுதியாக அமையவில்லை. குறிப்பாக மாகாண மட்டத்திலும் உள்ளூராட்சி மட்டத்திலும் எமது நிர்வாகச் செயற்பாடுகள் வந்ததன் பின்னர் இவை சரியான முறையிலே இயங்காமையும் அதற்குக் காலம் தேவைப்படும் போன்றதான செயற்பாடுகளும் ஏமாற்றம் தருவதால் எமது தேவைகளை ஒன்றாக இணைந்து பிரஜைகளின் குரலாக, குரலற்றோர் குரலாக உரிய தரப்புக்களிடம் தெளிவுபடுத்தவதற்காக இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (த-ரி2)

## அனுமதியின்றி விற்கப்பட்ட சாராயங்கள் கைப்பற்றல்

முள்ளியவளை, நவ 14

முள்ளியவளை மாமூலைப் பகுதியில் அனுமதியின்றி நீண்ட காலமாக இயங்கி வந்ததாகக் கூறப்படும் மதுபான விற்பனை நிலையமொன்றில் இருந்து சாராயங்கள் கைப்பற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து முள்ளியவளைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.கே. ரணசிங்கவின் நெறிப்படுத்தலின் கீழ் முள்ளியவளைப் பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.ஜெயறோசான் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த மதுபான நிலையத்தை முற்றுகையிட்டுச் சாராயங்களைக் கைப்பற்றினர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்ப்பட்டார். அவரது வீட்டில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலுள்ள பற்றை ஒன்றில் இருந்து சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான 28 மதுபானப் போத்தல்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன . (த-433)

உதயன் சனிக்கிழமை | நவம்பர் 14 | 2015



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், தடை நீங்கி வருமானம் உயரும். திட்டமிட்ட வெளியூர் பயணத்தில் மாறுதல் உண்டாகும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் கூடும். காணாமற் தேடிய பொருள் வந்து சேரும். குடும்பத்துடன் சுப நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள்.

**மிதுனம்:** பகைவரும் நல்லெண்ணத்துடன் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் வரும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கடகம்:** குழப்பம் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். மாணவர்கள், போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்பர். உடல்நலனில் கவனம் செலுத்தத் தொடங்குவீர்கள்.

**சிங்கம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் படிப்படியாக உயரும். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை பெறுவீர்கள். தாமதமான பணிகள் விரைவாக நடந்தேறும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும்.

**துலாம்:** பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். கண்களின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் தேவை. பெண்களுக்குத் தாய்வீட்டுச் சீதனம் கிடைக்கும்.


**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். உறவினர்களின் வருகையால் செலவு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** திடீர் வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்புக் கூடும். இலாபமும் உயரும். பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர். உடல்நலனில் விழிப்புடன் இருப்பது நல்லது.

**மகரம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் அபரிமித இலாபம் சேரும். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கும்பம்:** பேச்சிலும், செயலிலும் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். அரசியல்வாதிகளுக்குப் புதிய பதவி கிடைக்க யோகமுண்டு. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மீனம்:** தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனமாக இருக்கவும். அரசியல்வாதிகளுக்குப் பேச்சில் நிதானம் தேவை.



## மொட்ட சிவா கெட்ட சிவாடா

பல வெற்றிப் படங்களைத் தயாரித்த ஆர்.பி.சௌத்ரியின் சூப்பர் குட் பிலிம்ஸ் பட நிறுவனம் அடுத்துப் பிரமாண்டமாக தயாரிக்கும் படத்துக்கு, 'மொட்ட சிவா கெட்ட சிவா' என்று பெயரிட்டுள்ளனர். சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் 87 ஆவது படம் இது. உலகம் முழுவதும் வேந்தர் மூவீஸ் எஸ்.மதன் வெளியிடும் இந்த படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடிக்கிறார். தெலுங்கில் கல்யாண் ராம் நடித்து வெற்றி பெற்ற பட்டாஸ் படத்தின் மறு உருவாக்கமாக தமிழில் உருவாகவுள்ள இந்தப் படத்தை. ராகவா லாரன்ஸ் நடிக்க வேந்தர் மூவீஸ் தயாரிக்க இருந்த 'மொட்ட சிவா கெட்ட சிவா' என்ற தலைப்பு, பட்டாஸ் படத்தின் மறு உருவாக்கக் கதைக்கு பொருத்தமாக இருக்கும் என்று தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி மற்றும் இயக்குநர் சாய்ரமணி கேட்டுக்கொண்டதை அடுத்து, வேந்தர் மூவீஸ் மதன் இந்த தலைப்பை விட்டுக் கொடுத்துவிட்டு, வேறு தலைப்பை வைக்கவுள்ளார். முக்கிய வேடத்தில் சத்யராஜ்ஜும் நாயகியாக நிக்கி கல்ராணியும் நடிக்கவுள்ளனர். மற்றும் சதீஷ் , தம்பிராமய்யா, மனோபாலா, கோவைசரளா, தேவதர்ஷினி, ஸ்ரீமன் ஆகியோரும் நடிக்கவுள்ளனர். தெலுங்கில் வெற்றி பெற்ற பட்டாஸ் என்ற படத்தின் ஒளிப்பதிவாளர் சர்வேஸ் முராரி ஒளிப்பதிவு செய்யவுள்ளார். படத்துக்கான இசையை நடிகை ஜெயசித்திராவின் மகன் அம்ரிஷ் அமைக்கவுள்ளார். இவர் ஜீவா இரட்டை வேடங்களில் நடித்த 'சிங்கம் புலி' படத்தை இயக்கியவர். சாய்ரமணியின் இயக்கத்தில், ஆர்.பி.சௌத்ரி. தயாரிக்கும் இந்தப்படத்தின் படப்பிடிப்பு இந்த மாதம் 18 ஆம் திகதி சென்னையில் தொடங்கி முப்பது நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

## பேஸ் புக்கில் பிடித்தவை...




### இன்றைய உலகம்

விலையுயர்ந்த கைக்கடிகாரம் ஆனால் நேரம் இல்லை.


பேஸ்புக்கில் ஆயிரம் நண்பர்கள். ஆனால் அயலவரைத் தெரியாது.


நிறைய மனிதர்களைக் காண்கிறோம். ஆனால் மனிதத்தைக் காண முடிவதில்லை.


















## மாதுளுவாவே சோபித தேரருக்கு இந்து மாமன்றத்தினர் அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.14
மாதுளுவாவே சோபித தேரர் நாட்டின் சகல மக்களின் நன்மதிப்பையும் பெற்றவர். அவர் சகல இனங்களுக்கிடையே சகவாழ்வையும் ஒற்றுமையையும் வளர்க்கப் பெரிதும் பாடுபட்ட உத்தமராவார் என இந்து மாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். அவரது இழப்புக் குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இந்து மாமன்றத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த மாதுளுவாவே சோபித தேரர் வழங்கிய முக்கியமான பங்களிப்பை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் நினைவு கொள்வர். இந்த நாட்டில் இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வொன்றை அடைவதற்கு அவர் முக்கிய பங்கையாற்றுவார் என நாம் எல்லோரும் நம்பியிருந்தோம். ஆனால் எதிர்பாராதவிதமாக விதியின் தீர்ப்பு வேறுவிதமாகிவிட்டது. இனவாத சக்திகள் சிறுபான்மை மக்களுக்கெதிராக இனவாதத்தை விதைக்க முனைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிராகத் தனித்து நின்று குரல் கொடுத்தார் தேரர். ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாத்தல், அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்களுக்கான உரிமைகளை முன்னிறுத்தல் போன்றவற்றுக்காகப் பாடுபட்ட இந்தப் பெருமகனின் கனவுகளை நனவாக்குமுகமாக அவரது பாதையைப் பின்பற்றி வாழுமாறு நாம் ஒவ்வொரு பௌத்த மத குருமாருக்கும் இந்தச் சந்தர்ப் பத்தில் வேண்டுகோள் விடுக்கிறோம். இதுவே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகவும் அஞ்சலியாகவும் இருக்கும்- என்றுள்ளது. (ஐ-10)

# கிராமப்புற இளைஞர்களின் சாதனை மகிழ்ச்சி தருகிறது

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.14
30 வருட காலமாக நடைபெற்ற உள்நாட்டுப்போரில் பல்லாயிரக் கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் இழந்திருக்கும் நிலையிலும் கிராமப்புற இளைஞர்கள் சாதனை படைக்கின்றமை தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் எனத் தெரி வித்துள்ளார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன்.

அண்மையில் நடைபெற்ற முடிந்த இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவுசெய்யப்பட்டிருக்கும் செ.பார்த்தீபனைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கண்ணகி விளையாட்டுக்கழக தலைவர் திவாகரன் தலைமையில் மட்டக்களப்பு கணேசபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரு குடியேற்றக் கிராமமான கணேச புரத்தில் ஒரு வித்து பெரிய விருட்சமாக வந்துள்ளது. தமிழ் இளைஞன் ஒருவர் சிறு வயதில் இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்டிருப்பது படுவான் கரைப் பிரதேச மக்களுக்கு பெருமை தரும் விடயம். இந்தப் பரீட்சையில் சித்தியடைவது என்பது மிகவும் கடினமான விடயம்.

எங்களது இனத்தின் வரலாறுகளையும் ஞாபகப்படுத்த விரும்பவில்லை. காரணம், எங்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம் இது. நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். எமது வாழ்வில் வறுமை இருக்கின்றது. துன்பங்கள் நிறைந்திருக்கின்றன. கிராமங்களில் வாழ்கின்றோம். இவையெல்லாம் எமது முன்னேற்றத்துக்குத் தடையான காரணங்கள் அல்ல. இந்த இளைஞர் தனது ஆரம்பக் கல்வியை பல கஷ்டங்களுக்கு மத்தியில் ஆரம்பித்தார்.

இன்று இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட 58 பேரில் 16வது இடத்தைப்பெற்று இந்தக் கிராமத்துக்கும் தனது பெற்றோர்களுக்கும் எமது தமிழ் சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார் – என்றார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், கல்முனை உவஸ்லி தேசிய பாடசாலை அதிபர் ஈ.பிரபாகரன், கணேசபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை அதிபர் எஸ்.புஸ்பராசா, வெல்லாவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.பீ.ரசிக்க சம்பத், பொது மக்கள், கழக உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-10)

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி

சாவகச்சேரி,நவ.14
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் உலகநீரிழிவுதினத்தை முன்னிட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு கிளினிக் நடைபெறும் தினத்தில் நோயாளர்களுடன் நடைபவனியாக வைத்தியசாலைக்குச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக முன்றிலில் ஆரம்பித்து ஏ-9 வீதி ஊடாக வைத்தியசாலை கிளினிக் நடை பெறும் இடத்துக்கு, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஊர்வலமாகச் செல்லவுள்ளனர். தென்மராட்சிப் பிர தேசத்தில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டியுள்ள நிலையில்- மேலும் பலர் பாதிக்கப்படாதிருக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்படவுள்ளதென கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தெரிவித்துள்ளார். தென்மராட்சிப் பிரதேசத்தின் எந்த வொரு இடத்தில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்ற வேளையில், குறைந்தது ஐந்துக்கு மேற்பட்டோர் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரதி வியாழக் கிழமைகளில் நடத்தப்படும் நீரிழிவு சிகிச்சை கிளினிக்கில் வாராந்தம் 500 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெறுவதும், ஒவ்வொரு வாரமும் நீரிழிவினால் பீடிக்கப்பட்ட புதிய நோயாளர்கள் இணைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

### புதிய நிர்வாக சபைத் தெரிவு

வட்டு. இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் கல்லூரியின் வள்ளியம்மை மண் டபத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட் டத்தில் கல்லூரியின் அபிவிருத்தி மற்றும் அதன் எதிர்காலத்திட்டம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அதனை விட, பழைய மாணவர் சங்கத்துக்கான நிர்வாக உறுப் பினர்கள் தெரிவும் இடம் பெற்றது. இதில் தலைவராக பா.சுதாகரனும், செயலாளராக எஸ்.வீரவதனும் மற்றும் 13 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-17)




சேவைநலன் பாராட்டு
திரு. நாகதீபன் நாகேஸ்வரன்
(மக்கள் வங்கி யாழ்.மாவட்ட உதவிப் பிராந்திய முகாமையாளர்)
யாழ்.மாவட்ட உதவிப் பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றி யாழ்.மாவட்டத்துக்கும் சங்கானைப் பிரதேசத்துக்கும் பல வங்கிச் சேவைகளை வழங்கி
38 வருட வங்கி வாழ்க்கையை நிறைவு செய்து 13.11.2015 அன்று ஓய்வு பெறும் திரு.நா.நாகேஸ்வரன் அவர்களை மனமுவந்து வாழ்த்துவதுடன் அவரது ஓய்வு காலம் சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
வைத்திலிங்கம் & சன்ஸ் - சங்கானை.



## விசேட பொதுக் கூட்டம்


கைதடி,நவ.14
கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு வளர்மதி மாநாட்டு மண்டபத்தில் நிலையத் தலைவர் க.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு பிரதம விருந்தினராக வளர்மதி சனசமூக நிலையத்தின் லண்டன் கிளையின் செயலாளர் மா.ரஞ்சநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் வளர்மதி சனசமூக நிலையத்தின் உப செயலாளர் ச.தமிழின்பன் அறிவித்துள்ளார். மேற்படி கூட்டத்தில் நிலையச் செயற்பாடுகள் மற்றும் கிராம அபிவிருத்தி சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட இருப்பதால், நிலைய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ஐ-288)


ஆருயிர் நண்பனை அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்



Congratulations
நா.நாகேஸ்வரன்
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி)
அகவை அறுபது காணும் ஆருயிர் நண்பா நாகேஸ்வரனே....
ஓய்வு நிலையா உனக்கு - உன் இளமையின்
ஆய்வு நிலையே என்றும் எனக்கு....
சேவைக்கு இங்கு பல பேர் உண்டு
தேவையான சேவைக்கு உன் போல் சிலரே உண்டு

மக்கள் வங்கி குடும்பத்தில் உனக்கு தரமாய் ஓர் இடம் - இனி
என்றுமே அது நிரந்தரமாய் வெற்றிடம்
மக்கள் மனம் அறிந்த வங்கியில
எங்கள் மனம் கவர்ந்த வங்கியாளன் நீ....
தோல்வி நேரங்களில் தோழமையுடன்

தோள்கொடுக்கும் தோழனே....
உன் கடமையில கறை ஒன்றும் இல்லை
எம் நட்பின் கண்ணியத்தில் குறை ஒன்றும் இல்லை

இன்பத்தில் நீ என்னோடு கூட நடந்ததில்லை
துன்பத்தில் நீயின்றி நான் தனியே நடந்ததில்லை
உன் நட்பை தவம் செய்து நான் கேட்கவில்லை
அந்த இறைவன் வரமாகவே கொடுத்திருந்தான்
எம் ஆயுள் உள்ளவரை நம் அன்பு இருக்குமடா....
நம் வாழ்வு முடிந்த பின்னும் நம் நட்பு வாழுமடா...

Best Wishes
அன்பு நண்பன் வி.எஸ். முதலி குடும்பம்
(ஓய்வுநிலை முகாமையாளர் மக்கள் வங்கி)
முருகமூர்த்தி வீதி, சங்கானை.
(66043) (13.15)



சேவை நலன் பாராட்டு



Best Wishes
திரு. நாகதீபன் நாகேஸ்வரன்
(உதவிப் பிராந்திய முகாமையாளர்-மக்கள் வங்கி)
யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயம்

01.09.1978 இல் இருந்து மக்கள் வங்கி மன்னார் கிளையிலும் பின் யாழ்ப்பாணக் கிளைகளிலும் 37 வருடங்களாக வங்கிச் சேவையை ஆற்றியுள்ளார். இவர் 2003 இல் இருந்து 2010 வரையான காலப் பகுதியில் யா/பல்கலைக்கழகக் கிளையில் முகாமையாளராகப் பணியாற்றி எமது வர்த்தக சமூகத்துக்கும் பொது மக்களுக்கும் பல்கலைக் கழகத்துக்கும் அளப்பரும் சேவையாற்றி உள்ளார்.
2010 இல் இருந்து 13.11.2015 இல் ஓய்வு பெறும் வரை உதவிப் பிராந்திய முகாமையாளராக மக்கள் வங்கி யா/பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றியுள்ளார்.

இவர் தம் சேவைக்காலத்தில் அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும், தன்னலம் கருதாது உயர்ந்த சேவையை எமது பிரதேச மக்களுக்கு ஆற்றியுள்ளார்.
14.11.2015 அன்று தனது 60ஆவது பிறந்தநாளை கொண்டாடும் மணிவிழா நாயகனை வாழ்த்துவதுடன், அவரது கடந்த கால நீண்ட வங்கிச் சேவையை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.
அத்துடன் அவரது ஓய்வுகாலம் அவர்தம் குடும்பத்துடனும் அவர் சார்ந்த சமூகத்துடனும் சிறப்பானதாகவும் மகிழ்வானதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :- திருநெல்வேலி வர்த்தகர்கள்
✸ நடராசா & கோ. ✸ குறிஞ்சி பாமசி ✸ செல்வா எலக்ரிக்கல்
✸ ஏசியன் ரெக்ஸ்ரைல் ✸ நியூ கரன் பன்சி ✸ ஹரன் புடவையகம்
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.

# வருடாந்த பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.14
கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் வி.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக யாழ் வலயக் கோட்டக் கல்வி அதிகாரி பொ.அருணகிரிநாதன் , கௌரவ விருந்தினராக சட்டத்தரணி இ.ஞானலோஜினி ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-ரி4)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் J/95 பிரிவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி கஜேந்தினி ராகுலன் அவர்களின் அன்புத் தந்தை

**சந்தானம் நாகையா**

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
நல்லூர். (F/20046)(11.15)

நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

# அடிக்கல் நடும் நிகழ்வு

சாவகச்சேரி,நவ.14
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவுக்கான மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச் சினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, வவுனியா பொது வைத்தியசாலை ஆகியவற்றில் தலா 200 மில்லியன் ரூபா செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டட நிர்மாணத்துக்கான கேள்விகள் கோரப்பட்டு ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. கட்டடம் நிர்மாணிப்பதற்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெறுமெனவும், இந்த நிகழ் வில் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)


# வீதி விபத்துக்களைத் தடுக்க விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.14
வட மாகாணத்தில் முகாமைத்துவத் துறையில் கடமையாற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்குப் போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்வுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம் பெறவுள்ளதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதனும், வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனும் கலந்து கொள்வர். அத்துடன் இந்த நிகழ்வின் வளவாளர்களாக போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவிருந்து ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் த.பேரின்பநாயகமும், வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் எப்.ஜோன்சனும், வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஓய்வு நிலை உதவி ஆணையாளர் ஆர்.பத்மநாதனும் கலந்துகொள்வர். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்பான மீள் பார்வையை ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் சு.மெய்கண்டான் வழங்கவுள்ளதாகவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி2)

## மரண அறிவித்தல்

**கந்தையா தர்மபாலன்**

**(உரிமையாளர் லக்சன் Communication Eachchamoddai)**



காரைநகர், பொன்னாவளை, களபூமியைப் பிறப்பிடமாகவும் இல. 60, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மபாலன் (உரிமையாளர்- லக்சன் Communication Eachchamoddai) 13.11.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் விமலராஜன் (ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற விமலரூபன் மற்றும் விமலாகரன் (லண்டன்), விமல சாந்தன் (Luxon Communication) , விமலக்சன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாரூபி (ஆஸ்திரேலியா), சிவவதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விதுசனின் (ஆஸ்திரேலியா) அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்வராஜா (மாத்தையா) மற்றும் இராஜரட்ணம் (லண்டன்) துரைராசா(லண்டன்) திருமதி ஜெயந்திரன் ஜெயசோதி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது ஈச்சமோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி- சரஸ்வதி
பிள்ளைகள், மருமக்கள்
021 222 7913
விமலசாந்தன்(மகன்) : 077 411 5335

இல. 60, ஈச்சமோட்டைவீதி,
யாழ்ப்பாணம். (66075) (12.15)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
22.06.1982



உதிர்வு
14.11.2010

**அமரர் ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் (றீகன்)**

ஆண்டுகள் ஐந்து அகன்றன எம் ஐயா!
அவசரமாய் உனை அழைத்திட்டான் காலனவன்
மீண்டும் ஒருதடவை எம்வீட்டில் என்றைக்கும்
மிடுக்கான உன் தோற்றம் காண்பதற்குத் துடிக்கின்றோம்
வேண்டுவன எல்லாம் அருளுகின்ற எம் இறைவா
வெந்துயரை எங்களிற்கு ஏன் தந்தாய் சொல் இறைவா
நீண்ட காலமாய் றேகனே உன் நினைவு
நிலைத்து நிற்கும் எங்களுடன் இறைவனுடன் நீ உறைவாய்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்

பிரிவால்
கலங்கித் தவிக்கும்
குடும்பத்தினர்.


(66081) (13.1517)

# சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி,நவ.14
சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தரம் 11 வகுப்புகளில் கற்கும் மாண விகளுக்கு சைவ சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கனடா பெரிய சிவன் ஆலய தர்மகர்த்தாவும், உலக சைவ திருச்சபைத் தலைவருமான கலாநிதி விபுலானந்த அடிகளார் மாணவிகளுக்குச் சமய தீட்சை வழங்குவார். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். மாணவர்கள் சுய வழிபாடு செய்து இறையருள் பெறும் வழக்கத்தை மேம்படுத்தும் வகையிலும், பாட விதானச் செயற்பாடுகளைப் பாதிக்காத வகையிலும் கல்லூரி மாணவர் நாடாளுமன்ற கலாசார சமய விவகார மற்றும் விழுமிய அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் சமய தீட்சை வழங்கப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள எட்டு மாணவர் நாடாளுமன்றங்களின் அமைச்சுக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டங்களில் முதலாவது நிகழ்வாக மாணவிகளுக்கு சைவ சமய தீட்சை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## மரண அறிவித்தல்

**சுந்தரம் தங்கவடிவேல்**



தோற்றம்:- 16.12.1949
மறைவு:- 10.11.2015

யாழ்.வேலணை மேற்கு, சிற்பனையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம் தங்கவடிவேல் 10.11.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - மீனாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற சண்முகராசா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெகதீஸன் (லண்டன்), ஜெகந்தினி (ஜேர்மனி), பிரியந்தினி ( சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நீலாம்பிகை, ஞானசூரியன் (யாழ்ப்பாணம்), ஞானாம்பாள் (கனடா), கருணைநாயகி (கனடா), சண்முகவடிவேல் (கொழும்பு), லோகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அபராஜிதா, லிங்கராஜா, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்ற கணேசபிள்ளை, மனோன்மணி, சாந்தலிங்கம், யோகலிங்கம், பன்னீர்ச் செல்வி, மனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நவின், நந்தனா (லண்டன்), அகன்யா, அனோஜன், அனிற்றா, சாரங்கி, செரோன்(ஜேர்மனி), ஹர்ஷா, ஹரிஷ்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் ஜெயரட்ன மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியை நடைபெற்று பின்னர் பிற்பகல் 4.00 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:- 077 279 5136 (66056)(11.15,17)

தகவல்:
குடும்பத்தினர்.

# தொழில்நுட்ப பீடம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ,14
யாழ். வட்டு இந்துக் கல்லூரியின் தொழில்நுட்ப பீடம் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணனும், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் கலந்துகொள்வர். அத்துடன் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசாவும் கலந்து கொள்ளவுள்ளதுடன். மாணவர்களுக்கான ஆசியுரையை சித்தன்கேணி சிவன் தேவஸ்தான குரு பிரம்மஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் வழங்குவார். (ஐ-ரி5)

# யாழில் இன்று கலை விழா

யாழ்ப்பாணம், நவ.14
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் மற்றும் பார்வையற்றவர்களுக்குச் சேவையாற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து நடத்தும் 'அகக் கண்கள் தந்த ஆனந்த வெற்றிகள்' அரங்கேற்றுக் கலை விழா நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக மூத்த அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத்தும், சிறப்பு விருந்தினராக பா.காண்டீபனும், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை இசை ஆசிரியர் பொன்.சிறி வாமதேவனும் கலந்துகொள்வர். நிகழ்வில் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் தனி நடனம், குழுப்பாடல் யாழ். மற்றும் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் நாட்டார்பாடல் நிகழ்வு, தனி நடனம், வாழ்வின் வழிகாட்டி தாளலயம், வில்லிசை என்பனவும், இனிய வாழ்வு இல்லம் வழங்கும் 'சிரியுங்கள் சிந்தியுங்கள்' எனும் நாடகம் மற் றும் தென்மோடிக்கூத்து, வாழ்வகம் வழங்கும் 'மனு நீதி கண்ட சோழன்' எனும் நாடகம், கருவி நிறுவனம் வழங்கும் 'கால மழை' கவியரங்கம் என்பனவும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற் பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-ரி2)

## மாணவர் நாடாளுமன்றம் தெரிவு

வவுனியா,நவ.14
வவுனியா திருஞானசம்பந்தர் கல்லூரியில் மாணவர் நாடாளுமன்ற தெரிவு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் 66 பேர் போட்டியிட்டு 35 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் இதில் 10 அமைச்சர்களும் 10 பிரதி அமைச்சர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு அத்தாட்சி அலுவலராக கல்லூரியின் அதிபர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ-422)

# அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்க முனைப்புடன் செயற்பட்டவர் சோபித தேரர்

## யாழ் சர்வமத குழுவின் இணைப்பாளர் அருட் தந்தை ஐ.டி.டிக்சன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.14

இன, மத, மொழிகளுக்கு அப்பால் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும் என் பதற்காக முழு முனைப்புடன் செயற்பட்டவர் மறைந்த கோட்டை நாகவிகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரர். இவ்வாறு யாழ். சர்வமத குழுவின் இணைப்பாளர் அருட் தந்தை ஐ.டி.டிக்சன் தெரி வித்துள்ளார்.

கோட்டை நாகவிகாராதிபதி மாதுளு வாவே சோபித தேரரின் ம றைவு தொடர்பில் அனுதாபம் வெளியிட் டுள்ள அருட் தந்தை ஐ.டி.டிக்சன் மேலும் தெரிவித் துள்ளதாவது: – ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர பெரும்பான்மை சிங்களவ ரிடம் யதார்த்த அரசியல் மற்றும் பொருளாதார சூழலை தெளிவு படுத்தி, சிங்கள மக்களின் மனங் களை மாற்றியவர். விசாரணை களின்றி நீண்ட காலம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் களுக்கு அரசு இழப்பீடு கொடுக்க வேண்டும் எனவும் அனைத்து இன மக் களும் ஒன்றிணைந்து வாழ அனை வரும் பாடுபட வேண்டும்– எனவும் சர்வ மதத் தலைவர்களை யாழ்ப் பாணத்தில் சந்தித்த வேளை அவர் தெரிவித்திருந்தார். இன ரீதியிலே பிரிந்திருந்தாலும், நாம் அனை வரும் இலங்கைத் திரு நாட்டின் புதல் வர்கள் என்ற கருத்தை ஆழ மாகக் கொண்டிருந்தவர் இந்தப் பௌத்த துறவி. இவருடைய இழப்பு சிறுபான்மையின மக்களுக்கு பேரிழப்பாகும் எனவும் குறிப்பிட் டுள்ளார். (ஐ-ரி2)

# நாட்டின் நல்லாட்சிக்காகப் பாடுபட்டவர் விகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரர்

## மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா யோசப் தெரிவிப்பு

நல்லாட்சிக்காக மாதுளுவாவே சோபித தேரர் கொண்டு வந்த புத் தொளியின் வழி தவாறது நடப்ப தும், அவர் சுவாசித்த, ஒரு நாடு, ஒரே மக்கள் என்னும் மூச்சை நாங் களும் சுவாசிப்பது தான் அவருக்கு நாம் செய்யக்கூடிய பேருபகார மாகும் என மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன் னையா யோசப் ஆண்டகை தெரி வித்துள்ளார். மறைந்த மாதுளு வாவே சோபித தேரரின் மறைவு தொடர்பில்வெளியிட்டுள்ள அனுதா பச் செய்தியில் அவர் மேலும் தெரி வித்துள்ள தாவது:– 'ஒரு நாடு ஒரு மக்கள்', சிங்கள மக்களுடன் இலங்கை வாழ் தமிழர்கள், முஸ் லிம்கள், பறங்கியர்கள் ஆகிய அனைவரும் இலங்கை நாட்டு மக் களேஎன்றும்–சிங்களம், தமிழ், ஆங் கிலம் ஆகிய மும்மொழிகளும் எமது நாட்டு மொழிகளே என்றும், புத்தொளி ஊட்டியவர் மாதுளு வாவே சோபித தேரர். அது மட்டு மல்லாது, இந்த உண்மை நிறைவு பெற நல்லாட்சியே வழி என்று, சொல்லாலும், செயலாலும் அர்ப் பணிப் போடு உழைத்த பெரியா ரும்,நல்லாட்சியை மலரச் செய்த வருமாவார். இவரது மறைவு நாட் டுக் கும் அனைத்து இன மக்களுக் கும் ஒரு பேரிழப்பாகும். எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-10)

# கிளைக்குழுவுக்கான தெரிவுக் கூட்டம்

காரைநகர்.நவ.14

காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்க 5 ஆம் இலக்க கிளைக் குழுவுக் கான தெரிவுக் கூட்டம் இன்று சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு காரை நகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற உள்ள தாக சங்கப் பொது முகாமை யாளர் அறிவித்துள்ளார். கடந்த மாதம் இடம்பெற்ற கிளைக்குழுத் தெரிவில் 5 ஆம் இலக்க கிளைக் கான தெரிவுக் கூட்டத்துக்குப் போதியளவு உறுப்பினர் கள் கலந்துகொள்ளாத காரணத்தால் அந்தக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டு மீளவும் இன்று நடைபெறவுள்ளது. (ஐ-250)

# வீதி விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி,நவ.14

தீபாவளியை உறவினர் வீடுகளில் கொண்டாடிவிட்டு, வீடு திரும்பிய மூன்று இளைஞர்கள் வீதி விபத்தில் சிக்கிக் காயமடைந்ததையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இரவு கொடிகாமம் பகுதியில் இடம்பெற்றது. இந்த இளைஞர்கள் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த இருவருக்கு கை விரல்கள் பாதிக்கப்பட்டன. ஒருவருக்கு காலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வரணி குடமியனைச் சேர்ந்த இருவரும், மிரு சுவில் தெற்கைச் ஒருவரும் காயம டைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டனர். இதேவேளை வீதியில் சினி மாப் பாடல் பாடிக்கொண்டு சென்ற முதி யவர் மறைந்திருந்து தாக்கப்பட்டார். மிருசுவில் தெற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆழ்வான் கிருஷ்ணமூர்த்தி (வயது- 60 ) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டார். (ஐ-9)

# இறுவட்டு, ஆவணப்படம் வெளியீடு திங்களன்று

கரணவாய், நவ.14

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சைவ ஆலோசனைச் சபையின் "சிவநெறி" இறுவட்டு மற்றும் "கரகம்" ஆவணப்படம் ஆகியவற்றின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. கரவெட்டிப் பிரதேச செயலரும், சைவ ஆலோசனை சபைத் தலைவருமான ச.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனும் கலந்து கொள்வர். இந்த நிகழ்வில் ஆசியுரையை சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான குரு சிவஸ்ரீ நா.சர்வேஸ் வரக் குருக்களும், சிவ நெறி இறுவட்டின் வெளியீட்டுரையை ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர் சிவத் தமிழ் வித்தகர் சிவம காலிங்கமும், ஆவ ணப்பட வெளியீட்டு ரையை யாழ்.பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண் ணனும் நிகழ்த்துவர். குறித்த இறுவட்டில், திருக் கோணேஸ் வரம், நுணாவில் குளக்கட்டு விநாயகர் ஆலயம், கோயிற் கடவைசித்திவிநாயகர் ஆலயம், மேல்மரு வத்தூர் ஆதிபராசக்தி ஆலயம், சக்கலா வத்தை ஞான வைர வர் ஆலயம், கரண வாய் அருள்மிகு வாலாம்பிகா ஸ்ரீ வைத் தீஸ்வரப் பெருமாள் ஆலயம் மற்றும் காரைநகர் மண்பிட்டி புகலி சிவசுப்பிரம ணிய ஆலயம் ஆகி யவற்றின் வரலாறு கள் உள்ளடக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ-108)


**உலக நீரிழிவு தினம்**
**நவம்பர்-14**
**அவதானம்**
அதிகளவு சீனிப் பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.
(65833)(12.15)

**வீடு விற்பனைக்கு / வாடகைக்கு**
அராலி வடக்கு, வட்டுக்கோட்டைப் பகுதியில் அமைதியான சூழலில் முற்றிலும் மறுசீரமைக்கப்பட்ட வீடு விற்பனைக்கு / வாடகைக்கு உண்டு.
(66074)(11,15) தொடர்பு:- 077 248 4360

**விற்பனைக்கு**
வாங்கி 2 மாதம் ஓடிய மின்சார மேட்டார் வண்டி (Orange Colour) தொடர்ந்து 80- 85 Km வரை ஓடக் கூடிய மின்சக்தி வாய்ந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிட்டிய விலை எதிர்பார்க்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:
075 503 2515 ,076 697 2691 (66041)(12.15)

**மணமகள் தேவை**
* 80 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 26 ¾ பாவம் உடைய Dip. in Com AAT முடித்து லண்டன் பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது)
* 78 இல் பிறந்த 7இல் சூரியனும் செவ்வாயும் 25 ½ பாவமுடைய Phd இஞ்சினியர் முடித்து ஜேர்மன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62 இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி. 077 607 0862
(66077)(11,15)

**தொழிநுட்பவியலாளர் தேவை**
வைத்தியசாலைகள், மருத்துவ ஆய்வுகூடங்கள் போன்றவற்றுக்கு மருத்துவ இயந்திரங்கள், சாதனங்கள் வழங்கும் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட கிளைக்கு தொழில்நுட்பவியலாளர் தேவை. விண்ணப்பதாரி இலத்திரனியல் அறிவு உடையவராகவும், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவராகவும், அல்லது சிங்களம் பேச்சுத்திறன் உடையவராகவும், ஓரளவு ஆங்கிலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். 06 மாத கால பயிற்சி வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 248 4360
(66073)(11.15)

சாமியே சரணம் ஐயப்பா!
**மகர ஜோதிப் பெருவிழா**
அருள்மிகு சபரி ஐயப்பன் ஆலயம், சில்வர வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.



மேற்படி ஐயப்பன் ஆலயத்தில் எதிர்வரும் 17.11.2015 அன்று ஐயப்பன் விரதம் அனுஸ்டிக்கும் சாமிமார்களுக்கு குருசாமியினால் மாலை அணிவிக்கும் நிகழ்வு காலை 9.00 மணியளவில் ஆலய விநாயகர் முன்றிலில் நடைபெறும். மாலை அணியும் ஐயப்பன் அடியவர்கள் அத் தருணம் சமுகமளித்து மாலை அணிந்து கொள்ளலாம். மேற்படி ஆலயத்துக்கு நிதி சேகரிக்க வருபவர்களிடம் தகுந்த ஆதாரங்களைப் பார்த்து இயன்ற நிதி உதவி வழங்கவும்.
தொடர்புகளுக்கு:
077 853 0711,077 389 1969
ஆலய பரிபாலன சபையினர்.


**அரசாங்க அறிவித்தல்**
**கேள்வி அறிவித்தல்-2016**

யாழ். மாவட்ட செயலகத்தால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. செயலக சுத்தகரிப்புச் சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்)
2. புகைப்படப்பிரதி இயந்திர பராமரிப்பு
3. உள்ளகத் தொலைபேசித் தொகுதி பராமரிப்பு
4. வாகன சுத்தகரிப்புச் சேவை
5. செயலக பாதுகாப்புச் சேவை

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2015.11.16 ஆம் திகதியிலிருந்து அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன் **''தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்''** எனும் முகவரியிட்ட, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட சேவையினுடைய விவரத்தினைக் குறிப்பிட்டு 2015.11.30 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப 11.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

நா. வேதநாயகன்,
மாவட்ட செயலர், யாழ். மாவட்டம்
(66041) (12.15)

**அரசாங்க அறிவித்தல்**
**மாவட்டசெயலகம்,யாழ்ப்பாணம் வழங்குநரைப் பதிவுசெய்தல்**

யாழ். மாவட்ட செயலகம், யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2016ஆம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருள்கள் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களை பதிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவுசெய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாவட்டசெயலக களஞ்சிய நலன்புரிக்கிளை, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2015.11.16 தொடக்கம் 2015.12.07 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும் (www.jaffna.dist.gov.lk) என்ற இணையத் தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.


பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 08.12.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநரை பதிவுசெய்தல் - 2016'' எனக் குறிப்பிட்டு ''அரசாங்க அதிபர்,களஞ்சிய நலன்புரிக் கிளை, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டசெயலகத்தின் களஞ்சிய நலன்புரிக்கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

வழங்கல்கள், சேவைகள் விவரம்:

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
02. மர, உருக்கு, பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் தளபாடங்கள் வழங்கலும், திருத்தலும்
03. இலத்திரனியல்,மின்சாரப்பொருள்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும் திருத்தலும், பராமரித்தலும்
04. சுத்திகரிப்பு சேவை,சுத்திகரிப்புப் பொருள்கள்
05. கட்டட நிர்மாணம் திருத்த வேலைகள் செய்தல் தீந்தை (பெயின்ற்), ஹாட்வெயர் பொருள்கள் வழங்கல்
06. மோட்டார் வாகனங்கள் திருத்தம், பராமரிப்புசெய்தல், ரயர், ரியூப், பற்றிகள், உதிரிப்பாகங்கள் வழங்கல்
07. குடி நீர், பால்மா, மென்பானம்,உணவு வகைகள்
08. திரைச்சீலைகள், சீருடைகள், மேசை விரிப்புக்கள், நில விரிப்புக்கள்
09. தோல் வகை உற்பத்திப் பொருள்களும் விளையாட்டுப் பொருள்களும்
10. அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள் திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், அடையாள அட்டைகள் செய்தல்
11. நீர் விநியோக பொருத்துக்கான பொருள்கள், நுகர்வுப் பொருள்கள் வழங்கல்
12. மின் இணைப்பு வேலைகள், குழாய் பொருத்துதல்.

நா.வேதநாயகன்
மாவட்ட செயலர், யாழ். மாவட்டம்.
(சி.20048), (13.15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26 . 04 . 1940


மறைவு
26 . 10 . 2014

அமரர்
**நாகமுத்து சின்னராசா**

நிஜமாக நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதுவோ
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து- தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும்- அப்பா
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்துப்
பூஜிப்போம்.

அம்மன் கோயிலடி,
கோப்பாய் மத்தி ,கோப்பாய். (66062) (12.15) **குடும்பத்தினர்.**

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



பிறப்பு
20 . 06 . 1982

இறப்பு
14 . 05 . 2015

**சுந்தரம் சதீஸ்**

ஆறுமாத நினைவு மலர்
கருவறையில் இருந்த காலம் சில
சிறையறையில் இருந்த காலம் அதிகம்
தேசத்தை நேசித்த உனக்கு
நேசத்தில் கிடைத்ததோ சிறைப்பரிசு

விடுதலையாகி வீடு வருவாய்
வீடுதனில் மகிழ்வு தருவாய்
நாளெல்லாம் எண்ணியெண்ணி
நாளெல்லாம் காத்திருந்தோம்

அச்செய்தி வருமென எண்ணி
விழிகள் பூத்திருந்தோம்
விடுதலைச் செய்தி வரவில்லை - நீ
வீழ்ந்து விட்ட செய்திதானே வந்தது

உயிர்போகும் வேளையிலும்
உன்னருகே இருக்கவில்லை
உயிரற்ற உன்னுடலை
கண்ட கண்ணில் தூக்கமில்லை

ஓடியாடி விளையாடிய முற்றமும் - உன்
முகந் தாங்கிய சுற்றமும்
வருடக் கணக்கில் நீயின்றி
வறண்டுபோய்க் கிடந்தது - வருவாய்
நீயென்று வாசல் பார்த்திருந்தது


போய்விட்ட மாதங்கள் ஆறு
போகவில்லை விழிகளில் ஆறு
நீ தமிழ்த் தேசத்தின் பேறு
நிலைக்கும் நிலத்தின் உந்தன் பேறு

சுந்தரம், கண்டிவீதி,
கொடிகாமம்,
யாழ்ப்பாணம்.

அப்பா,அம்மா,
உடன் பிறப்புக்கள்.

(65287)(11,15)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்வநாயகம் ஜெகதீசன்**

அன்புத் தெய்வமே அப்பா
ஆண்டுகள் இரண்டு கடந்தனவே
அப்பா நீங்கள் எம்மைப் பிரிந்து
ஆறாத்துயரில் அழும் எங்களுக்கு
ஆறுதல் சொல்ல
நீங்கள்இல்லை அப்பா
ஆண்டுகள் இரண்டென்ன ஆயிரம்
ஆண்டுகளானாலும்
நாங்கள் வாழும் வரை உங்கள்
நினைவலைகள் எம்மில் வாழும்...

பிறப்பு
18.01.1942

இறப்பு
05.11.2013

உங்களை ஒருபோதும் மறவாமல்
இறைவன் திருவடியில்
இன்பமுடன் சாந்தி பெறப்
பிரார்த்திக்கின்றோம்


எப்போதும் உங்கள் நினைவில்...

4B,2/5,கொலிங்வூட் பிளேஸ்,
வெள்ளவத்தை.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(66842)(11.15)

## அஸ்தி அடக்க வழிபாடு



அமரர் **தம்பிராஜா கிருபானந்தராஜா**

**இடம்:**
புனித சிற்பாசாரி ஆலயம்,
நவஜீவனம், பரந்தன்.

**காலம்:**
14.11.2015
(சனிக்கிழமை)

**நேரம் :-**
பி.ப 2.00 மணி

எமக்காக மண்ணில்
18.02.1949

இறைவனிடம்
07.11.2015

நடைபெறும் வழிபாட்டில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவஜீவன பழைய மாணவர் செயற்பாட்டுக் குழு
இணைப்பாளர்- அருட்தந்தை நா.பிரபாகர்

(63569)(11.15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பண்பிலே தெய்வமாய் பாசத்தின் இருப்பிடமாய் இன்சொல் பேசி
இனிதே பழகி அன்புடனும் நேசத்துடனும் வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட

**பத்மநாதன் சந்திராவின் 31 ஆம் நாள்**
**நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



தோற்றம்
19.08.1955

மறைவு
18.10.2015

யாழ்.இணுவில் கிழக்கு அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்ப விளக்கு திருமதி பத்மநாதன் - சந்திரா நோய்வாய்ப்பட்டு 18.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு சிரமம் பாராது ஓடோடி வந்து எம் துக்க துயரத்தில் பங்கேற்றவர்களுக்கும், தொலைபேசியூடாக அனுதாபம் கூறியவர்களுக்கும், மலர்வளையம் அனுப்பி இரங்கலைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைத்துக் காரியங்களிலும் முன்னின்று நடத்திக் கொடுத்தோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.11.2015) சனிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக் கிருத்திய கிரியைகள் 16.11.2015 திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
கணவர்,மகன்,சகோதரர்கள்,
மைத்துனர்கள், பேறாமக்கள்,
மருமக்கள்.

இணுவில் கிழக்கு,
அங்களப்பாய். (66078)(11,15,17)

# வீதி விளக்குகள் பொருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

வலி. கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் பிரதான வீதிகளில் தேவைப் படும் இடங்களுக்கு வீதி மின்சார விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இந்த வீதி விளக்குகளை விரைவில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட் டுள்ளன. சுமார் நூறுக்கு உட்பட்ட வீதி விளக்குகள் இவ்வாறு பொருத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

வலி. கிழக்கு பிரதேசத்தில் அனேகமான வீதிகள் இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. இந்த இருளைச் சாதகமாகப் பயன்படுத்தி பிரதேசத் திருடர்களின் கைவரிசை தினமும் அதி கரித்துக் காணப்படுகின்றது.

பருத்தித்துறை வீதியில் குறிப் பிடப்பட்ட இடங்கள் இருளில் மூழ்கிக் காணப் படுகின்றன. வீதிகள் யாவும் இருளில் மூழ்குவதால் மக்கள் இரவில் பயணிப் பதற்கு சிரமப்பட்டும் வருகின்றனர். அனேகமான மக்கள் தமது குடிமனை களுக்கு முன்பாக மின்சார விளக்கு களை விசேடமாக அமைத்துள்ளனர். இந்தப் பிரதேசத்தின் வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகள், ஒழுங்கைகள் போன் றவை வீதி விளக்குகள் இன்றிக் காணப் படுகின்றன. (ற-17)

## ஆண்டிறுதிப் பரீட்சைகள்

கரணவாய்,நவ.14

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக் கிடையிலான ஆண்டிறுதி (மூன்றாம் தவணை)ப் பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடை பெறவுள்ளன. இதில் தரம் 6 தொடக்கம் 10 வரையான வகுப்புக்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும், தரம் 1 தொடக்கம் 5 வரை யான வகுப்புக்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் எதிர் வரும் 27 ஆம் திகதி வரையும் இடம் பெறவுள்ளன. பரீட்சைகள் நிறை வடைந்த பின்னர் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெற்று, மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்பட்டு, பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி மூடப்படும். இதே வேளை தரம் 9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப்பரீட்சைகள் எதிர் வரும்19 ஆம்திகதி முதல்நடைபெற ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-108)

## வாசிப்பு மாதப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.14

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மாண வர்கள் மத்தியில் பல போட்டிகளை நடத்த வுள்ளது. பளை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக் கிடையில் புலோப்பளை பொது நூலகத்தில் எதிர்வரும் திங்கள், செவ் வாய் ஆகிய இரு தினங்களும் நடைபெற வுள்ள இந்தப் போட்டிகளில் வகுப்பு 1 தொடக்கம் வகுப்பு 13 வரையான மாண வர்கள் பங்குபற்றுவர். கடந்த மாதம் 26 ஆம் திகதி வகுப்புக்கள் 2,3,4, 10, 11 மாணவர்களுக்கான போட்டிகள் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-1

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,நவ.14

வேலணைப் பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை சட்ட ஆவணங்கள் தொடர் பான நடமாடும் சேவை நடைபெற வுள்ளது. இந்த நடமாடும் சேவையில் பிறப்பு , இறப்பு, திருமண சான்றிதழ்கள் மற் றும் தேசிய அடையாள அட்டைகள் தொடர்பான தேவையுடையவர்கள் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ் சுளாதேவி சதீசன் அறிவித்துள்ளார். (ஐ-ரி6)



# இரவுப் பார்வையை பெற உதவும் கிரபீன்

நைட் வின் எனப்படும் இரவு நேரங்களிலும் காட்சிகளை பார்வையிடக்கூடிய பல தொழில்நுட்பங்கள் தற்போது காணப்படுகின்றன. எனினும் தற்போது கிரபீன் எனப்படும் காபன் மூலக்கூறின் புறதிருப்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் வில்லைகள் (Lens) அதிக வினைத்திறன் உடையதாகக் காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனைப் பயன்படுத்தி இரவு நேரங்களில் வாகனங்களை இலகுவாகச் செலுத்திச் செல்ல முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கிரபீன் ஆனது மிகவும் சிறியதாகவும், பாரம் குறைந்ததாகவும், மீள்தன்மை உடையதாகவும் காணப்படுவதுடன், வலிமை மிக்கதாகவும் காணப்படக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

# மர நடுகை மாதம்

## மரங்களை வளர்த்து சூழலை பாதுகாப்போம்

*"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப்போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்."* தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

மழையில்லை, முகில் கூட்டங்கள் ஒன்றிணைந்து கருங்கூடு கட்டவும் இல்லை, தாங்க முடியாத வெப்பம், புழுக்கத்தால் வீட்டை விட்டு வெளியே மரநிழல்களை தேடி ஓடுகின்றோம். இறுதியில் வானமே தஞ்சமாகிறது. மழை வா..... வா.... என்று வானத்தைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டாலும் மழை பொழிவதாக காணவில்லை. இன்று நாளுக்கு நாள் ஏராளமான மரங்கள், காடுகள் அழிக்கப்படுகின்றன. விஞ்ஞானத்தின் விந்தைகள் என்று பலவிதமான நச்சு வாயுக்கள் சூழலில் தாக்கம் செலுத்துகின்றன. போதாக்குறைக்கு வீடு கட்டவென்று வீட்டிலுள்ள மரங்கள் அனைத்தையும் வெட்டுகின்றோம். சரி வீட்டை கட்டுவதற்கு மரத்தை வெட்டினால் அதற்கு பதிலாக இன்னொரு மரத்தை நட்டு வையுங்கள் ஆனால் இதற்கு பண்பட்ட மனி தர்கள் இல்லை நாங்கள். அசுத்தக்காற்றை குடித்து வெப்பத்தில் வாழுவோம் என்பது தான் எங்கள் எல்லோரது நடத்தையுமாய் உள்ளது. இது சூழலுக்கு நாம் செய்யும் துரோகமாகும். ஆகவே வீடு ஒன்றை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளீர்களாயின் சுற்றுப்புறச் சூழலுக்கு பயன்தரக்கூடிய மரங்களை அழிப்பதிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள். கட்டடம் அமையப்போகும் இடத்துக்கு அருகில் மரம் இருந்தால் கட்டடம் பாதுகாப்பதற்குரிய காப்பு தொழில்நுட்பங்கள் இன்று வளர்ச்சியடைந்து விட்டன. அவ்வாறான முறைகளைக் கையாண்டு தாவரங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். மரங்களைப் பாதுகாத்தல் என்பது நீங்கள் இந்தச் சூழலுக்குச் செய்யும் வரப்பிரசாதமாகும். மரங்களை வளருங்கள் வாழ விடுங்கள். அப்போது தான் எமக்கு நன்மைபயக்கும் உயிரினங்கள் வாழும். இல்லையேல் அவை அழிந்துவிடும். நாங்களும் அழிந்துவிடுவோம்.

# பழைய இயங்குதளங்களுக்கான சேவையை நிறுத்தும் கூகுள் குரோம்

உலகிலேயே அதிகளவானவர்களால் பயன்படுத்தப்பட்டுவரும் கூகுளின் குரோம், இணைய உலாவிக்கான சேவ்யானது பழைய இயங்குதளங்களுக்கு வழங்கப்படுவது நிறுத்தப்படவுள்ளது. இதற்கமைவாக எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு முதல் விண்டோஸ் எக்ஸ்.பி (Windows XP, Vista) , \Â (Mac ) 10.6, 10.7 மற்றும் 10.8 ஆகிய இயங்குதளங்களுக்கான சேவை நிறுத்தப்படவுள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது புதிய இயங்குதளமான விண்டோஸ் 10 ஐ அறிமுகம் செய்த பின்னர் அதிகளவான கணினிகள் உட்பட மொபைல் சாதனங்களில் அந்த இயங்குதளம் பயன்பாட்டில் வந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இனிவரும் காலங்களில் புதிய இயங்குதளங்கள் ஊடான சேவையை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



# நம்பிக்கை ஒளி நிறுவனத்தால் கல்வி ஊக்குவிப்பு உதவிகள்

## 250 மாணவர்களுக்குப் புத்தகங்களும், பாதணிகளும் வழங்கி வைப்பு



மன்னார்,நவ.14
லண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் மன்னார் மடுக்கரை அரசினர்தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 250 மாணவர்களுக்கு 4 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய்பெறுமதியில்பாதணிகளும் புத்தகப் பைகளும் இலவசமாக நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. போரால் பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமமான மடுக்கரைக் கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும், மடுக்கரை அரசினர்தமிழ்க்கலவன்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. லண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் இணை நிறுவனமாக இலங்கையில் செயற்பட்டுவரும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக 250 புத்தகப்பைகளும் 250 பாதணிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் வன்னி நாடளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சேவையாளர்களாகிய ப. சுபாஸ்கரன், சி.சிவகாந்தன், கோ. ரூபகாந் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டு மடுக்கரைப் பகுதியில் வறுமையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவித்தனர்.

(ஐ-56)

# வலிகாமம் கல்வி வலயத்தால் சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.14
வலிகாமம் கல்வி வலயத்தால் வருடாந்த சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இரண்டாவது தடவையாக நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகவடக்குமாகாணமுதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுதுறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். இந்தநிகழ்வில்கல்விப்புலத்துக்கு காத்திரமான சேவையாற்றியவர்கள் எனும் அடிப்டையில் இருபது பாடசாலைகள், முப்பது பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் 98 ஆசிரியர்கள் நிகழ்வில் பதக்கம், சான்றிதழ், நினைவுக் கேடயம் வழங்கி கொளரவிக்கப்படவுள்ளனர்.


# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.14
சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் சகல உயர்தரபிரிவு மாணவர்களுக்கிடையே, மனித உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் தொடர்பான போட்டி நடத்தப்படவுள்ளது.
இந்தப் போட்டியில் பாடத்துறை வேறுபாடின்றி சகல உயர்தரப் பிரிவு மாணவர்களும் பங்குபற்ற முடியும். போட்டிகளில் பங்குபற்றுவதற்கான அனுமதி இலவசம் என்பதுடன் போட்டிகள் அந்தந்தக் கோட்டங்களில் பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் விண்ணப்ப படிவங்களை 'மனித உரிமை தினப்போட்டி. வலயக்கல்வி அலுவலகம். வலிகாமம். மருதனார் மடம் சுன்னாகம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளை ஒதுக்க வேண்டும்

## இங்கிலாந்து நாடாளுமன்றில் மோடி



லண்டன்,நவ.14
பயங்கரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒருமித்த கருத்துடன் செயற்பட வேண்டியது அவசியம். பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்று, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
மூன்று நாள் அரச முறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, தனது பயணத்தின் முதல் நாளில் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றினார். இதன்போது, 'பயங்கரவாதமும், தீவிரவாதமும் இன்று உலக நாடுகளுக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளன. பயங்கரவாதக் குழுக்களை வேறுபடுத்திப் பார்ப்பதோ, இதன் அடிப்படையில் நாடுகளுக்கு இடையே பாகுபாடு ஏற்படுத்துவதோ கூடாது. பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளை, உலக நாடுகள் ஒதுக்கி வைக்க வேண்டும். மேலும், பயங்கரவாதத்தை வேரறுக்க, உலக நாடுகள் ஒருமித்த கருத்துடன் செயற்படுவதும், பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படுவதும் நாடுகளுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டியதும் அவசியமாகும். சர்வதேச அளவில் பெரும் அச்சுறுத்தலாக உள்ள பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பாக, உலக நாடுகள் ஒருங்கிணைந்த வழிமுறையை, ஐ.நாவில் விரைவில் கொண்டுவர வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை–இந்தியா–இங்கிலாந்து இடையே சிவில் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றும் கையெழுத்தாகியுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஐ.நா. பாதுகாப்பு சபையில், நிரந்தர உறுப்பினர் பதவி தொடர்பாக இந்தியாவுக்கு ஆதரவளிக்க கமரூன் ஒப்புக்கொண்டுள்ளார். இந்தியா புத்தர் பிறந்த தேசம். இங்கு சகிப்பின்மை என்ற பேச் சுக்கே இடமில்லை. மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கோத்ரா கலவரத்தின்போதும், அதற்கு பின்னரும், எப்போதும் இங்கிலாந் துக்கு வர எனக்கு அனுமதி மறுக் கப்பட்டது இல்லை. எமது நாடுகள் பேச்சுரிமை கொண்ட நாடுகள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)



பொலிவியாவில் மண்டையோட்டுத் திருவிழா நேற்று முன்தினம் மிகச் சிறப்பாக ந
இறந்தவர்களின் மண்டையோடுகளை வைத்து, பூசை செய்தால் அ
ஆசிர்வாதமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், மத ரீதியாக இந்த விழா நடத்
விழா அன்று சுத்தம் செய்யப்பட்ட மண்டையோட்டை மலர்களால் அலங்காரம் செ
சிலர் தொப்பி, கண்ணாடி அணிவிக்கிறார்கள். வீட்டில் இருந்து அலங்காரத்து
செல்லப்படும் மண்டையோடுகள் அனைத்தும் தேவாலயங்களில் வை
பிரார்த்தனைகள் நடைபெறும். அவரவர் விரும்பியதை வேண்டிக்கொள்வா
முடிந்த பிறகு, மண்டையோடுகளை எவருக்கும் தெரியாமல், இரகசியமாகக் ச
வைத்து விடுகிறார்கள்.

# ஆறு மாதங்களின் பின்னர் அமைச்சரவை பதவியேற்பு

## நைஜீரியா ஜனாதிபதி நடவடிக்கை




அபுஜா,நவ.14
நைஜீரியாவின் 36 அமைச்சர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை ஒன்று பதவியேற்றுள்ளது. இந்த வருடம் மார்ச் 28 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற முஹம்மது புஹாரி, அந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாக கடந்த மே மாதம் பதவியேற்றார். எனினும், புதிய அமைச்சரவையை நியமிப்பதில் அவர், தாமதத்தை வெளிப்படுத்தி வந்தார். இந்த நிலையிலேயே, 6 மாதங்களின் பின்னர், புதிய அமைச்சரவையை அவர் நியமித்துள்ளார். இந்த அமைச்சரவை, இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதியான குட்லக் ஜொனதனின் அமைச்சரவையில் காணப்பட்ட 42 அமைச்சர்களோடு ஒப்பிடும்போது, சிறிய அமைச்சரவையாகும். ஆபிரிக்காவின் மிகப்பெரிய பொருளாதாரமாக உள்ள நைஜீரியாவின் பிரதான வருமானத்துறையான எண்ணெயின் பிரதான பொறுப்பாளராக, புஹாரி செயற்படவுள்ளார். பெற்றோலிய அமைச்சானது, அவரின் கீழேயே செயற்படவுள்ளது. எனினும், கனிஷ்ட எண்ணெய் அமைச்சரொருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களில் பெரும்பாலானோர், மூத்த அரசியல்வாதிகள் என்பதோடு, புஹாரியின் தேர்தல் பரப்புகளில் முக்கிய பங்கை வகித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# கர்ப்பிணிகள் இறப்பு குறைகிறது

## ஐ.நா. ஆய்வில் தகவல்

ஜெனீவா,நவ.14
கர்ப்பம் தொடர்பான காரணங்களால் பெண்கள் இறக்கும் எண்ணிக்கை கடந்த 1990 இலிருந்து ஏறக்குறைய பாதியாகக் குறைந்துவிட்டது என்று ஐ.நா.வும் உலக வங்கியும் கூறுகின்றன. ஆனால் ஐநாவின் புத்தாயிர வளர்ச்சி இலக்குகளின் ஒரு பகுதியாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை ஒன்பது நாடுகள் மட்டுமே எட்டியுள்ளன என்று இந்த இரு அமைப்புகளால் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு கூறுகிறது. இந்த ஆண்டு இறுதியில்,உலகமெங்கும் கர்ப்பகால இறப்புகள் விகிதம் 1990 இலிருந்த எண்ணிக்கையிலிருந்து சுமார் 44 சதவீத அளவில் குறைந்திருக்கும் என்று இந்த ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. புத்தாயிர வளர்ச்சி இலக்குகளின் ஒரு பகுதியாக இந்தக் கர்ப்பகால இறப்பு விகிதங்களை 75 சதவீத அளவில் குறைக்க ஐ.நா. மன்ற உறுப்பு நாடுகள் உறுதியளித்திருந்தன. ஆனால், அந்த இலக்கை ஒன்பது நாடுகளே எட்டியுள்ளன. வேறு 13 நாடுகளில் நிலைமை மோசமாகியுள்ளது. 39 நாடுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன.
அமெரிக்காவில் பெண்கள் கர்ப்பகாலத்தில் இறக்கும் விகிதம்கனடாவைவிட இரண்டு மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது. சகாராவுக்குத் தெற்கே உள்ள ஆபிரிக்கநாடுகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டாலும், உலகெங்கும் நடக்கும் மூன்று இறப்புகளில் இரண்டு அந்தப் பகுதியில்தான் நடக்கின்றன. நல்ல தரமான சுகாதாரச் சேவைகள் வழங்கப்பட்டால் மட்டுமே இந்த இலக்கை எட்ட முடியும் என்று ஐ.நா. கூறுகிறது. (ஐ)



# மன்னிப்புக் கோரியது அப்பிள் நிறுவனம்

மெல்போர்ன், நவ.14
ஆபிரிக்காவைச் சேர்ந்த கறுப்பின மாணவர்கள் அவமதிக்கப்பட்ட வீடியோ பேஸ்புக்கில் வெளியிடப்பட்டதை அடுத்து அப்பிள் நிறுவனம் அந்தச் சிறுவர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளது. ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் உள்ள மேரிபைர்னாங் பகுதியில் உள்ள அப்பிள் நிறுவனத்தின் கடை ஒன்றுக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த கறுப்பின மாணவர்கள் 6 பேர் சென்றுள்ளனர். அப்போது, கறுப்பின மாணவர்களை நிறுவனத்தின் ஊழியர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஏன் என்று கேட்டதற்கு 'நீங்கள் உள்ளே இருந்தால், மற்றவர்களுக்கு நீங்கள் ஏதாவது திருடி விடுவீர்களோ என்ற அச்சம் இருக்கும்' என்று ஊழியர்கள் கூறியுள்ளனர். இதனையடுத்து இருதரப் பினருக்கும் இடையே கடும் வாக்குவா தம் நடைபெற்றது. பின்னர் கறுப்பின மாணவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அவமதிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவர்', இந்தச் சம்பவத்தை வீடியோ எடுத்து அதனைப் பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளார். இந்த வீடியோவை லட்சக்கணக்கானோர் பார்வையிட்டனர். இதையடுத்து, அந்த வீடியோ காட்டுத் தீபோல் இணையத்தளத்தில் பரவி, கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், ஆஸ்திரேலியாவில் தங்களது விற்பனையகத்திலிருந்து 6 கறுப்பின இளைஞர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியதற்கு அப்பிள் நிறுவனம் மன்னிப்புக் கோரியது. (ரி4)

# சத்திரசிகிச்சைக்கூடாக நிறை குறைக்க முயற்சி

ஒப்ரிகோன்,நவ.14
உலகிலேயே அதிகூடிய நிறையுடையவர் என வர்ணிக்கப்படும் 960 இறாத்தல் நிறையுடைய நபருக்கு அண்மையில் நிறையைக் குறைப்பதற்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மெக்ஸிக்கோ, ஒப்ரிகோன் நகரில் வசித்து வருபவரான என்டிரிஸ் மொரினோ என்ற 37 வயதுடைய நபர், அசுர வேகத்தில் வளர்ந்து, தனது உடல் நிறைகாரணமாகப் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றார். இதனை கருத்திற்கொண்டு அவருக்கு உடல் நிறையைக் குறைப்பதற்கான சிகிச்சையை மேற்கொள்வதற்கு மருத்தவர்கள் முன்வந்தனர். அதிக நிறை காரணமாக இயல்பாக நடக்கும் ஆற்றலை இழந்த அவர், தனக்கெனவே தயாரிக்கப்பட்ட ஸ்டெச்சரிலே வலம் வருகிறார். இந்த நிலையில் இவருக்கு, 7 மருத்துவர்கள் இணைந்து உடல் நிறைக்குறைப்பு சத்திரசிகிச்சையை மேற்கொண்டுள்ளனர். இவருக்கு. மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையானது உண்மையில் சவால் மிக்கது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-ரி4)











கச் சிறப்பாக நடைபெற்றது.
செய்தால் அதிர்ஷ்டமும்
ந்த விழா நடத்தப்படுகிறது.
அலங்காரம் செய்கிறார்கள்.
அலங்காரத்துடன் எடுத்துச்
யங்களில் வைக்கப்பட்டு
ண்டிக்கொள்வார்கள். விழா
ரகசியமாகக் கல்லறையில்
(ஐ)

# அமெரிக்காவை விட சிறந்த நண்பர்கள் எமக்கு இல்லை

## இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு

வொஷிங்டன், நவ.14

அமெரிக்காவுடன் கொண்டுள்ள நட்பை விடவும், அதிகமான நட்பு கொண்ட நாடுகள் எமக்கு இல்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



தற்பொழுது அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நெதன்யாகு, கடந்த திங்கட்கிழமை அந்த நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்தித்தார். அதன் பின்னர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார். பின்னர் அவர் கடந்த செவ்வாய்க் கிழமை வொஷிங்டனில் இடம்பெற்ற வட அமெரிக்க யூதர்களின் நிகழ்வொன்றில் உரையாற்றும்பொழுதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:- ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் எமக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வித்தியாசமான கருத்து நிலவுகின்றது. எனினும் குறித்த ஒப்பந்தம் இணக்கமாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாம் ஒன்றிணைந்து வேலைகளை செய்ய வேண்டியுள்ளது.

நாம் மிகவும் அதிகமான உறவை வைத்துள்ளது அமெரிக்காவுடன்தான். எமக்கு சகல விதத்திலும் அமெரிக்காவை விட அதிகமான நட்பு கொண்டவர்கள் இல்லை - என்றார். (ற)

# ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

பெய்ருட், நவ.14

சிரியா, ஈராக் நாடுகளைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது, சிரிய இராணுவ வீரர்கள் நடத்திய தாக்குதலில் பெரும்பாலான ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஐ.எஸ். அமைப்பைக் கூண்டோடு ஒழிக்க இரு நாட்டு இராணுவமும் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இந்த நிலையில், ஈராக்கை ஒட்டி சிரியாவின் கிழக்கு எல்லையோரம் அமைந்த நகரான டெய்ர் எஸ்ரோர் நகர விமான தளத்தை நோக்கி கடந்த சில நாள்களாக தீவிரவாதிகள் வேகமாக முன்னேறி வந்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு இராணுவம் குவிக்கப்பட்டது, இந்த நிலையில் நேற்று முன்தினம் 100 இற்கும் அதிகமான தீவிரவாதிகள் டெய்ர் எஸ்ரேர் விமானதளத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினர். அவர்கள், நவீன ரக ஆயுதங்களுடன் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டு, அங்கிருந்த இராணுவ வீரர்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். அவர்களுக்கு இராணுவத்தினர் பதிலடி கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து கடும் சண்டைக்கு பின், விமானதளத்தை தீவிரவாதிகள் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சியை இராணுவம் வெற்றிகரமாக முறியடித்தது. இந்தச் சம்பவம் உட்பட டெய்ர் எஸ்ரேர் நகரின் பிற பகுதிகளில் நடந்த சண்டையில் மொத்தம் 100 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் சுமார் 70 பேர் ஐ.எஸ். தீவிரவாதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)



## தற்கொலைப்படைத் தாக்குதல் 41 பேர் சாவு

பெய்ருட்,நவ.14


லெபனான் நாட்டின் தலைநகரான பெய்ருட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய இரட்டைத் தற்கொலைப் படைத் தாக்குதலில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. சிரியாவில் ஜனாதிபதி பர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு



எதிராக கடந்த 2 ஆண்டுகளாக மக்கள் போராடி வருகின்றனர். அவர்களில் சிலர் ஆயுதமேந்தியும் போர் நடத்தி வருகின்றனர். இந்தப் போரில் இதுவரை சுமார் 70 ஆயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. மனித உரிமை ஆணையகம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், லெபனான் தலைநகரான பெய்ருட்டை ஒட்டியுள்ள செஞ்சிலுவை சங்கத்தின் அகதிகள் முகாம் உள்ள பவ்ரஜ்-அல்-பராஜ்னே என்ற இடத்தில் நேற்று முன்தினம் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிவந்த தீவிரவாதி ஒருவர் வெடித்து சிதறியதில் 27 பேரும், இந்தத் தாக்குதல் நடைபெற்ற அடுத்த 5 நிமிடத்தில் அங்கிருந்து சுமார் 150 மீற்றர் தொலைவில் மற்றொரு தற்கொலைத் தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்ததில் 14 பேரும் உயிரிழந்துள்ளனர். மேலும் 40 பேர் காயமடைந்துள்ளனர். (ஐ)

# ஈழத்துப் பாடசாலைக் கல்வி முறையில் தற்போது சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்கள்

பா. தனபாலன்
(நிபுணத்துவ ஆலோசகர்)
சமய விழுமியப்பிரிவு,
கல்வியமைச்சு, பத்தரமுல்ல.



ஈழத்துக் கல்விமுறை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. புராதன தேசியக் கல்வி முறையானது சமயம் ஒழுக்கவியல் தொடர்பான கல்வி, கைத்திறன்கலைகள், கட்டடக்கலை, நீர்ப்பாசனத்துறை, வைத்தியம் என காலத்துக்குப் பொருத்தமான பொருளாதார, சமூக, கலை, கலாசாரத் தேவைகளை நிறைவேற்றுவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குடியேற்ற ஆட்சிக் காலத்தில் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் மேலைத்தேய சம்பிரதாயங்களுடன் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் அடிப்படை நோக்காகக் கொண்ட பாடசாலை கல்வி முறைமையை நடை முறைப்படுத்தினர். சுதேச மக்களுடைய மத எழுச்சிகள், சுதந்திர எழுச்சிகள் மற்றும் சுதந்திரத்துக்குப் பின்னர் மேலைத்தேய கல்வியின் சாயலுடன் பாடசாலைக் கல்வி முறை படிப்படியான மாற்றங்களுடன் பின்பற்றப்பட்டு வந்தன.
பல படிமுறை மாற்றங்களுக்கும், கல்விச் சட்டங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் வழியாக இலங்கையின் பாடசாலைக் கல்விமுறை பல விருத்திகளுக்கு உட்பட்டு வந்தது. 1992 தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப தேசிய இலக்குகள், அவற்றை அடைவதற்கான தேர்ச்சிகள் இயம்பப்பட்டு 2003 இல் புதிய கல்விச் சீர்திருத்தம் பாடசாலைக் கல்வி முறையில் நடைமுறைக்கு வந்தது. இந்த வகையில் சைவசமய பாடத்தை தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், பல்கலைக் கழகங்களில் கற்ற ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றார்கள். இவர்கள் இந்தப் பாடத்தைக் கற்பிக்க பல இடர்களை எதிர்நோக்குவதாக உள்ள எண்ணக்கருவை ஆய்வு மூலம் உறுதிப்படுத்த இந்தச் சந்தர்ப்பம் பயன்படுத்தப்படுகின்றது.

**நோக்கங்கள்**

1. தற்போது ஈழத்துப் பாடசாலைக் கல்வி முறையில் சைவசமய பாட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்களைக் கண்டறிதல்.
2. சைவசமய பாட கலைத்திட்டத்தை முறைமையாகப் பாடசாலைகளில் நடைமுறைத் தடையாக உள்ள காரணிகளை இனங்காணல்.
3. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்களைத் தீர்ப்பதற்கான தந்திரோபாயங்களும், தீர்வுகளையும் கண்டறிதல்.
4. நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வுத்திட்டங்களை எடுத்தியம்புதல், சைவ சமய பாட ஆசிரியர்களை வலுவூட்டல்.
5. இந்தத் துறை சார்ந்த விழிப்புணர்ச்சிக்கும் தொடர் ஆய்வுகளுக்கும் வழிகாட்டல்.

ஈழத்தில் வாழும் சைவத் தமிழ் மக்கள் தமது சமயத்தைச் சரியாகப் பின்பற்ற தம் சிறார்களான எதிர்காலச் சந்ததியினருக்குச் சரியான வழிகாட்டல்களை வீட்டில் ஏற்படுத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து பாடசாலையில் சைவசமயப் பாடம் கற்றலுடன் சமய வாழ்வை வாழக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் ஒழுக்க விழுமியமுள்ள நல்ல பிரசைகளாக இவர்களை ஆக்கமுடியும். இந்த நிலையில் தற்போதைய காலத்தில் பல பிரச்சினைகளும் இடையூறுகளும் வந்துவிட்டன. வீட்டில் சைவசமய அனுட்டான வாழ்வை வாழ பல இடையூறுகள் காணப்படுகின்றன. பாடசாலையிலும் சைவசமய பாடத்தினூடாக சமய விழுமியங்களை விதைக்க பல தடைகள் உள்ளன. ஏனைய சமய பாடசாலைகள் தத்தம் சமயங்களுக்கே முன்னுரிமை வழங்கும்போது சைவசமயம் கற்பிக்கும் பாடசாலைகளில் இதற்கான ஏதுக்கள் தொடர்ச்சியாகக் குறைந்து வருகின்றன. இதற்கான காரணங்களை அறிதல் இந்த ஆய்வின் தேவையை உறுதிப்படுத்துகின்றது. மேலும், சைவசமய பாட ஆசிரியர்களின் பிரச்சினைகளை இனம் கண்டு அவர்களை வலுவூட்ட வேண்டியுள்ளது. அதற்கு இந்த ஆய்வு பல பரிந்துரைகளை வழங்கும்.

**ஆய்வு வினாக்கள்**

1. ஈழத்துப் பாடசாலை முறைமையில் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர் நிலை எவ்வாறு உள்ளது?
2. இந்தப் பாடத்தை ஆசிரியர்கள் கற்பிக்க எதிர்நோக்கும் இடர்கள் எவையாகவுள்ளன?
3. சைவசமய பாடத்தைக் கற்பிக்க எதிர் நோக்கும் இடர்களை எவ்வாறு களையலாம்?

என்ற வகையில் பின்வரும் கருதுகோள்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. சைவசமய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பல இடர்களை எதிர்நோக்குகின்றார்கள்.
2. சைவசமய பாட ஆசிரியர்கள் வலுவூட்டப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

சைவசமய பாட விருத்திக்கு பல விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

> **பாடசாலையிலும் சைவசமய பாடத்தினூடாக சமய விழுமியங்களை விதைக்க பல தடைகள் உள்ளன. ஏனைய சமய பாடசாலைகள் தத்தம் சமயங்களுக்கே முன்னுரிமை வழங்கும்போது சைவசமயம் கற்பிக்கும் பாடசாலைகளில் இதற்கான ஏதுக்கள் தொடர்ச்சியாகக் குறைந்து வருகின்றன.**

**தரவு சேகரித்தலும் பகுப்பாய்வும்**

இந்த விடயம் தொடர்பாக கடந்த 2014, 2015 ஆம் ஆண்டுகளில் தேசிய கல்வி நிறுவக வழிகாட்டலில் அந்தந்த மாகாணக் கல்வியமைச்சின் அனுசரணையுடன் புதிய சைவசமய பாட கலைத்திட்ட நடைமுறை தொடர்பான செயலமர்வு மூன்று நாள்கள் நடைபெற்றன. அதில் பங்குபற்றிய சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்களிடம் வினாக்கொத்து, நேர்காணல், குவியமையக் கலந்துரையாடல் மூலம் ஆய்வுத்தரவைகள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு பல்வேறு ஆவணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ஊடாகவும் தரவு கள் சேகரிக்கப்பட்டன. இவை நூற்றுவீத அடிப் படையிலும் பண்பளவிலும் பகுப் பாய்வு செய்யப்பட்டு கண்டறிதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**கண்டறிதல்கள்**

1. சைவசமய பாடத்தை முழுமையாகக் கற்பிக்க பாடவேளை போதுமானதாக இல்லை. மேற்படி பாடத்தை பாடசாலை நேர சூசியில் கடைசிப் பாடமாக நிர்ணயித்தல்.
2. மாணவர்களுக்குக் கற்பிக்க ஏனைய பாடங்களுக்கு வழங்கப்படும் வளங்கள், வசதிகள், நிதி ஒதுக்கீடுகள், பண்புத்தர உள்ளீடுகள் பாடசாலைகளில் சைவசமய பாடத்துக்கு ஒதுக்காமை (பாடசாலையில் மட்டுமல்ல வலயம், மாகாணம், தேசிய ரீதியிலும்) யாரும் இந்தப் பாடத்தைக் கற்பிக்கலாம் என்ற தவறான அணுகுமுறை.
3. சைவசமய பாடம் கற்பிக்க இந்தப் பாடத்தில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதுமான அளவில் இல்லாமை மற்றும் வலயம், மாகாணத்தில் இந்தப் பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பா ளர்கள் தேவைக்கேற்ப நியமிக்கப்படாமை, அலட்சியப்போக்கு.
4. இதனால்பொருத்தமான நேரத்தில் செயலமர்வுகள் நடத்தாமை.
5. தேவாரப் பதிகங்களை முறையாகப் பண்ணுடன் பாடும் பயிற்சி சமயபாட ஆசிரியர்களுக்குப் போதாமையால் மாணவர்களுக்குக் கற்பிக்க இடர்ப்படுகின்றனர்.
6. சைவசமயப் பாடத்துக்கென பொருத்தமான வகுப்புஅல்லதுவளநிலையம் காணப்படாமை, நவீன கற்பித்தல் சாதனங்கள் கிடைக்காமை.
7. பாடசாலையிலும், வலயம், மாகாணம் தேசிய மட்டத்திலும் சைவசமய பாட ஆசிரியர்களுக்கு முன் னுரிமை வழங்கப்படுவதில்லை. மதிப் பளிப்பதில்லை. இது இந்தப் பாடத்தைக் கற்பிக்க உளரீதியான தடைகளை, தாக் கங்களை ஏற்படுத்துகின்றன.
8. சமயம் சார் விழுமிய செயற்பாடுகள், இணைப்பாடவிதானநிகழ்வுகள்தலயாத்திரை, சமயவிழாக்களை பாடசாலையில் நடத்த போதுமானஒத்துழைப்புஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை.
9. சைவசமய சேவை நிறுவனங்கள், அமைச்சு, ஆலயங்கள் பாடசாலைகளுடன் பொருத்தமான தொடர்புகள், உதவிகள் கிடைப்பதில்லை. குறிப்பாக வறிய வளம் குன்றிய பாடசாலைகளுக்கு எந்தவித உதவியும் இல்லை.
10. கல்வியமைச்சுவெளியிடும் சைவசமயபாட நூல்களில் பெருவாரியான பிழைகள், கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், மாகாணக் கல்வி அமைச்சு இணைந்து பொருத்தமான செயலமர்வுகள், கலைத் திட்டச் சாதனங்கள், வளநூல்களை உரிய வேளை தருவதில்லை. பொருத்தமான வழிகாட்டல் போதுமானதாக இல்லை. செயலமர்வுகள் குறித்த காலங்களில் மேற்கொள்வதில்லை. தரமாக செயலமர்வுகள் நடத்தப்படுவதில்லை.
11. சைவசமய பாட ஆசிரியர்களின் பொருத்தமான தேர்ச்சிகளை விருத்தி செய்யத் தொடருறு பயிற்சி, பாடசாலை மட்டப் பயிற்சி, உயர்கல்வி, வெளிநாட்டுக் கல்வி, தலயாத்திரை வசதிகள் கிடைக்காமை.
12. சைவசமய பாட ஆசிரியர்களைப் பொருத்தமான வகையில் ஊக்குவிக்க பெற்றோர்களோ, சமூகத்தவர்களோ தயாராக இல்லை. சமய விழுமியம் சார்பான விடயங்களில் அக்கறை காட்டாமை. இது மாணவர்களை ஒழுக்க மீறல்கள், பிறழ்வான நடத்தைகளுக்கு இட்டுச் செல்கின்றது. இந்தத் துறைசார் ஆய்வுகளை மேற்கொள்ள வாய்ப்பின்மைகள்.

**கலந்தாய்வு**

மேற்படி சைவசமய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பல இடர்களை எதிர்நோக்குவது இந்த ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தப்பாடம் தொடர்பான நேரான நடத்தை மாற்றங்கள், மானுடவியல் சைவசமய விழுமியங்களில் ஏனைய சமயங்களை விட மாணவர்கள் பின்தங்கிக் காணப்படுகின்றார்கள்.
ஆசிரியர்களின் இடர்களைக் களையாத நிலையில் சைவசமயப் பாடத்தை முறையாக மாணவர்களுக்கு கற்பிக்க முடியாத நிலைமைகள் காணப்படுகின்றன. இது பாரதூரமான தாக்க விளைவுகளை எதிர்காலத்தில் சைவசமயத்துறையில் ஏற்படுத்திவிடும்.
உதாரணமாக:- பாடசாலைக்குத் தரம் ஒன்றில் சேரும் பிள்ளைக்கு சைவ சமய பாடத்தில் அடையவேண்டிய குறிக் கோள்களும் கற்பித்தல் அணுகுமுறை களும் பின்வருமாறு கலைத்திட்டத்தில் எடுத்துரைக்கப்படுகிறது.
சைவநெறி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 1

**குறிக்கோள்கள்**

(தரம் 1 இன் இறுதியில் அடைய வேண்டியவை)

1. சைவசமய ஒழுக்கங்களையும், பண்புகளையும் பின்பற்றி நடப்பர்.
2. பெற்றோரை மதிப்பர், பணிவர்.
3. இறைவன் பெருமைகளை அறிந்து, இறைவனின் நம்பிக்கை கொள்வர்.
4. இறைவணக்கத்தில் ஈடுபடுவர்.
5. வாரத்தில் ஒரு தடவையாவது கோயிலுக்குச் செல்வர்.
6. சமயக் கடமைகளில் ஈடுபடுவர்.

(தொடரும்)

# இனிவரும் காலங்களிலாவது சிரத்தையுடன் கவனத்தில் கொள்வார்களா?

இன்று பாடசாலைகளில் பரிசளிப்பு விழாக்கள், நாடகங்கள் மற்றும் இன்னும் பல நிகழ்வுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. அதில் மிகவும் நெஞ்சை நெகிழவைப்பது வசதி குறைந்த மாணவரின் நிலைதான். நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் மாண வருக்கு அவர்கள் அணியும் ஆடை இன்னும் பல தேவைகள் குறித்து முன்கூட்டியே அறியத்தந்தால் அவர்களும் அதற்கேற்றாற்போல் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வார்கள். ஆனால் ஆசிரியர்கள் சிலசமயங்களில் நிகழ்ச்சி அரங்கேறும் தினத்தன்றுதான் சில மணித்தியாலங்களுக்கு முன்பு மாணவர்கள் என்ன ஆடை அணியவேண்டும் எனத் திடீரென அறிவிக்கின்றனர். இதனால் வசதிகள் இல்லாத பெற்றோர் தடுமாறும் நிலைமைக்குத் தள்ளப்படுவதும் மாண வர் மனத் தளவில் பாதிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது. வசதி உள்ள பெற்றோர் உடனே தங்கள் பிள்ளைகளின் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். ஆனால் இயலாத மாணவனின் நிலை என்ன ? பாடசாலை நிகழ்வுகளின் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து எப்போது நடக்கும் என்பதை பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் அறியத்தருவது பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியரின் கடமை யாகும். சின்னஞ் சிறார்களின் மனதுகள் பரிசுகள் வாங்குவதிலும் பங்கு கொள்வதிலுமே மகிழ்ச்சி அடையும். அவர்களின் சந்தோச நிகழ்வுகள் பாதிப்படையும்போது கல்வி முன்னேற்றங்களும் பாதிப்படையலாம்.

மாண வரின் நிலை அறிந்து செயற்படுவது பள்ளி நிர்வாகத்தினர் மற்றும் வகுப்பாசிரியரின் பொறுப்பும் கண்ணியமும் நிறைந்த கடமையாகும். இனிவரும் நிகழ்வுகளில் சிரத்தையுடன் கவனத்தில் கொள் வார்கள் என நினைக்கிறேன்.

பரமேஸ்வரி.
சாவகச்சேரி.

# பதிவு செய்யப்படாமல் இயங்கும் மருந்தகங்கள்


யாழ்.மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்படாதுள்ள சிகிச்சை நிலையங்கள் பற்றிய தரவுகளைத் தரு மாறு யாழ்ப்பாண சுகாதாரப் பணிப்பாளர் சுகாதார மருத்துவ அதிகாரிகளைக் கோரியுள்ளார். எந்தெந்த சிகிச்சை நிலையங்கள் பதிவில்லாமல் இயங்குகின்றன என்று தெரியாதென்றும் பணிப் பாளர் கூறியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சிகிச்சைநிலையங்கள், எத்தனை உள்ளன அவற்றில் எத்தனை பதிவுசெய்யப்பட்டுள்ளன, பதிவு செய்யப்படாமல் எத்தனை இருக்கின்றன என்ற கேள்வி களுக்குச் சுகாதாரத் திணைக்களத்துக்குப் பதில் தெரியாதா? சிகிச்சை நிலையம் மட்டுமல்ல, யாழ்.மாவட்டத்தில் பல மருந் தகங்கள் பதிவுசெய்யப்படாம லிருக்கின்றன. பல வருடங் களாக இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. இவற் றுக்கு எதிராக ஏன் நட வடிக்கை எடுக்கவில்லை?


நாம் பணம் செலுத்திப் பதிவு செய்துதான் அவற்றை இயக்கி வருகிறோம். உரிய முறையில்தான் இயக்கி வருகிறோம். ஆனால் பணம் செலுத்தாமல் பலர் அவ்வாறு மருந்தகங்களையோ சிகிச்சை நிலை யங்களையோ இயக்க நீங்கள் அனுமதி அளித்தால் பிறகு ஏன் பணம் செலுத்திப் பதிவு செய்ய வேணும்? ஏன் வருடாந்தம் பதிவைப் புதுப்பிக்க வேணும்?

பல வருடங்களாக நாம் இதனைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். முந்திய பணிப்பாளர் கேதீஸ்வரன் இருக்கிற காலத்தில் இந்த விடயத்துக்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கால அவகாசம் வழங்கியுள்ளதாகவும் விரைவில் நடவடிக்கை எடுப்ப தாகவும் இதே உதயன் பேப்பரில செய்தி போட்டிருந் தார். பின்னர் வந்த பணிப்பாளர் காலத்திலும் நட வடிக்கை இல்லை. இப்பொழுது புதியவர் வந்துள்ளார். பதிவு செய்யாத சிகிச்சை நிலையங்களின் தரவைக் கேட்டுள்ளார். இனி அவரும் கால அவகாசம் வழங்கு வார். பின்னர் இழுபறியில் கிடக்கும். பின்னர் வேறொரு பணிப்பாளர் வருவார். அவரும் இவற் றைத் தான் கூறுவார். உதயனும் அதனையே செய்தி யாகப் போடும். இப்பிடியேதான் எல்லாம் நடக் கப்போகிறதா? பணிப்பாளர்கள் ஏன் கடும் நடவடிக்கை எடுக்கக்கூடாது? உதயனே இதனைக் கட்டாயம் வாசகர் திருமுகப் பகுதியில் போடத் தவறவேண்டாம்.

– க.வேலுப்பிள்ளை,
யாழ்.நகர்.




## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# மரம் ஒரு வரம்

நாம் வாழும் பூமியில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்கவேண்டும் என்பது இயற்கையின் விதி. அவ்வாறு இருந்தால் நமக்குக் கிடைக்கும் பயன் அதிகம். மரங்கள் எமக்கு எவற்றைத் தரவில்லை எனச் சற்றும் சிந்திக்காமல் மனம் வந்து மரங்களை அழிப்பது மனித மனம்.

மரங்கள் எவ்வாறான பயன்களைத் தருகின்றன என்று சின்ன வயதில் அனைவருமே படித்திருப்போம். இப்போதும் கேள்விப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றோம். மரங்கள் மழையைத்தருவதுடன் நிலச்சரிவைக் கட்டுப்படுத்துகின்றன. மண் அரிப்பைத் தடுக்கின்றன. கரியமில வாயுவை நிர்ணயம் செய்யும் தன்மை மரங்களுக்கு உள்ளது. புவியின் தட்ப வெட்பத் தன்மையை நிர்ணயிக்கும் காரணிகளாக மரங்கள் உள்ளன.

மரம் வளர்ப்புக் குறித்த சிந்தனைகள் பல வகை. ஒவ்வொரு வருக்கும் அவரவர் செயலுக்கு ஏற்ப சிந்தனைகள் மாறுபடும், வலுப்படும். ஆனால் அனைவரின் ஒருமித்த சிந்தனையின் நோக்கம் மரம் வளர்ப்பு. மரம் வளர்ப்பின் அவசியத்தை அரசு அமைப்புகளும், அரசு சாரா அமைப்புகளும் சொல்லிக்கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் இந்த வார்த்தைகள் மதிக்கப் பட்டு செயல் வடிவம்பெறுகிறதா? என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

அதிகம் வேண்டாம். உங்கள் ஊரில் நீங்கள் படித்த பாட சாலைகள் உள்ளன. அவற்றைச் சுற்றி மற்றும் பாடசாலை களின் உட்பகுதிகளில் மரம் நட்டு உங்களால் முடிந்த உதவி களைச் செய்யலாம். நிச்சயமாக இது ஒரு தனிநபரால் செய்ய இயலாது. ஆனால் பாடசாலை நண்பர்கள், ஊர் நண்பர்கள், அமைப்புக்கள் சேர்ந்து இதனைச் செய்ய முடியும்.

மரம் செடிகளை அதிக அளவில் வளர்க்க வேண்டும். ஓர் இயற் கையான சூழ்நிலையை எங்கள் இடத்தில் வைத்திருக்க வேண்டும். அதனால் நம்மால் முடிந்த அளவு எமது வீட்டைச் சுற்றி உள்ள இடங்களில் மரங்கள் வளர்க்க வேண்டும். அதேபோல மற்றவர்களையும் மரம் வளர்க்கக் கூறி வலி யுறுத்துவதும் வரவேற்கத்தக்கது.

தற்போது மரம் நடுவது என்பது அரசியல்வாதிகள், பொதுநலவாதிகள், ஆன்மிகவாதிகள் என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவரும் செய்யும் காரியம் என்றாகி விட்டது. நாங்கள் நடும்போது ஆர்வத்துடன் நடுகிறோம். அனைவரும் அப்படித்தான் முதலில் மரம் நடுகிறார்கள் ஐம்பதாயிரம், ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடுகிறார்கள். அவர்களது வேலை மரம் வைப்பதோடு முடிகின்றது. பின்னர் அவற்றைப் பராம ரிப்பது கிடையாது. பராமரிக்காமல் கருகச் செய்யப் போகின்றோம் என்றால் எதற்காக நடவேண்டும்.

இதில் ஒரு சிறு ஆறுதல், ஒரு சில மரங்கள் தப்பிப் பிழைத்து வளர்ந்து விடுகின்றன. பொதுவாக அரசு மரங்களை வைத் தாலும் அதை ஒரு சில இடங்களிலேயே சரியாகப் பராம ரிக்கிறார்கள். பெரும்பான்மையான இடங்களில் அங்கே மரம் வைத்ததற்கான அடையாளமே இருக்காது. இல்லை யென்றால் நட்டவற்றுக்கும் பாதுகாப்பாக வைக்கப்பட்ட கூண்டு மட்டும் இருக்கும்.

ஒரு சில அமைப்புக்கள் மரம் நடும் செயற்திட்டத்தைச் சில காலப்பகுதியில் மேற்கொள்கின்றனர். அவை வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவது பாராட்டத்தக்கது.. வருடாவருடம் பலர் மரம் நடுவதாக அறிவிப்புச் செய்து விளம்பரப்படுத்திப் பெரிய அளவில் செய்வார்கள். அதேபோல் மரம் நட்டாலும் பாதுகாப்பு இன்றி மரம் பட்டுப்போய் விடுகிறது. இதைப் போல் மரம் நடுகிறேன் என்று விளம்பரத்திற்காக வெட்டி வேலை செய்வதைத் தவிர்த்து, வைத்த மரத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கவேண்டும்.

மரம் நடுவது என்பது மிகச்சிறந்த செயல். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. தற்போது பூமியில் வெப்பத்தின் அளவு அதிகரித்து வரும் வேளையில் இயற்கையின் அருமையை நாம் இன்னமும் உணராமல் இருப்பது தான் தவறு. ஆனால் விளம் பரத்திற்காக லட்சம் மரங்களை நடுகிறேன் என்று உருப்படி யாக 100 மரங்களைக் கூட நல்ல முறையில் வளர்க்காமல் இருப்பதற்கு எதற்கு அத்தனை மரங்கள் நடவேண்டும்? மரத்தை நட்டால் மட்டும் போதுமா! அதைப் பராமரிக்க வேண்டாமா! எத்தனை மரங்களை நடுகிறோம் என்பது முக்கியமல்ல. அதில் எத்தனை மரங்களை நன்றாக வளர்த்தோம் என்பதே கேள்வி. ஆசை இருந்தால் மட்டும் போதுமா! அதை அடைவதற்குண்டான சரியான முயற்சியில் இறங்கவேண்டாமா! இவர்களைப் போன்ற அமைப்புகள் 100 மரங்களை நட்டாலும் அதைச் சரியான முறையில் பாதுகாத்து வளர்த்தலே மிகப்பெரிய சமுதாயத் தொண்டு.

கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாக அனுஷ் டிக்கப்படுகின்றது. இதற்காக விவசாய அமைச்சினால் குறைந்த விலையில் மரக்கன்றுகள் விற்பனை செய்யப்பட்டன. உங்களில் எத்தனைபேர் இந்த மரநடுகை மாதம் தொடர்பில் சிந்திக்கின்றீர்கள்? சிந்திக்க வேண்டும். எதிர்காலத்துக்குப் பசுமையான வாழ்வு கொடுப்பதற்காகவாவது சிந்திக்க வேண்டும்.

நீங்கள் நடும் ஒரு சிறு செடி, மரம் ஆகும் வரை நாம் காப்பாற்ற வேண்டும். மனம் இருந்தால் நிச்சயம் செய்யலாம்.

மரம் செழித்து, மழை கொழித்து, பூமி மகிழ கை கோர்ப்போம் வாருங்கள்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 - 492 7474, 021-492 7475, 021 - 567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 - 493 1111
விநியோகம் : 021 - 493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் விவகாரங்களை புறம் தள்ளும் போக்கு இனியேனும் தரிக்காதோ....?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை, முற்றாக இல்லாது ஒழிக்கப் போவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

மாதுளுவாவே சோபித தேரர் எதிர்பார்த்தது போன்று, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்பதை அவரது பூதவுடல் மீது ஆணையாகக் கூறியதற்கு இணங்க அதனைச் செயற்படுத்துவேன் -- என்றும் ஜனாதிபதி தமது இரங்கல் உரையில் விரித்துக் கூறி இருந்தார்.

நீதி நியாயம் மிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும்; நல்லாட்சியுடன் கூடிய அறிவு சார்ந்த சமூகம் உருவாக வேண்டும்; நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பவை சோபித தேரரின் எதிர்பார்ப்புகளாகும்--

அவர் எதிர்பார்த்தது போன்று, நீதி, நியாயமான சமூகத்தை உருவாக்கவும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்கவும் நான் முடிந்தளவு நடவடிக்கைகளை எடுப்பேன்--

அத்துடன் அவர் கூறியது போன்று, தேர்தல் முறைகளிலும் மாற்றங்கள் கொண்டுவரவும் உழைப்பேன் -- என்றும் ஜனாதிபதி தமது இரங்கல் உரையில் விசாலமாக விரித்துக் கூறியுள்ளார்.

தேரர் பெரிதும் விரும்பிய நல்லாட்சியும், நீதி, நியாயம் கொண்ட சமுதாயமும் உருவாக்கப்பட வேண்டும் -- என்றும் ஜனாதிபதி விளம்பி உள்ளார்.

ஜனாதிபதியின் அர்த்தம் நிறைந்த மேற்போந்த கருத்துக்கள், இப்போதைய ஆட்சியில் நடை முறைக்குக் கொண்டுவரப்படின், நாடு சிறந்த நிலையை, பெரும் திருப்பத்தை உற்பவிக்கும் என்று பெரியளவில் எதிர்பார்க்கலாம்.

ஆனால், அண்மைக் காலங்களில், குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற காலங்களில், காலத்தில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது என்ற விடயம், விவகாரம் முக்கிய பேசுபொருளாக முன்னிலை பெற்றிருந்தது.

ஏன், 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஜாதிக விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) அணிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட சரத்பொன்சேகா தாம் பதவிக்கு வந்ததும், நிறைவேற்று அதிகாரத்தை ஆறு மாதங்களில் ஒழித்து விடுவார் என்று உறுதி கூறினார்.

இந்த ஆண்டு ஜனவரியில் பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதியும், பொதுவேட்பாளராகப் போட்டியிட்டே பதவிக்கு வந்தார்.

எனினும், நிறைவேற்று அதிகாரம் முற்று முழுதாக நீக்கப்படவில்லை. சில கத்தரிப்புக்களைக் கொண்டு, நறுக்குகள் மூலம் சரி செய்யப்பட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

அந்தப் பின்னணியில்-


நிறைவேற்று அதிகாரத்தை முற்றுமுழுதாக நீக்குவதாக இப்போது கூறப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் சார்ந்த ஏனைய பிரதான விவகாரங்கள் தொட்டும் பார்க்கப்படவில்லை.

அத்தகைய நிலையில், அரசியல் சூழமைவில் நிறைவேற்று அதிகாரம் இருந்தென்ன, இல்லாவிடில் என்ன என்ற விட்டேத்தியான நிலையே தமிழ் மக்கள் தரப்பில் உயர்ந்து நிற்கின்றது. அவர் தம் உரிமைகளை புறந்தள்ளும் போக்கு இனியும்கூட தரிக்காத போக்கே தொடர்கிறது...!

தமிழர் நலன் நாடி ஆக்கபூர்வமாகச் செயற்படுவதற்கு அரசு பின்னடித்தால், விளைவுகளும் வழம் மாறியே மேல் எழும். அது தவிர்க்க முடியாததும் ஆகிவிடும்...

# தமக்கு நீதி கிடைக்காது என்பதே தமிழ் மக்களின் முடிவு



வந்தியத்தேவர்

குற்றவாளிகள் இல்லை. தண்டனை இல்லை என்று முடிவு செய்த பின்னர் ஜெனிவா தீர்மானத்தின் அடிப் படையில் நடவடிக்கைக்கு என்ன இருக்கிறது? சர்வதேச விசாரணை, உள்ளக விசாரணை என்று கூறிக் கொண்டு அதற்கான செலவினங் களை மேற்கொள்வதில் என்ன அர்த்த மிருக்கிறது? நீதி சாகடிக்கப்படு வதைத் தவிர வேறு என்னதான் இடம்பெறப் போகின்றது?

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப் போரில் இடம்பெற்றது தமிழினப் படுகொலையே என்ற உண்மையைச் சர்வதேசமே ஏற்றுக் கொண்டு போர்க்குற்ற விசாரணை தேவை என்பதை வலியுறுத்தி வந்துள்ளது. ஐ.நா.மனித உரிமை ஆணையம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் நேர்மையான விசாரணைகளை நடத்தி கோரிக்கையான உள்ளக விசாரணைக்கு அனுசரணையாக அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் சர்வதேச விசாரணையில் இருந்து நழுவிக் கொண்டன. அதாவது அமெரிக்கா இலங்கைக்கு வளைந்து கொடுத்துள்ளது. அதனூடாக தமிழர்கள் மீதான தனது உண்மையான கொள்கை என்ன என்பதை வெளிச் சமிட்டுள்ளது.

இலங்கையின் நாடகம் அமெரிக்க அரங்கில் வெற்றிகரமாக மேடையேறியதை அடுத்து இலங்கை அரசுத் தலைவர்களின் மனதில் ஏற்கனவே திட்டமிட்டிருந்த போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்கப் போவதில்லை என்ற தீர்மானம் இப்போது பகிரங்கமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்தவோ, கோத்தபாயவோ படையினரோ தண்டிக்கப்படப் போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மகிந்தவின் சர்வாதிகார நடவடிக்கைகளை மறை அதை அவர்கள் மனப்பூர்வமாக விரும்பமாட்டார்கள் என்பதையும் நல்லாட்சி அரசின் போக்கு இப்போது வெளிப்படுத்தியிருக்கின்றது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு முதலில் ஒப்புக்கொண்ட அரசு தான் தெரிவித்தபடி அவர்களை விடுவிக்கப்போவதில்லை என்பதும் இப்போது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. போர்க்குற்றவாளிகளுக்குச் சார்பான தமது முடிவுக்கு வலுச்சேர்க்க தமிழ் அரசியல் கைதிகளை வைத்துப் பேரம் பேசவும் அரசு அவர்களின் விடுதலையைத் தள்ளிப் போட்டிருக்கவும்கூடும்.

குற்றவாளிகளுக்குத் தண்டனை இல்லைஎன்பதனூடாகஇடம்பெற்றது தமிழினப் படுகொலை அல்ல என அரசு வலியுறுத்த முற்பட்டாலும்கூட அது எடுபடப்போவதில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்று அறிவித்த பின்னரும்கூட இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்புத்தான் என்பதை உறுதிப் படுத்திய அமைச்சர் மகிந்த சமரவீர கடந்தகால கசப்பான சம்பவங்களை மறந்து ஒன்றிணைவோம், ஜனநாயகத்தின் பாதையில் திரும்பிச் செல்வோம்என்று கூறியுள்ளார்.



முன்னாள்ஜனாதிபதி மகிந்தவுக்கும் அவரது ஆட்சியில் முக்கிய இடத்தில் இருந்த கோத்தபாய மற்றும் படை அதிகாரிகளுக்கு மட்டுமன்றி அவர்களைப் பாதுகாக்கக் குறியாக உள்ள இன்றைய அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட இந்த அரசில் அங்கம் வகிக்கும் அனைவருக்குமே தெரியும் நடந்தது இன அழிப்பே என்பது. விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ஆகியோரின் பெயர்கள் அதில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில் இந்த விடயத்தில் இவர்களுக்குத் தொடர்பே இல்லை என்றாகிவிட்டது போலுள்ளது. இது இலங்கைக்கும் நீதிக்கும் சம்பந்தம் கிடையாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது.

யிருந்த நவநீதம்பிள்ளை அம்மையார் மற்றும் ஆணையாளர் சயீத் அல் ஹுசைன் போர்க்குற்றங்கள் குறித்தும் நடந்த சம்பவங்கள் குறித்தும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர். நடந்தது தமிழின அழிப்பே என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. விசாரணைகளை அடுத்து சர்வதேச நீதிமன்றத்தினூடாக இது முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அமெரிக்கா உட்பட அதன் ஆதரவு நாடுகளும் சர்வதேசவிசாரணையை வலியுறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றும் நடவடிக்கைகளில் தீவிரமாக இருந்தன.

இந்த நிலையில் சர்வதேச விசாரணைக்கு எதிராக உள்ளக விசாரணையே நடத்தப்பட வேண்டும் என இலங்கை அரசு வற்புறுத்தி வந்தது. தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கையின் நட்புறவு அமெரிக்காவுக்கு அவசியம் என்பதாலும் மகிந்தவின் பதவிக் காலத்தில் இலங்கை சீனாவின் சார்புக் கொள்கையைக் கொண்டிருந்ததாலும் தற்போது தலைமைகள் அமெரிக்க சார்புக் கொள்கைக்கு முக்கியத் துவம் வழங்கியதாலும் அரசின் முகமாக ஆதரிக்கும் ஒருவராகவே காணப்பட்டார். மகிந்தவின் நடவடிக்கைகளைத் தெரிந்திருந்தும் அவரைப் பாதுகாக்கும் அக்கறையிலேயே செயற்பட்டு வந்துள்ளார். இறுதிப்போரில்பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் படுகொலைக்குள்ளாக மகிந்த அரசே காரணமாகும். படையினரின் உதவியுடன் தமிழ்மக்களை வகைதொகையின்றி அழிக்க மூலகாரணமாக இருந்தவர்கள் மகிந்த, கோத்தபாய ஆகியோரே. உலகின் பல்வேறு நாடுகளில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்காக அந்தச் சமயங்களில் அங்கு அரசுத்தலைவர்களாக இருந்தவர்கள் மீது நீதி விசாரணைகள் இடம்பெற்றுத் தண்டனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் இது தலைகீழாக்கப்பட்டுள்ளது. என்னதான் நல்லாட்சி, நீதி, நியாயம் என்று பேசினாலும்கூட இனவாதத்திலேயே தோய்ந்த தென்னிலங்கைத் தலைமைகளால் இங்கு நீதியை நிலைநாட்டக்கூடிய, நியாயத்துக்கு தலை சாய்க்கக்கூடிய ஓர் அரசை ஏற்படுத்த முடியாதென்பதையும்,

கோவலனைக் கொன்று நீதியைக் கொன்று விட்டதற்காகத் தன் உயிரையே துறந்தவன் பாண்டியமன்னன். சிலப்பதிகாரம் போன்று சிறந்த நீதி நூல்கள் சிங்கள அரசியல்வாதிகளுக்குக் கிடைப்பதில்லைப் போலும். இப்படியே தொடர்ந்தால் ஒருபோதும் தமக்கு நீதி கிடைக்காது என்பதே தமிழ் மக்களின் முடிவாக இருக்கும்.

# மாமனிதர் ரவிராஜின் கனவுகள் பொய்யாகப் போவதில்லை

மு.தமிழ்மணி

ஈழத்தமிழ் மக்களின் மீதான அடக்கு முறைகளுக்கும், இலங்கையிலுள்ள சகல மக்களினதும் உரிமைக்காகவும் அஞ்சாது குரல் கொடுத்தவரும், இனப்பிரச்சினைக்குப் போர் தீர்வாகாது என்று சிங்கள மக்களுக்கு உணர்த்தியவருமாகிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நடராஜா ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு ஒன்பது ஆண்டுகளாகிவிட்டன. எமது இளம்தலைமுறையின் விடிவு தேடிக் களமிறங்கி வீறு நடைபோட்ட தமிழினத்தின் இளம் அரசியல் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் அண்மைக்காலமாக வெளிவந்தபடியுள்ளன.

1965 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் நடராஜா, மங்களேஸ்வரி என ஊரறிந்த ஆசிரிய தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த ரவிராஜ் தமது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், பின்னர் டிறிபேக் கல்லூரி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆகியவற்றிலும் கற்றார். இதன் பின்னர் சட்டக் கல்லூரி மாணவனாக கொழும்பு சட்டக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

1987 ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார். சட்டத் தரணித் தொழிலை கொழும்பில் தொடங்கினார். சட்டத்தரணி ரவிராஜ், சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டவாதியாகச் சில ஆண்டுகள் வரையில் பணியாற்றியிருந்தார். இந்தக் காலப் பகுதியில் அவர் சிங்கள மொழியறிவையும் ஓரளவு பெற்றுக் கொண்டார்.

ரவிராஜ் இன் 'ரவிராஜ் அசோசியேட்ஸ்' என்ற சட்ட நிறுவனம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காகவும் அவசர காலச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காகவும் வாதாடியது.

1987 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியில் அவர் சேர்ந்து கொண்டார். 1990 ஆம் ஆண்டில் அக்கட்சியில் மத்திய குழு உறுப்பினரானார். சட்டத்தரணியாக இருந்து அரசியலுக்குள் நுழைந்த ரவிராஜ், பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தின் வேட் பாளராகப் போட்டியிட்டு இரண்டு தடவைகள் வெற்றி பெற்றிருந்தார்.

1994 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான குமார் பொன்னம்பலம் தலைமையில் கொழும்பு மாவட்டத்தில் முதன் முதலில் போட்டியிட்டிருந்தாலும் வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக அப்போது இருக்கவில்லை.

1997 ஆம் ஆண்டு யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வராகவும் 1998 இல் யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வராகவும் பதவி வகித்தார். யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வராகப் பதவி வகித்த திருமதி சறோஜினி யோகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, சட்டத்தரணியான சிவபாலன் முதல்வராக நியமிக்கப்பட்டிருந்தார். இவரும் கொல்லப்பட்டதையடுத்தே சட்டத்தரணி ரவிராஜ் முதல்வராகின்ற வாய்ப்பைப் பெற்றிருந்தார். அக்காலகட்டத்தில் இரு முதல்வர்களின் அடுத்தடுத்து ஏற்பட்ட உயிரிழப்புக்கு மத்தியில் துணிச்சலோடு பதவியேற்று தனது அரசியலை உறுதி செய்து கொண்டார். யாழ்ப்பாண மக்கள் மத்தியில் வளர்ந்து வருகின்ற இளம் தலைமுறை அரசியல் தலைவராக வளர்ந்து வந்தவர். தமிழ் மக்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் தனது நடவடிக்கைகள் மூலம் பெற்றுக் கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்னர் தமிழினத்துக்கெதிராக மகிந்த அரசு மேற்கொண்ட அடக்கு முறைகளையும், தமிழ் இளைஞர்களின் திட்டமிட்ட கைது நடவடிக்கைகளையும், தமிழினத்தை அழிக்கின்ற சதித்திட்டங்களையும் அம்பலப்படுத்தி கொழும்பில் இருந்து கொண்டே துணிச்சலோடு குரல் கொடுத்து வந்தார்.



ரவிராஜ் இறப்பதற்கு முதல்நாள் மாலையும் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை மனோ கணேசனுடன் இணைந்து நடத்தியபோது 'கொல்லாதே கொல்லாதே தமிழர்களைக் கொல்லாதே' என்று முழக்கமிட்டிருந்தார்.

பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு கொடிய சித்திரவதைக்குள்ளான அப்பாவித் தமிழ் இளைஞர்களை மீட்டெடுப்பதற்குத் தனது சட்டப் புலமையை நன்கு பயன்படுத்திக் கொண்டார். குமார்பொன்னம்பலத்தின் வழியிலேயே தனது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளின் கைது விடயத்தில் தன்னால் முடிந்தளவு வழக்குகளை எடுத்து விடுதலை பெற்றுக் கொடுப்பதற்கு இரவு பகலாக முழு அர்ப்பணிப்போடு செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

கொழும்பில் தங்கியிருக்கின்ற காலப் பகுதிகளில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் யுவதிகளுக்கு ஆதரவளித்து வழிகாட்டுவதிலும் முன்னின்று செயற்பட்டவர்.

இத்தனை துணிச்சல்களும் குமார் பொன்னம்பலத்திடமிருந்தே பெற்றுக் கொண்டிருந்தார். ரவிராஜ் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தபடியினால் சட்டத் தொழிலிலும் சரி, அரசியலிலும் சரி இனத்தின் பிரச்சினைகளை தென்னிலங்கையிலுள்ள சகல சிங்களத் தலைவர்களுக்கும் அவர்களின் மனதில் உறைக்கும் படியாகத் தனது கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் வெளியிடுகின்றதற்துணிவு கொண்டவராக விளங்கினார்.

மூன்று மொழிகளிலும் உரையாடுகின்ற வாய்ப்பைப் பெற்றிருந்த ரவிராஜ் தமிழர் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களைச் செம்மையான முறையில் நன்கு பயன்படுத்தினார். தமிழினத்தின் போராட்டங்களையும், நியாயங்களையும் உடனுக்குடன் சிங்கள மக்களிடம் எடுத்துக் கூறுவதில் வல்லவராகச் செயற்பட்டிருந்தார். சிங்கள ஊடகங்கள் மூலம் தமிழர்களது போராட்ட நியாயங்களை மிகத் தந்திரமான முறையில் பயன்படுத்தினார். சிங்கள ஊடகங்களில் அவரது குரல் வாரத்தில் ஒரு தடவையாவது ஒலித்தவாறு இருக்கும்.

கொழும்பு நகரில் அதிகார வர்க்கத்தின் அராஜகம் தமிழர்கள் மீது கோரத் தாண்டவம் ஆடியது. தலைநகரில் மட்டுமல்லாது நாட்டின் தமிழ்ப் பிரதேசங்களில் தினமும் தமிழர்கள் அரச படையினர்களால் கடத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். வெள்ளை வான் மூலம் தமிழர்கள் கடத்தப்படுகின்ற சம்பவங்கள் சாதாரணமாக இருந்தது. எங்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள், அவர்களுக்கு என்ன நடக்கின்றது எதுவுமே கடத்தப்பட்டவர்களால் அறிய முடியாத நிலைக்குள்ளாகிய நிலையில் இன்றைய அமைச்சரான தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசனும், சிறிதுங்க ஜெயசூரியவும் இணைந்து மக்கள் கண்காணிப்புக் குழுவை 2006 ஆம் ஆண்டு உருவாக்கியிருந்தனர்.

தென்னிலங்கையிலுள்ள சிங்கள இனவாதிகள் மகிந்த ஆட்சிக் காலத்தில் ரவிராஜை விடுதலைப் புலியாகவே கருதினார்கள். அவர் மீது சிங்கள கடுங்கோட்பாளர்கள் துவேசமாகவேயிருந்தனர். அதற்காகப் பயந்து ஒழிந்து விடாது மேலும் மேலும் ஆணித்தரமான கருத்துக்களைத் தெரிவித்தபடியிருந்தார்.

சிங்கள ஊடகங்கள் ரவிராஜின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தன. அவரது கருத்துகளில் பிரிவினைவாதம் இருக்கவில்லை. துவேசமில்லை. மனித உரிமைகள் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்த ரவிராஜ் மனித உரிமை அமைப்புக்களில் இணைந்து இலங்கையிலுள்ள சகல மக்களினதும் உரிமைக்காகக் குரல் கொடுத்து வந்ததார்.

மனோ கணேசன் மக்கள் கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தி கொழும்பில் தமிழ் மக்கள் காணாமற் போதல், கடத்தல், கப்பம் என்பன அதிகரித்தபோது எதிர்த்து அதற்கான போராட்டங்களை முன்னெடுத்திருந்தார். இந்தப் போராட்டங்களில் அப்போது வாசுதேவ நாணயக்காரா, கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிதுங்க ஜெய சூரிய ஆகியோருடன் இணைந்து ரவிராஜ் கலந்து கொண்டிருந்தார். ஆர்ப்பாட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டார்.

சிங்கள மக்களோ அல்லது தமிழ் மக்களோ இராணுவ நடவடிக்கையையும் இரத்தக்களரி ஏற்படுவதையும் சிறிதளவேனும் விரும்பவில்லை. வடக்கு கிழக்கு தமிழர்கள் பண்டைக் காலம் தொடக்கம் வாழ்ந்த இடம். இது ஒன்றாகவே ஓரலகாகவே இருக்க வேண்டும். இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படுதலில் இதுவே அடிப்படையாகும் என்று தெரண தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியிருந்தார்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி அன்று காலை 8.30 மணிக்கு முன்னதாக காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை தெரண தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் தனது ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துக் கூறியிருந்தார். தமிழர் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் சிங்கள மக்களின் விரோதிகள் என்ற சிங்கள கடுங்கோட்பாளர்களின் கூற்றைப் பொய்யென்று சிங்கள ஊடகங்களில் எடுத்துக்கூறி இனங்களுக்கிடையிலான நல்லுறவை ரவிராஜ் வளர்த்து வந்துள்ளார்.

ரவிராஜ் இறப்பதற்கு முதல்நாள் மாலையும் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை மனோ கணேசனுடன் இணைந்து நடத்தியபோது கொல்லாதே கொல்லாதே தமிழர்களைக் கொல்லாதே என்று முழக்கமிட்டிருந்தார்.

தெரண தொலைக்காட்சிக்கு நேர்காணல் வழங்கிவிட்டு வீட்டிலிருந்து தனது சட்டத் தொழிலுக்காகப் புறப்பட்டபோது, அவர் வீட்டுக்கு அண்மையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். சுமார் 5 ஆண்டுகள் வரையில் நாடாளுமன்றத்திலும் வெளி இடங்களிலும் ரவிராஜின் குரல் தமிழினத்தின் குரலாக ஒலித்தது மட்டுமன்றி, அரசின் அடக்கு முறைகளுக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கும் எதிராக ஒலித்த குரலாகும்.


ரவிராஜ் சிங்கள ஊடகங்களுக்கும், சர்வதேசத்துக்கும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் உண்மைகளை எடுத்துக்கூறியமை அரசுக்கும், படையினருக்கும் பெரும் தலையிடியாகவே இருந்தது. இவரது உயிரைப் பறிப்பதன் மூலம் இவரது குரலை ஒரேயடியாக நசுக்கி விடலாம் என்ற திட்டமும் அவர்களுக்கு இருந்து வந்துள்ளது. அதன் காரணமாகவே கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார். தெரண சிங்கள தொலைக்காட்சியில் அவரது குரல் ஒலித்த அரைமணி நேரத்தின் பின்னர் அவரது கொலை இடம்பெற்றிருந்தது.

அவர் ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்தையும், அபிலாசையையும், சமஷ்டிக் கோரிக்கையையும் உலகறியச் செய்த பெருமகனாவார். அவரது உயிர் பறிப்புக்கும் அதுவே காரணமாக அமைந்திருந்தது. சத்திய இலட்சியத்துக்காய் வாழ்ந்த மாமனிதர் ரவிராஜின் கனவுகள் பொய்யாகப் போவதில்லை. தமிழர் பிரச்சினைக்கு போர் மூலம் தீர்வு காண முடியாது என ரவிராஜ் தென்னிலங்கை மக்களுக்கு உண்மை நிலையை சொல்லி வந்தமையினாலேதான் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் எனக்கருதிய மூவின மக்களும் அவரது புகழுடலை விகாரமாதேவி பூங்காவுக்குச் சுமந்து சென்று போர் தீர்வாகாது எனக் கோசமெழுப்பினர்.

கொழும்பில் நடைபெற்ற அவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களும், தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர். இது ரவிராஜ் இன உணர்வுள்ள ஒரு தமிழராகவும், நாட்டுப் பற்றுள்ள ஓர் இலங்கையராகவும் திகழ்ந்தார் என்பதை எடுத்துக் காட்டியதெனலாம்.

தமிழினத்தின் குரலாக வேகமாக செயற்பட்ட ஓர் இளம் அரசியல் தலைவரான அவரை வேகமாகவே தமிழ்மக்களிடமிருந்து பிரித்து விட்டனர். தான் நேசித்த தமிழினத்துக்காக தன்னுயிரைச் துச்சமென மதித்து செயற்பட்ட ரவிராஜ் இன்றைய சமகால அரசியலில் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார்.

# இஞ்சி சாப்பிடுங்கள்



இஞ்சி கிராம மக்கள் முதல் நகர மக் கள் வரை சமையலில் பயன் படுத்தும்ஒரு பொருளாகும். இஞ்சிப் பயிர், நல்ல மழை உள்ள இடங் களிலும், ஈரப்பதம் கொண்ட நிலங்களிலும் வளர்கிறது. இஞ் சியிலிருந்து தயார் செய்யப்படும் மருந்துப் பொருள்கள் உடலுக்குத் தெம்பையும், புத்துணர்ச்சியும் தரக்கூடியவை. இஞ்சியின் மருத் துவக் குணங்களை அறிந்து, தின மும் இஞ்சி சாப்பிட்டால், என் னென்ன நோய்கள் விலகும் என் பதை ஆராய்ச் சிகள் நிரூபித்துக் காட்டியுள்ளன.

1.இஞ்சியை குத்திப் போட்டு இஞ் சித் தேநீர் கூடக் குடிக்கலாம். இப் போது இஞ்சியிலிருந்து சாறு, இஞ்சி சர்பத், லேகியம், இஞ்சித் தைலம் ஆகியவை செய்யப்படு கின்றன.

2.இஞ்சியின் மேற்றோலை நீக்கி அரைத்து, நீர் கலந்து வடிகட்டிப் பயன்படுத்துவதே இஞ்சிசாறு எனப்படும். இதனை வயதுக்கு ஏற்ப சரியான அளவுடன் சாப் பிட்டால், உடலின் ஜீரண உறுப்புக் கள் சிறப்பாக இயங்கும். வயிற்றுப் போக்கு ஏற்பட்டால், இஞ்சிச் சாற்றை வயிற்றின் தொப்புள் பகுதியை சுற்றி தடவி வர குணமாகும்.

3.இஞ்சிச் சாறும், வெங்காயச் சாறும் சம அளவு கலந்து குடித் தால், வாந்தி, குமட்டல் இவை களை நிறுத்தலாம்.

4.இஞ்சிச் சாறு, மாதுளம்பழச் சாறு, தேன் சம அளவு கலந்து வேளைக்கு 30 மில்லி வீதம் சாப் பிட்டு வந்தால், இருமல் விரைவில் குணமாகும்.

5.இஞ்சியை கீற்றுக்களாக நறுக்கி, தேனில் ஊற வைத்து நாள் தோறும் காலையில் 4 துண்டுகள் மாலை 4 துண்டுகள் உண்டுவர உடல் பலம் பெறும். இளமைத் தோற்றம் கொடுக்கும்.

6.இஞ்சிச்சாறு, தேன் இரண்டை யும் சேர்த்து பாகு செய்து குங்குமப் பூ, ஏலக்காய், சாதிக் காய், கிராம்பு இவற்றை பொடி செய்து தூவி, கிளறி எடுத்து கண்ணாடி பாத் திரத்தில் வைத்துக் கொண்டு தேவை யானபோது 5 கிராம் எடுத்துச் சாப்பிட வயிற்று வலி, வாந்தி முதலியவைகள் குணம டையும்.

7.இஞ்சி, திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) ஏலம், அதிமதுரம், சீரகம், சந்தனத்தூள் ஆகியவை சுலப மாக மருந்து கடைகளில் கிடைக் கின்றன. எல்லாவற்றிலும் சம அளவு வாங்கி, அரைத்து கலந்து வைத்துக் கொள்ளவும். தேவைப் படும்போது ஒரு கரண்டி பொடியை நீரில் கலக்கி சுண்டக் காய்ச்சவும். பின்பு காலை, மதியம், மாலை 50 மில்லி அளவு வேளைக்கு ஒரு முறை சாப்பிட பித்தம் நீங்கும். உடல் சுறுசுறுப்படையும்.

8.இஞ்சி, சிவதை, சீந்தில், நில வாகை, கொடிவேலி, கழற்சிக் கொடி, முடக்கத்தான், சமூலம், பூண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி இவை களை வகைக்கு 35 கிராம் எடுத்து அரைத்து 500 மி.லீ நெய்யில் கலக்கி காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு கரண்டி அளவு உள்ளுக்குச் சாப்பிட்டு வர வாதநோய் குணமாகும்.

9.இஞ்சிச் சாறு ஓரிரு சொட்டுக்கள் மூக்கில் துளியாக விட்டால் தலைவலி குணமாகிவிடும்.

10.இஞ்சித் துண்டை பல் வலி யுள்ள இடத்தில் வைத்து தேய்த் தால் வலி மட்டுப்படும்.

11.வயிற்றில் சதை அதிகமாவதால் தொந்தி விழுகிறது. அதை குறைத் தால் இதயநோய் வராது. தொந்தி இருக்கும் சிலருக்கு குறட்டை அதி கம் ஏற்படும். இதற்கு தொந்தி ஒரு முக்கிய காரணம். பெண்களுக்கு அதிகமாக இந்த வயிற்றுச் சதை பிரச்சினை இருக்கிறது. குழந்தை யின்மைக்கு ஒரு காரணமாகக் கருதப்படும் தொந்தியைக் குறைக்க, இஞ்சியுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நல்ல பயன் உண்டாகும். (500 கிராம் இஞ்சியைத் தோல் நீக்கி இடித்துச் சாறு பிழிந்து பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து சிறு தீயிட்டு எரிக்கவும். சுண்டியதும் இறக்கி விடவும். சாறு எவ்வளவு இருக் கிறதோ அந்த அளவுக்கு தேன் ஊற்றி மீண்டும் அடுப்பில் வைத்து சிறு தீயாக ஒரு நிமிடம் எரித்து இறக்கி பத்திரத்தப்படுத் தவும். அதனை, காலை சாப்பாட் டுக்கு அரைமணி நேரத்துக்கு முன்பும், மாலை 6 மணிக்கும் ஒரு மேசைக்கரண்டி அளவு 40 நாள்கள் தொடர்ந்து உட் கொண் டால் தொந்தி குறையும். அத்துடன் உணவுக் கட்டுப்பாடும், உடற் பயிற்சியும் அவசியம். பகல் தூக் கத்தை தவிர்ப்பது நல்லது

12.நான்கு கரண்டி அளவுள்ள இஞ்சிச் சாறுடன், சிறிது உப்பு மற் றும் சில துளிகள் எலுமிச்சம் சாறு மற்றும் தண்ணீர் சேர்த்து அருந் துவது, இஞ்சி ஜூஸ் ஆகும். இது மஞ் சள் காமாலை, ஆஸ்துமா, சளி ஆகியவற்றை நீக்க வல்லது.

13.தொடர்ந்து மேற்சொன்ன இஞ்சி ஜூஸ் தினமும் அருந்துபவர் களுக்கு நாக்கு, தொண்டையில் புற்றுநோய் ஏற்படுவதை தடுப் பதாகவும் மருத்துவர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

14.இஞ்சியைக் கழுவி மேற் றோலை எடுத்துவிட்டு வில்லை களாக நறுக்கி உலர வைத்துவிட வேண்டும். பின்பு எலுமிச்சம் பழச்சாற்றில் தேவையான அளவு உப்புப் போட்டு, இஞ்சித் துண்டு களைக் கலந்து ஊற வைக்க வேண்டும். இவற்றை வெயிலில் உலர்த்தி கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு வைத்துக் கொண்டு காலையில் ஓரிரு துண்டுகள் சாப்பிட்டு வரலாம். இதனால் பலவகையான நோய்கள் குணம டைவதுடன், புளி ஏப்பம், வாந்தி, மயக்கம், வயிறு உப்புசம், அஜீரணம் நீங்கும்.

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தாய்ப்பால் சுரக்கும் உணவுகள்

குழந்தைகளுக்கான அனைத்து விதமான ஊட்டச்சத்துக்களும் தாய்ப்பாலில் இருந்து தான் கிடைக் கின்றன. இதனால் தான் 6 மாதங் கள் வரை குழந்தைகளுக்குத் தாய்ப் பால் தர வேண்டும் என்று மருத் துவர்கள் அறிவுறுத்துகின்றனர். சத்தான உணவுகளை உட்கொள் ளாததால் சில பெண்களுக்குத் தாய்ப்பால் சுரப்பதில் பாதிப்பு ஏற் படும். தாய்ப்பால் சுரக்காத பெண் கள் வீட்டிலேயே எளிதான மருத் துவ முறைகளை மேற்கொள்ள லாம். அதிமதுரம் பொடியை சிறி தளவு சர்க்கரை கலந்து 2 முறை



பாலுடன் குடித்து வந்தால் தாய்ப் பால் பெருகும். அருகம்புல் சாறு டன் தேன் கலந்து சாப்பிட்டு வந் தால் தாய்ப்பால் பெருகும். முருங் கைக் கீரையை லேசாக தண்ணீர் விட்டு வேகவைத்து அதைத் தாளித்து சாப்பிட்டால் தாய்ப் பால் அதிகரிக்கும். முருங்கை இலையும் பாசிப் பருப்பும் சேர்த்து சாப்பிட்டால் தாய்ப் பால் அதிகம் சுரக்கும். அதே போல் ஆலம் விழுதின் துளிர், விதையை அரைத் துக் காலையில் மட்டும் பாலில் சேர்த்துவர தாய்ப் பால் பெருகும். குழந்தை பெற்ற பெண் களுக்கு வெள்ளைப் பூண்டை நல்லெண்ணெயில் வதக்கி அதனுடன் கருப் பட்டியுடன் கலந்து சாப்பிடக் கொடுத்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். உட லில் உள்ள தேவையற்ற கழிவு களை வெளியேற்றவும் வெள் ளைப் பூண்டு உதவுகிறது. கருப் பட்டியில் உள்ள இரும்புச் சத்து தாய்ப்பால் வழியாக குழந்தை களுக்கு போய்ச் சேர்கிறது. மேலும் பசும் பாலில் பூண்டு சேர்த்து அரைத்துக் காய்ச்சிக் குடித்தால் பால் அதிகம் சுரக்கும்.

## நாளை

ஐப்பசி-29 ஞாயிற்றுக்கிழமை
(15.11.2015)

திதி:
சதுர்த்தி: பி.இ.01.34 வரை
நட்சத்திரம் :
மூலம்: மு.இ. 07.14 வரை

சுபநேரம்:
09.07-10.37 வரை
இராகு காலம்:
04.37-06.07 வரை
சதுர்த்தி விரதம்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 6 | | 3 | | | |
| | | | | | | 9 | | |
| | | | 2 | 9 | | | 4 | |
| 1 | | 9 | | | | | | 7 |
| | | 7 | | | | 1 | | |
| 2 | | | | | | 5 | | 8 |
| | 8 | | | 4 | 7 | | | |
| | | 6 | | | | | | |
| | | | 5 | | 2 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 6 | 4 | 5 | 1 | 3 | 7 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 2 | 7 | 8 | 9 | 1 |
| 1 | 7 | 2 | 9 | 8 | 3 | 5 | 4 | 6 |
| 9 | 6 | 8 | 2 | 7 | 4 | 1 | 3 | 5 |
| 2 | 3 | 1 | 5 | 6 | 9 | 4 | 8 | 7 |
| 4 | 5 | 7 | 3 | 1 | 8 | 2 | 6 | 9 |
| 7 | 8 | 9 | 1 | 4 | 5 | 6 | 2 | 3 |
| 5 | 2 | 4 | 7 | 3 | 6 | 9 | 1 | 8 |
| 6 | 1 | 3 | 8 | 9 | 2 | 7 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மனவலிமையை அதிகப்படுத்துங்கள்


தொடங்கப்பட்ட முயற்சியில் தடை உண்டானால், மனவலிமையை மேலும் அதிகப்படுத்திப் பாடுபடுங்கள். விடாமுயற்சியுடன் செயலை நிறைவேற்றி மகிழ்வதே உயர் வாழ்வுக்கான அறிகுறியாகும். பெரியவர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது. இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய மூன்றும் நமக்குத் தேவை.






## ஜூலை

சூரியன் கடக ராசியில் சஞ்சரிப்பதை ஜூன் மாதமென்று அழைக்கின்றோம். இந்த ராசி சந்திரனுக்கு ஆட்சி வீடும், குருவுக்கு உச்ச வீடும், செவ்வாய்க்கு நீச வீடுமாகும். பஞ்ச தத்துவங்களில், இந்த மாதம் நீரைக் குறிக்கின்றது. சந்திரனின் அம்சங்களாகிய சாந்தம், அமைதி, பொறுமை காக்கும் தன்மை, கலை ஆர்வம், எல்லாவற்றிலும் பற்றுடைமை, சங்கீதம், நடனம், நாடகத்துறைகளில் பிரியம், மேலோரிடத்தில் மரியாதை, கடவுள் பக்தி, நேர்மை முதலியவை இந்த மாதத்தில் தோன்றியவர்களிடத்தில் சிறந்து விளங்கும். நடுத்தர உயரமுடைய இவரது இடைக்கு மேற்புறம் பருத்தும் கால்கள் சிறுத்தும் காணப்படும். உருண்டு, திரண்ட அங்க அமைப்புடையவர். தலை மேற்புறம் நீண்டு இருக்கும். உரோமங்கள் நீண்டும் அடர்த்தி குறைந்தும் காணப்படும். சிறிய கழுத்தும் கூரிய மூக்கும் புருவங்கள் உயர்ந்தும் கண்கள் நீர் படிந்தும் காணப்படும். சுறுசுறுப்பான தோற்ற முடையவர். நீண்ட நேரம் ஓரிடத்தில் தங்குவது அரிது. இந்த ராசி சந்திரனுக்குரியது. சந்திரன் எவ்வளவு துரிதமாக மாறுதலடைகிறதோ, அதே ரீதியில் ஜூன் மாதத்தில் பிறந்தவர்கள் தம்முடைய செயலிலும் நடையிலும் மனோபாவத்திலும் கொள்கையிலும் கருத்துகளிலும் பிறர் புலனுக்குத் தோற்ற மளித்திடுவர். 'முந்திரிக் கொட்டைகள்' என்று மற்றவர்களால் அழைக்கப்பெறுவர். கடகம் அல்லது நண்டு என்று, இந்த ராசி வடிவத் தைக் கொண்டு காரணப் பெயர் வைத்திருப்பதால், நண்டின் சுபாவமும் இவரது சுபாவமும் ஒத்ததெனக் கூறலாம். நண்டு இரை தேட வெளியே பரபரப்புடன் ஓடி உலாவும். இருக்கும் இடம் தெரியாமலும் பதுங்கியிருக்கும். ஆனால், மற்ற வரது பார்வை தன் மீது படுமிடத்து விர்ரென ஓடி ஒளிந்துகொள்ளும். ஜூன் மாதத்தில் பிறந்தவர்களும் தங்களது காரியங்களில் ஈடுபடும்போது மற்றவர் எதிரே வந்தால் சட்டென்று மறைந்துகொள்வர். பயந்த சுபாவமுடையவர். யார் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற அச்சம் இவரை விட்டு நீங்குவது வாழ்நாளில் அரிது. பிடிவாத குணமுடையவர். தான் தோல்வியுற்றாலும் தனது வாதத்தை விட்டுக்கொடுக்க மாட்டார். கவனமின்மை, உதாசீனம் போன்ற குணங்களால் எதையும் பொருட்படுத்தமாட் டார். முக்கியமான விடயங்களை உடனே மறந்துவிடுவார். இவர் சரிவர விளங்கிக் கொண்டவை கொஞ்சம் தான் என்றாலும் ஆயுள் வரை மறக்கமாட்டார். எவ்வளவு நுணுக்கமான விடயமாயிருந்தாலும் இவரது கவனத்திலிருந்து மாறாது. நடந்த விடயங்கள் பற்றி அடிக்கடி பிரலாபிப்பார். குறுக்குப் புத்தியுடையவர். எதிலும் ஆழ்ந்த கருத்தும் கற்பனையும் உடையவர். இரக்க குணமுடையவர். குடும்பத்தில் மிகுந்த அக்கறையிருந்தாலும் சுய நலப் பேர்வழி. சீர்திருத்தக்கொள்கைகளுக்கு ஆதரவாக இவரது பேச்சு இருக்கும். ஆனால் சம்பிரதாயப் பழக்கங்களையே கைக் கொள்வார். பெரும்புகழைத் தேடவேண்டும் என்பது, இவரது வாழ்நாள் இலட்சியமாக இருக்கும். ஆனால், பெரும் பணக்காரனாகவோ, பதவிகளை அடையும் எண்ணமோ கிஞ்சித்தும் இருக்காது. சிக்கனமாக இருப்பதை விரும்புவார். ஆனால், இவர் கைவைக்கும் காரியங்களில், இரு மடங்கு செலவினங்கள் வந்து இவரது கனவைக் கலைத்துவிடும். தாராள மனப்பான்மையிருந்தாலும் கை சற்று அழுத்தம். நேரம் தவறினாலும் சுவையான, போக்கான உணவு வகைகளையும் இனிப்பு வகைகளையும் ஒரு கை பார்ப்பார். கடன் பட்டேனும் வசதியை உயர்த்திக் கொள்வர். இவர் பயன்படுத்தும் பொருள்களை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பார். சந்தர்ப்பத்துக்கேற்ப சமாளிக்கும் திறமையும் தெளிவும் இவருக்குக் கை கொடுக்கும். மற்றவர்களின் எண்ணவோட்டத்தை சீக்கிரமாகக் கிரகித்துக் கொள்வார். இவரை நன்கறிந்தவர்கள் இவரிடத்தில் பழகும்போது மிகக் கவனமாகவே நடந்துகொள்வர். சின்னச் சின்ன நோய்களுக்கெல்லாம் பயந்து நடுங்குவார். தேவைக்கு அதிகமாகவே நோய்களைப் பற்றி கரிசனம்கொள்வார். நோய் இல்லாவிட்டாலும் ஏதோ ஒன்று பற்றியிருப்பதாகப் பாவித்திடுவார். இக்கட்டான சூழலில் அதைவிட்டுத் தப்பிக்க நினைக்க மாட்டார். அதேசமயம், இவருக்கு வாக்குறுதி அளித்தவர்கள் அதை நிறைவேற்ற வேண்டி நச்சரித்திடுவார். அடிமை வாழ்க்கையை ஒரு நாளும் விரும்பமாட்டார். எந்தத் தொழில் செய்தாலும் சுயமாகச் செய்வது தான் நன்மை தரும் என்று தீவிரமாக நம்புவார். யாருடனும் கூட்டுச் சேர்ந்திட மறுத்திடுவார். சுயேச்சை விரும்பி. ஜூனில்; பிறந்தவர்களுக்கு அலைச்சல் மிகும். எந்நேரமும் பயணத்திலேயே பொழுதைக் கழிக்க வேண்டியிருக்கும். இடத்துக்கு ஏற்ப எது கிடைத்தாலும் உணவாக உட்கொள்வதால் அஜீரணக் கோளாறுகள், தலைவலி, நெஞ்சுவலி போன்றன ஏற்படும். எண்ணெய் மற்றும் கொழுப்பு நிறைந்த உணவு வகைகளை கூடியவரை தவிர்த்தல் நன்மை தரும். உரிய வேளை களில் போஷாக்குநிறைந்த ஆகாரத்தை உட்கொள்வது சுகம் தரும். அடிக்கடி ஏற்படும் மலச் சிக்கலாலும் கண்பார்வைக் கோ ளாறு, நீர் கசிதல் போன்றவையாலும் தாள முடியாத தலைவலி ஏற்படும் வாய்ப்புண்டு. மலச்சிக்கல் இல்லாவிட்டால் உடலில் நோய்கள் தோன்ற மாட்டா. கீரை வகைகள், பழவகைகள், பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் வைத்துத் தலை முழுகுதல் கூடுதல் பயன் தரும். முன்னேற்றப் பாதையில் இவர் முன்னணியில் இருப்பார். கூச்ச சுபாவமுடையவர் என்றாலும் தேவையானபோது கூட்டங்களில் பங்கேற்பார். புதிதாக எதையும் படைப்பதைவிட, ஏற்கனவே படைக்கப்பட்டதை மேன்மேலும் வளர்த்தெடுப்பதில் இவருக்கு நிகர் இவரே தான். நட்டம் ஏற்படும் வாய்ப்பு உண்டெனில் தலைவைத்தும் படுக்கமாட்டார். தன்னிடமுள்ள வளங்களையே பெரிதாக நினைத்திடுவார். எளிதில் இவரை ஏமாற்ற முடியாது. ஆனால், இவராகவே ஏமாறக்கூடிய நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் அடிக்கடி தோன்றும். அவ்வாறான சூழலில்கூட, விரைவாக ஏமாற்றத்திலிருந்து மீண்டு வருவார். அமைதியை விரும்புவார். பிறருடைய கஷ்டத்தைக் கிஞ்சித்தும் எண்ணிப்பார்க்க மாட்டார். பொறுப்புகளை ஏற்பதற்குத் தயங்குவர். பண விவகாரங்களிலும் அப்படியே. இவரிடத்திலிருந்து அனுகூலங்களைப் பெறுவது மிகக் கடினம். வந்தவர்களை சாக்குப்போக்குச் சொல்லி அனுப்பிவிடுவார். உறவினர்கள் மீது அதிக பற்றற்றவர். ஆனாலும் மிக நெருங்கிய உறவினர்கள் இவரை நேசித்திடுவர். எளிதில்வராது கோபம். வந்தால் கண் மூடித்தனமாக எதையும் செய்திடுவார். அது குறித்துப் பிறகு வருந்துவர். நிலையற்ற மனம் உள்ளவர். வளர்ச்சிக்குரிய காரியங்களையும் பத்திரப்படுத்தக்கூடிய சேமிப்பு விவகாரங்களையும் இவரிடத்தில் ஒப்படைப்பது சிறந்ததாகும். நவம்பர், மார்ச் மாதங்களில் பிறந்தவர்களை வாழ்க்கைத் துணையாக வரித்துக்கொண்டால், அமைதியான வாழ்க்கை கைகூடும். ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பிறந்தவர்களை நண்பராகவோ, துணையாகவோ கொண்டால் மனக்கசப்பே மிஞ்சும். ஓரிடத்தில் தங்கிச் செய்யும் தொழில்கள் இவருக்குச் சரிப்படாது. சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபடும் பணிகள் இவருக்கு உகந்தவை. நீரேந்துப் பிரதேசங்களில் இவர் பணியாற்ற நேரிடும். இலாபம் இல்லை என்றெண்ணும் காரியங்களில் இவர் கலந்துகொள்ள மாட்டார். மக்கள் நெரிசலாகப் புழங்கும் இடங்கள், இவர் தொழில் செய்ய உகந்தவை. உணவுச்சாலைகள், கலையகங்கள், நெசவாலைகள், எண்ணெய் தொடர்பான தொழிற்சாலைகள், கடலிலிருந்து எடுக்கப்படும் பொருள்களை வாங்கும் விற்கும் வியாபாரத் தலங்கள், குடிபான வகைகளைத் தயாரிக்கும் நிலையங்கள், காகிதம் தொடர்பான தொழில்கள் இவருக்கு நல்லாதாயம் சம்பாதித்துத் தரும். படம் வரைதல், நிழல் உருவங்கள் தயாரித்தல், வர்ணக் கலவை வேலைகள் போன்றனவும் பெயர் வாங்கித் தரும். அச்சுத்தொழில் உறுதுணையாக அமையும். பெரிய மூலதனம் இல்லாமல் உடனுக்குடன் விற்றுத் தீர்க்கும் பொருள்களை வாங்குதல், விற்றல், பருவத்துக்கேற்ற பொருள்களை விற்று குறுகிய காலத்தில் பெரிய இலாபத்தைத் தரும் தொழில்களில் ஈடுபடுவர். எந்தச் சூழ லிலும் வளைந்து கொடுத்து தம்மைக் காப்பாற்றிக்கொள்வதில் சாமர்த்தியர்கள்.




# பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

சமுதாய எழுச்சியில் பெண்கள் வகிக்கும் பங்கு அளப்பரியது. பெண்களைப் புறந்தள்ளிய எந்தவொரு சமூகமும் தேசிய சங்கமிப்பை ஏற்படுத்திக்கொண்டதாகச் சரித்திரமே இல்லை. இதனை உலக வரலாறுகள் நிரூபித்துள்ளன. எனினும் தந்தை வழி சமூக அமைப்பு என்று கூறப்படும் கருத்தியலின் அடிப்படையில் ஆணாதிக்க தன்மை மேலோங்கியுள்ள நிலையில், பெண்களின் கருத்துக்கள் எந்தளவுக்கு உள்வாங்கப்படுகின்றன என்பதும்-சமூக மட்டத்தில் அவர்களது தேவைகள் எந்தளவுக்கு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பது ஆண்களாலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு விடயமாகும். எனினும் இது வெறும் வாய் மொழிக்கூற்றாகவே உள்ளதேயன்றி நடை முறையில் பெண்கள்சார் அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், மேலெழச் செய்வதற்கும், ஆண்களின் ஒத்துழைப்பு போதுமானதாக அமையவில்லை. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெண்கள் இன்று பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருவதை எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. அரசியல்,

சமூகம், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற பல் வேறு மட்
டங்களில் பெண்கள் இன்னும் குறிப்பிடத்தக்க எழுச்சியைக்
காணவில்லை என்பது கசப்பான உண்மையாகும். சமத்துவத்
தின் அடிப்படையில் பெண்களின் அரசியல் பங்களிப்பைப்
பலப்படுத்துவதும் மற்றும் சமூகப், பொருளாதார அரசியல் தளங்
களில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பெண்களின் பாத்
திரத்தைப் பலப்படுத்துவதும் இருபதாம் நூற்றாண்டின் பெண்
களின் உரிமைக்கான போராட்டத்தின் பிரதான நோக்கமாக
இருந்ததென சுனிலா அபேசேகர போன்ற பெண்ணிலைவாதி
கள் சுட்டிக் காட்டி இருக்கின்றனர். எனினும் இந்த இலக்குகள்
எந்தளவுக்கு அடையப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயப்பாடுகள்
வலுப்பெற்றுள்ளன. இந்த வகையில் அரசியல் துறையை எடுத்
துக் கொண்டால், பெண்களின் குடும்பக் கட்டமைப்பு பெண்கள்
அரசியல் துறையில் நுழைவதைத் தடுக்கின்ற பிரதான காரணி
யாக விளங்குகின்றது. பெண்கள் அமைதியானவர்கள், சமூக
செயற்பாடுகளில் ஆண்களே பிரதான சூத்திரதாரிகளாக விளங்க
வேண்டும் என்ற பாரம்பரிய சமுதாய கோட்பாடுகள் பெண்களை
அரசியல்துறையில் நுழையவிடாது தடுக்கும் பிரதான சக்தி
யாக இனங் காணப்படுகின்றது.


(தொடரும்)

உதயன் | சனிக்கிழமை | நவம்பர் 14 | 2015

# தவளை இளவரசன்

அது ஒரு மாலை நேரம். இளவரசியின் தோழிகள் எவரும் அவளுடன் இருக்கவில்லை. அரண்மனையின் பின் பக்கம் ஒரு ஒற் றையடிப்பாதை இருந்தது. அருகிலிருந்த குளம் தாமரைப்பூக்களால் நிறைந்து பார்க்க அழகாக இருந்தது. சிறிது நேரம் அந்த அழகைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள் இளவரசி. அந்தக் குளத்தை ஒட்டி ஒரு பாறை இருந்தது. அந்தப் பாறையில் அமர்ந்து இயற்கை அழகை இரசித்துக்கொண்டிருந்த இளவரசி எழுந்து தனது கையிலிருந்த தங்கப் பந்தை தூக்கிப் போட்டு விளையாட ஆரம்பித்தாள். ஒரு முறை உயரமாகத் தூக்கிப் போட பிடிக்க முடியாமல் பந்து பாறையில் விழுந்து உருண்டோடிக் குளத்துக்குள் விழுந்தது.


தங்கப் பந்து என்பதால் குளத்துக்குள் உடனே மூழ்கத் தொடங்கியது பந்து. இளவரசிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. "எவராவது எனது தங்கப் பந்தை எடுத்துக் கொடுத்தால் எனக்குச் சொந்தமானதையெல்லாம் கொடுத்து விடுவேன்;" என்று அழுது கொண்டே கத்தினாள். அப்போது "இளவரசியே, ஏன் அழுகிறீர்கள்? என்று ஒரு குரல் கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தாள் இளவரசி. அந்தக் குரல் குளத்திலிருந்து வந்தது. அதுவும் தாமரை இலையில் அமர்ந்திருந்த தவளையொன்றுதான் பேசியது. அந்தத் தவளை பேசுவது இளவரசிக்கு வியப்பாக இருந்தது. "தவளையான உன்னால் எனக்கு எப்படி உதவ முடியும்?''என்று கேட்டாள் இளவரசி. "முதலில் என்ன செய்ய வேண்டும் என்று



சொல்லுங்கள்; என்னால் முடிந்தால் செய்கிறேன்" என்றது தவளை. "எனது தங்கப் பந்து இந்தக் குளத்துக்குள் விழுந்து விட்டது. அதை உன்னால் எடுத்துத் தரமுடியுமா? என்று கேட்டாள் இளவரசி. "என்னால் முடியுமே" என்றது தவளை. "எனது தங்கப் பந்தை எடுத்துக் கொடுத்து விடு. எனக்குச்சொந்தமான அனைத்தையும் உனக்குத் தருகிறேன்" என்றாள் இளவரசி. "எனக்கு அதெல்லாம் வேண்டாம்; நான் கேட்பதைச் செய்வதாகச் சொன்னால் எடுத்துத் தருவேன்" என்றது தவளை. "சரி, என்ன வேண்டுமானாலும் கேள். நீ எனக்கு உதவினால் நான் உனக்கு உதவுவேன்"என்றாள் இளவரசி. "நீ சாப்பிடும் தங்கத் தட்டில் நானும் சாப்பிட அனுமதிக்க வேண்டும். உன்னுடைய படுக்கையில் நான் படுத்துத் தூங்க அனுமதிக்க வேண்டும். இதையெல்லாம் நீ செய்ய ஒத்துக் கொண்டால் நான் உனது பந்தை எடுத்துத் தருவேன் என்றது தவளை. "நீ, மட்டும் எனது பந்தை எடுத்துக் கொடுத்து விடு; நீ கேட்டதையெல்லாம் நான் செய்வேன்" என்றாள் இளவரசி. தவளை 'தொப்' என்று குளத்துக்குள் பாய்ந்தது. குளத்தின் ஆழம் வரை சென்று தேடித் தங்கப் பந்தைக் கண்டுபிடித்தது. அதை மேலே எடுத்து வந்து குளக்கரையில் போட்டது. அவ்வளவுதான், ஓடிப்போய் இளவரசி அந்தப் பந்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றாள். அவள் ஒரு நன்றி கூடச் சொல்லாமல் போவதைப் பார்த்த தவளைக்கு மிகவும் வருத்தமாகி விட்டது. 'இளவரசியாரே, நில்லுங்கள். நீங்கள் சொன்னபடி நடந்துகொள்ள வேண்டும். என்னை உங்களோடு எடுத்துச் செல்லுங்கள். நில்லுங்கள், இளவரசி..." என்று தவளை கத்தியது. ஆனால், இளவரசி எதுவும் காதில் விழாதது போல வேகமாக நடந்து போய் விட்டாள். அன்று இரவு..... இளவரசி, அரசர்,அரசியாரோடு உணவு உண்ணும் நேரம். இளவரசி ஒரு வினோதமான சத்தத்தைக் கேட்டாள். 'தப்..தப்..சப்.. சப்...' அந்தச் சத்தம் பளிங்குக் கல் மாடிப் படிக்கட்டில் இருந்து வந்து சாப்பாட்டுக் கூடக் கதவு வரை வந்து நின்றுவிட்டது. மெல்லக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. 'என் அருமை இளவரசியே, கதவைத் திற! உன் அருமை தவளை இங்கே! கதவைத் திறந்து பார், உன்னை நேசிக்கும் ஓர் உயிர் உனக்காகக் காத்திருக்கிறது! சொன்ன வாக்கு தவறுதல் அழகா? குளக்கரையில் நீ சொன்ன வாக்கைத் தவறாமல் காப்பாற்ற வேண்டாமா?" - என்று இனிமையாகப் பாடியது அந்தக் குரல். இளவரசி வேகமாகப் போய்க் கதவைத் திறந்து பார்த்தாள். அங்கே தவளை காட்சியளித்தது. தவளையை இளவரசி அங்கே எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)




# நீங்கள் விரும்புவதைக் கேளுங்கள்!

நீங்கள் விரும்புவதைக் கேட்டுப் பெறக் கூடிய திறமையும், நீங்கள் விரும்புவதைப் பெறமுடியும் என்கின்ற நம்பிக்கையும் இருந்தால் இந்த உலகம் உங்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுத் தரும். சில மனிதர்கள் உண்மையிலேயே கேட்பதிலும், அவர்கள் விரும்புவதைப் பெறுவதிலும் புத்திசாலிகள். ஏனென்றால் அவர்களால் அது முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதிர்ஷ்டத்துக்கு இதில் சிறு பங்குதான் என்றாலும், மற்றவர்கள் இவர்களை மிகவும் அதிர்ஷ்டசாலிகளாகத்தான் பார்ப்பார்கள். சுய-பரிணாமத்துக்கான உபகரணங்களில் மிக முக்கியமானது, தான் விரும்புவதைக் கேட்கக்கூடிய ஆற்றல்.

பலர் தாங்கள் விரும்பும் அல்லது தங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை எப்படி கேட்பது என்று தெரியாததால் பின் தங்கி விட்டார்கள். அவர்கள் தகவல்கள், வழி, உதவி, புதிய கண்டுபிடிப்புக்கான பண உதவி மற்றும் ஊதிய உயர்வு மூலம் சிறந்த வாழ்க்கை ஆகியவற்றை கேட்டுப் பெறப் பயந்தவர்கள். அவர்கள் முட்டாள்களாகவோ, தேவை உடையவர்களாகவோ பார்க்கப்பட்டு விடுவோமோ என்ற உணர்வால் தடுக்கப்பட்டவர்கள். ஆனால் நீங்கள் விரும்புவது ஒரு முத்தம், அரவணைப்பு, அடுத்தவரின் பொன்னான நேரம், கவனிப்பு மற்றும் நம்பிக்கையானவர் என்று எதுவாக இருந்தாலும், தேவையென்று நீங்கள் நினைத்தால்




கேளுங்கள். எது எப்படி இருந்தாலும், கேட்க வேண்டும் என்ற நிலை வரும்போது நம்முள் எழும் மிகப் பெரிய கேள்வி 'நீ கேட்பாயா?!' என்பது தான். மற்றவர்கள் எம்மைப் பற்றி இப்படித்தான் நினைத்து வைத்திருப்பர் என்று ஒரு பொழுதும் முடிவு செய்யா தீர்கள். அவர்கள் உங்கள் எண்ணங்களைத் தாமாகப் படித்து வேண்டியதைக் கொடுப்பார்கள் என்றும் உறுதி செய்யாதீர்கள். எப்பொழுதும் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பதை நீங்களாக அடுத்தவருக்குச் சொல்லும் வரை எவராலும் அது என்னவெனச் சரியாகக் கணிக்க முடியாது. நீங்கள் ஆசைப்பட்டதைக் கேட்க அச்சப்படுவது உங்கள் வாழ்க்கை மற்றும் கனவுகளின் மூலம் நீங்கள் அடையக்கூடிய சிறந்தவற்றை இழந்ததாக ஆகிவிடும். சிறு பிள்ளைத் தனமுடையவரோ, முட்டாளோ அல்லது தேவையுடையவரோ நாம் என்ற பய உணர்வு கேட்பதில் இருந்து நம்மைத் திசை திருப்பும். அடுத்ததாக நிராகரிக்கப்பட்டு விடும் என்ற பயம் நாம் விரும்புவதைக் கேட்பதற்கான தைரியத்தையும் தராது. எம்மில் பலருக்கு நிராகரிப்பின் மேல் ஒரு சாவுப்பயம். இந்த நிராகரிப்பின் மீதான சாவுப்பீதி என்பது நாம் உருவாக்கி எமக்கே கொடுத்துக் கொண்ட ஒன்றுதான். நாம் கேட்பவை நிராகரிக்கப்பட்டுவிடும் எனும் பயத்தை எமக்குள் உருவாக்கி விடுகிறது.. இறுதியில் 'இல்லை' என்ற பதில் நாம் எம்மைப் பற்றி முதலில் நம்பியதற்கு வெறும் சாட்சியாகத்தான் வருகிறது. ஒரு பொருளுக்கு ஆசைப்படும் பொழுது அது கிடைக்காதென்று முடிவு செய்யாமல், அதைப் பெறுவதற்கான அனைத்து நல்ல குணாதிசயங்களும் எமக்குள்ளன என்பதை நம்புவது மிக முக்கியம். நீங்கள் கேட்கும் நபர் இல்லையென்று சொன்னாலென்ன? எதை இழந்தீர்கள்? எதுவும் இல்லை. உங்களுக்கு ஏதாவது



வேண்டுமென்றால் தொடர்ந்து உறுதியாக மீண்டும் மீண்டும் கேளுங்கள். நீங்கள் விரும்புவதைக் கேட்கத் தயாராக இருங்கள். அது ஊதிய உயர்வாகவோ, விடுமுறையாகவோ, நீண்ட உணவு இடைவேளையாகவோ, தள்ளுபடியாகவோ மற்றும் ஒப்பந்தமா கவோ இருக்கலாம். உங்களால் விருப் பப்படுவது எதுவாக இருந்தாலும் கேட்கத் தொடங்குங்கள் மற்றும் பெறுவீர்கள் என்று எதிர்பாருங்கள். மேலும், மீண்டும் கேட்கத் தயாராகுங்கள் கிடைக்கும் வரை. தங் களுக்குள் தாங்கள் கேட்கும் இந்த மூன்று கேள்விகள் ஒரு சிறந்த பயிற்சியாக அமையும். நான் விரும்புவது எனக்கு கிடைக்கப்பெற்றால் நான் எப்படி இருப்பேன்? நான் அதை எப்படி உணருவேன்? நான் அதனுடன் என்ன செய்யப் போகிறேன்? அதே தருணத்தில், சில நேரங்களில் தாங்கள் விரும்புவது கிடைக்காமலும் போகலாம். ஆனால் உண்மையில், விரும்புவதைக் கேட்பது உங்களுக்குச் சிறந்த சந்தர்ப்பங்களையும் நீங்கள் விருப்பப்படுவது கிடைக்கும்வரை மீண்டும் மீண்டும் கேட்பதற்கும் கற்றுத் தரும்.

## மரண அறிவித்தல்கள்



### அருளம்பலம் கனகரெத்தினம்

(A.K. பிரபல வர்த்தகர், யாழ். பெரியகடை மரக்கறிச்சந்தை)

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் கனகரெத்தினம் 12-11-2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-பூமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் மீரா ஆகியோரின் பாசமிகு கணவரும், துஷாந்தினி(பிரான்ஸ்), விமல்ராஜ்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றெக்னோ(பிரான்ஸ்), பிரதீபா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பரமேஸ்வரி(இலங்கை), காலஞ்சென்ற பராசக்தி மற்றும் இரத்தினகிளி(இலங்கை), யோகேஸ்வரி (இலங்கை), ராகினிதேவி(பிரான்ஸ்), ரஞ்சினிதேவி(சுவிஸ்), கலியுகவரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான மகாலிங்கசிவம், ராஜலிங்கம், குழந்தைவேலு மற்றும் சுந்தர்லிங்கம் (இலங்கை), தங்கேஸ்வரன்(பிரான்ஸ்), புவனேந்திரன் (இந்திரன்- சுவிஸ்), மாலினி(பிரான்ஸ்), பத்மநாதன்(கனடா), தனபாலசிங்கம்(கனடா), குணராணி (நெதர்லாந்து), சிவகுமார்(நோர்வே), திருப்புவனன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றெவின் (பிரான்ஸ்), ஆஷிகா (பிரான்ஸ்), அக்ஷனா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**145, கொழும்புத்துறை வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**
**(சந்தனமாதா கோயிலுக்கு அருகில்)**
**077 9059 031**

(C/20059)(10.15.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சின்னையா சண்முகநாதன்



ஊரங்குனை கட்டுவனை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகநாதன் வியாழக்கிழமை 12.11. 2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-அன்னமுத்தி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - சிவஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலராணியின் அன்புக் கணவரும் தேனகா (கனடா), டனுசன், லக்சனா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் பிரதீபனின் (கனடா) பாசமிகு மாமனாரும் ஆருஜன், அனோஜன் ஆகியோ ரின் பாசமிகு பேரனும் சுந்தரலிங்கம் (நோர்வே) காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் நேசமலர் (கொழும்பு), சிவமணி (சுவிஸ்), சிவானந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவமனோகரி (கனடா) காலஞ்சென்ற சபாலிங்கம் மற்றும் விக்கினேஸ்வரலிங்கம் (கனடா), சிவலிங்கம் (ஜேர்மன்), சோதிலிங்கம் (கனடா), பரமலிங்கம் (லண்டன்), குகன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (15.11. 2015) மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(66088)

தகவல் : குடும்பத்தினர்
டனுசன் - மகன்
**075 4161150**

# கண்காட்சியும் கலை நிகழ்வும்

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும், கலைநிகழ்வும் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றன.

வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார். கௌரவ விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் பங்கேற்பார். (9)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தியாகராஜா



மட்டக்களப்பு முனைத்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நீராவியடியை (இந்துக்கல்லூரி வீதி) வசிப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை தியாகராஜா நேற்று (13.11.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**2/1, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார் பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**


(66089)
(10.17)

**தகவல்: மனைவி**
**தொ. பே:**
**021 2225048**

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

**(முன்னாள் நடத்துநர் இ.போ.ச.யாழ்.சாலை)**



மந்துவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் 12.11.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் சுபாஜினா (பிரான்ஸ்) காலஞ்சென்ற சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபானந்தகுமாரின் (பிரான்ஸ்) அன்பு மாமனும் பவிக்ஷன் (பிரான்ஸ்) பானுஜா (பிரான்ஸ்) தரங்கினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்லம்மா சிவபாக்கியம் (ஓய்வுநிலை ஆசிரியை - லண்டன்) இராசம்மா (ஓய்வுநிலை ஆசிரியை - மீசாலை) இரத்தினம் (இயக்கச்சி) சின்னம்மா (மிருசுவில்) ஞானப்பிரகாசம் (MLT லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புத்தூர் வீதி,**
**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

(C/20059)(10.15.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## செல்லையா சுந்தரலிங்கம் (சுந்தர் மாமா)



இல-07(21), ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த (10.11.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - உருக்குமணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான தயாபரம் பிள்ளை மற்றும் யோகம்மா (நயினாதீவு-5) தம்பதியினரின் மருமகனும் கௌரியின் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் யா/வேம்படிமகளிர் உயர்தர பாடசாலை) பாசமிகு கணவரும், லீலாமணி(கனடா) காலஞ்சென்ற தனபாலசிங்கம் (தனம்) மற்றும் அருணா (கனடா), கணேசலிங்கம் (சுரேஸ் - ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி (கனடா), திலகவதி (கிளி), குணசீலன், சத்தியபாமா (ஜேர்மனி), பொன்னுத்துரை காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் அமிர்தகௌரி (ஜேர்மனி), சுரேஸ்குமார் (டென்மார்க்), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் கணேசமலர், ரவீந்திரலிங்கம் (ஜேர்மனி), சாந்தி (டென்மார்க்), சிவமலர் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் துஷாந்தினி, கிரிஷாந்தன், பாலசாந்தன், முரளிசாந்தன், ரகுசாந்தன், பேசி, பிரின்சி, தருண், ரமோனாகௌரி, வினிதகௌரி, சர்மிலன், யுகன் ஆகியோரின் மாமனாரும் கருணாமூர்த்தி, கேமா, வாசுகி, கலைமதி, ஷாலினி, மேனகா, அசங்க, அஸ்வின் ஆகியோரின் சித்தப்பாவும் கரிஷன், யதுஷன், அபிஷா, சங்குகன், சௌமியா, மாதினி, அஜய், அஜீஸ், ஹன்சிகா, அஷ்விகா, கெவின், பென், கிரிஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
இல-07(21), ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 021 222 0648

தகவல்:
**குடும்பத்தினர்.**

## இ.போ.ச. பஸ்

சபையின் பஸ்ஸின் மீதும், வர்த் தக நிலையத்தின் மீதும் கல் வீச்சு தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

தமிழர் தாயகத்தில் நேற்று இடம் பெற்ற முழு அடைப்புப் போராட்டம் அமைதியாக இடம்பெற்றது. இருந்தபோதிலும், யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் இரண்டு அசம்பாவிதங்கள் இடம்பெற்றன.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் மீது மந்திகைச் சந்திக்கு அண்மையாக வைத்து கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் பெரும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை நேற்று மதியம், சுன்னாகம் நகரப் பகுதியில் திறந்திருந்த வர்த்தக நிலையம் ஒன்றின் மீது இனந்தெரியாதோரால் கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு சம்பவங்கள் மாத்திரமே நேற்றைய முழு அடைப்புப் போராட்டத்தின்போது இடம்பெற்றுள்ளன.

கடந்த மே மாதம் முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தின்போது வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டிருந்தன. ஆனால் நேற்றைய போராட்டத்தில் அவ்வாறான எந்தவொரு அசம்பாவிதமும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5-101-109)

## கண்ணீர் அஞ்சலி

### வல்லிபுரம் வைரமுத்து (அப்பாண்ணை)



12.11.2015 ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி **வை.தர்சினி** அவர்களின் பாசமிகு தந்தையார் அமரர் வல்லிபுரம் வைரமுத்து (அப்பாண்ணை) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

## மரண அறிவித்தல்



### கந்தையா துரைசாமி

(முன்னாள் பொது முகாமையாளர் -
பண்டத்தரிப்பு, பளை, பரந்தன் ப.நோ.கூ. சங்கம்)

வடமராட்சி கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும் வவுனியா றம்பைக் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைசாமி அவர்கள் கடந்த புதன்கிழமை (11/11/2015) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா யோக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும் புவனேஸ்வரிஅம்மா (ஓய்வு பெற்ற அதிபர்-முல்லைத்தீவு முத்தையன்கட்டு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் சாந்தி(சுவிஸ்), கருணாகரன்(சுவிஸ்), Dr. உமையாள் (கண்டி) , திலீபன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15/11/2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வவுனியா பூந்தோட்ட இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல- 395/146 E, ஜோசப்வாஸ் வீதி,
றம்பைக்குளம் , வவுனியா.
T.p. 024 2220262**

**தகவல்:-
-குடும்பத்தினர்-**

## சீரற்ற

திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்கு இடியுடன் கூடிய மழைப் பொழிவு காணப்படும்.

அத்துடன் மன்னார் முதல் அம்பாந்தோட்டை வரையான கரையோரப் பகுதிகளுக்கு மணிக்கு 60 தொடக்கம் 70 கிலோமீற்றர் வேகம் கொண்ட கடும் காற்று வீசும் எனவும், மலைநாட்டுப் பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி காணப்படும்.

மேலும் மின்னலால் ஏற்படக்கூடிய இடர்களில் இருந்து பாதுகாப்பு பெறப் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்-என்று கூறியுள்ளது.

இதேவேளை, சர்வதேச வளிமண்டளவியல் ஆய்வு மையமான அக்கு வெதர் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

தெற்கு வங்கக்கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தம் காரணமாக, இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வெள்ள ஆபத்து ஏற்படலாம். இந்த அபாயம் அடுத்த வரும் சில தினங்களுக்கு இருக்கும்.

வங்கக் கடலில் இலங்கைக்குக் கிழக்கே உருவாகியிருக்கும் இந்த காற்றழுத்தம், தீவிரம் பெற்று இலங்கை மற்றும் தென்னிந்தியாவை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், இலங்கையிலும், தென்னிந்தியாவிலும், இந்த வார இறுதியில் அல்லது அடுத்த வார தொடக்கத்தில் வெள்ள ஆபத்து ஏற்படக்கூடும்.

அடுத்த வாரம் திங்கள் முதல் புதன்கிழமை வரையான நாள்களில், தமிழ்நாடு, கேரளா, தென் கர்நாடகா ஆகியவற்றில், கடும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பு, கொச்சி, மதுரை போன்ற இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைப் பொழிவு இருக்கலாம். கோயம்புத்தூர், பெங்களூர், சென்னையில் வெள்ள ஆபத்து உள்ளது- என்றுள்ளது. (த-வ)

## முக்கிய

ஈடுபடுத்தப்பட்டனர்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் எனக் கோரி வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் நேற்று முழு அடைப்புப் போராட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் பொது அமைப்புக்களின் கோரிக்கைக்கு அமைவாக இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தின்போது அசம்பாவிதங்கள் இடம்பெறலாம் என்பதன் காரணத்தினால் பொலிஸார் துப்பாக்கிகளுடன் குவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் குறிப்பிடத்தக்களவு எந்தவொரு அசம்பாவிதங்களோ - வன்முறைகளோ இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணத்தின் நகர்ப் பகுதியில் அதிகளவிலான பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருக்கவில்லை. மன்னார் - வவுனியா மாவட்டங்களிலும் நகர்ப் பகுதியில் மாத்திரம் பொலிஸார் கடமையில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் புலனாய்வுப் பிரிவினரின் நடமாட் டம் அதிகமாக இருந்துள்ளது. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலும் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். முழு அடைப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பொலிஸார் செயற்படவில்லை என்று செய்தியாளர்கள் குறிப்பிட்டனர். (த-5)

## மேலும்

24 பேர் நேற்றுப் பிணை நிபந்தனைக்களைப் பூர்த்தி செய்த நிலையில் சிறைச்சாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோஹண புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

தங்கள் அனைவரையும் விடுவிக்கவேண்டுமென வலியுறுத்தி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இரண்டாம் கட்டமாக சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் நடத்திய முதற்கட்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியை அடுத்து கடந்த 7ஆம் திகதி வரை இடைநிறுத்தினர். எனினும் அரசின் வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் அவர்கள் இவ்வாறு தமது உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்று ஆறாம் நாளாகவும் தொடர்ந்தனர்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை 31 அரசியல் கைதிகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையில் நீதிமன்றினால் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நீதி அமைச்சு தெரிவித்துள்ளதாவது:-

சிறைச்சாலைகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத 59 சந்தேகநபர்களுக்கு மாத்திரம் பிணை அனுமதி வழங்கப்படும். இவர்கள் அனைவரும் 2012ஆம் ஆண்டுக்குப் பின் கைது செய்யப்பட்டவர்கள்.

இதில் கடந்த புதன்கிழமை 31 சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். மேலும் 28 சந்தேகநபர்களின் விவரத்தைச் சட்டமா அதிபர் திணைக்களம் தயார் செய்துள்ளது. அவர்களுக்கான பிணை அனுமதி அடுத்த வாரம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றின் ஊடாக வழங்கப்படும்.

இவர்களை வழக்குகளிலிருந்து முற்றாக விடுதலை செய்யவில்லை. நீதிமன்றத்தின் உத்தரவுப்படி பிணையில் விடுவிக்கவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களை விடுவித்தமையானது பெரிய தவறு எனச் சிலர் அர்த்தம் கற்பிக்க முற்படுகின்றனர். இதேபோன்று தான் 2010ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட 140 பேர் சட்டமா அதிபர் வழங்கிய உத்தரவுக்கு அமையப் பிணையில் விடுவிக்கப்பட்ட சம்பவத்தை, தற்போதைய அரசின் மீது குற்றம் சுமத்துபவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது-என்று கூறியுள்ளது.

இதேவேளை,பிணை அனுமதி வழங்கப்பட்ட 31 அரசியல் கைதிகளில் 24 பேர் நேற்று விடுவிக்கப்பட்டதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளின் உறவினர்கள் பிணை நிபந்தனைகளில் கையொப்பமிட்டதன் பின்னர், அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பிணை வழங்கப்பட்ட 31 கைதிகளில் நால்வர் வேறு வழக்கு விசாரணைகளை எதிர் நோக்கியுள்ளனர்.

அத்துடன் தமது விடுதலையை வலியுறுத்தி ஆறாவது நாளாக நேற்றும் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் சுகவீனமுற்று சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 15 கைதிகள், சிகிச்சையின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.-என்றார். (த-வ)

## கிழக்கு

இந்தப் பயணத்தின்போது மட்டக்களப்பில் புற்றுநோய் போதனா வைத்தியசாலை ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்கவிருந்தார்.

அரச புலனாய்வுப் பிரிவினர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவேண்டாம் என வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், ஜனாதிபதி தனது பயணத்தை ஒத்திவைத்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


ஜனாதிபதியின் இந்தப் பயணம் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவினர் கடந்த இரண்டு வாரங்களாகத் தகவல்களைத் திரட்டி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதிக்கு மேலதிக பாதுகாப்பு வழங்க ஏற்கனவே 250 படையதிகாரிகள் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி கிழக்குக்கு கடந்த மாதம் மேற்கொள்ளவிருந்த பயணமும் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## மரண அறிவித்தல்

### திருமதி மல்லிகாதேவி கந்தையா



இராமலிங்கம் வீதி உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி **மல்லிகாதேவி கந்தையா** நேற்று (13.11.2015) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதியினரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான நாகன் அரியம்மா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற நாகன் கந்தையாவின் அன்பு மனைவியும் பிறேமச்சந்திரன், பிறேமதாஸ், பிறேமலதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவித்திரா, மரியவசந்தி, உதயகுமார் ஆகியோரின் அருமை மாமியாரும் தனுசன், திசாரா,துஷான், டனிசா, ஜன்சிகா, மோசிகா, நிதுஷன், கனுசிகா காலஞ்சென்ற சனுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் இராசகுலதேவி காலஞ்சென்ற டானியன் மற்றும் அருமைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமலிங்கம் வீதி,
உடுவில்.**


(66090)

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### செல்லையா ஜெயசேகரம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)



கொடிகாமம் பெரியநாவலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ஜெயசேகரம் நேற்று (13.11.2015) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) மெனிக்கா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் (தாதிய உத்தியோகத்தர் ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி) அன்புக் கணவரும், விஸ்னுபிரசாத்தின் (லண்டன்) அன்பு தந்தையும், அமரசேகரம் (தலைவர்-பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம்), தர்மசேகரம் (பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் முகாமையாளர்-கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் யோகராசா, சிவராசா, சாரதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் வேவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியநாவலடி,
மிருசுவில்.**

(66084)
(10,17)

**தகவல்: மனைவி
021 2050134
077 9353069**

# போர் தவிர்ப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்தினர் படையினர்

## ஒப்புக்கொள்கிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, நவ.14

போர் தவிர்ப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த, புதுக்குடியிருப்பு மருத்துவமனைமீதுபடையினரால் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை உண்மையே என இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒப் புக் கொண்டுள்ளார் .

எனினும் இந்தத் தாக்குதல்கள் தவறுதலாக இடம்பெற்றவை எனவும் அவர் கூறியுள்ளார்.

லண்டன் ஐ.பி.சிக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தபோது, போர் தவிர்ப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த பகுதிக்குள் இயங்கிய புதுக்குடியிருப்பு மருத்துவமனை படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது.

இது குறித்துக் கருத்து தெரிவித்துள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, புதுக்குடியிருப்பு மருத்துவனை கனரக ஆயுதத் தாக்குதலுக்கு இலக்கானது. ஆனால் அது தவறுதலாக இடம்பெற்றது - என்றார்.

அத்துடன், போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருந்தால் அதற்குப் பொறுப்பேற்கத் தாம் தயாராக இருப்பதாகவும் சரத் பொன்சேகா இந்தச் செவ்வியில் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இசைப்பிரியாவின் படுகொலை அருவருக்கத்தக்க செயல். நடேசன், புலித் தேவன் ஆகியோரின் சாவுகள் தொடர்பாக நிச்சயமாக சர்வதேச விசாரணை நடத்தப் படவேண்டும்.

போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்ற ஐ.நா அறிக்கை பொய்யானது. நவநீதம் பிள்ளையின் புள்ளிவிவரங்கள் ஆதாரமற்றவை.

போரின்போது தரையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் உயர்தொழில்நுட்பக் கருவிகளை இலங்கை இராணுவம் பயன்படுத்தியது. சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமைவாகவே நாம் போரை நடத்தினோம்.

இலங்கை இராணுவம் இரகசிய முகாம்களை வைத்திருந்தது என்பதை ஒப்புக் கொள்கின்றேன். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்த பின்னர், கருணாவும் கூட அத்தகையதொரு இரகசிய முகாமில் தான் மறைந்திருந்தார்.

இரகசிய முகாம்கள் இராணுவப் புலனாய்வில் முக்கியமானதொரு பிரிவு. ஆனால் குறித்த முகாம்களில் மகிந்த ராஜபக்சவும், கோத்தாபாய ராஜபக்சவும், துணை ஆயுதக்குழுக்களை வழிநடத்தினார்கள்-என்றார். (து-வ)

# இலங்கைக்கு வரும் சமந்தா பவர் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சு

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவரும் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை வகுப்பாளர்களில் முக்கியமானவருமான சமந்தா பவர் மூன்று நாள்கள் பயணமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கை வருகின்றார்.

இவர், இலங்கைப் பயணத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் முக்கிய பேச்சு நடத்தவுள்ளார். இந்தத் தகவலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று உறுதிப்படுத்தினார்.

இந்த பயணத்தின்போது வடக்குக்கும் அவர் பயணம் செய்யவுள்ளார். யாழ்ப்பாணத்தில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்திப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதுடில்லியிலுள்ள தாஜ்மஹால் ஹோட்டலில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள 'உலகில் பெண்கள்' மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகைதரவுள்ள ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், இந்தியாவில் சில நாள்கள் தங்கியிருந்துவிட்டு இலங்கைக்கான பயணத்தை முன்னெடுக்கவுள்ளார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி மெக்ஸிக்கோ நகரில் இடம்பெற்ற திறந்த அரசுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய சமந்தா பவர், இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து விரிவாக எடுத்துக்கூறியதுடன், மகிந்த ராஜபக்ச ஆட்சி குறித்துக் கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# மாகாணசபை உறுப்பினரின் சகோதரர் மீது தாக்குதல்

வடமராட்சி, நவ.14

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தனின் சகோதரர் நேற்றுப் பிற்பகல் நெல்லியடி நகரப் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டிருப்பதாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் அவர் மீது தாக்குதலை நடத்தியதாகவும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து வடமாட்சி நோக்கி வந்து கொண்டிருந்த அவரை நெல்லியடி நகரப் பகுதியில் வழிமறித்தவர்களே தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சந்திரலிங்கம் சுயேசன் (வயது-28 ) என்ற இளைஞரே தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார். இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருவதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-109)

## தொடர்ச்சிகள்...

### வடக்கில்

ளில், மழை தொடருமாக இருந்தால் மக்கள் இன்றைய தினம் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்று இடர்முகாமைத்துவ நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

காற்றமுத்தத் தாழ்வு நிலை காரணமாக நேற்றுமுன்தினம் இரவு முதல் தொடர்ச்சியாக, வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் கனமழை பெய்து வருகின்றது. இதனால் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், வீடுகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 131 குடும்பங்களைச் சேர்ந்த 493 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தலா 2 வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்துள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 244 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 233 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். 41 வீடுகள் பகுதியாகவும், 8 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 305 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 45 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 201 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 795 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 475 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குடும்பம் மாத்திரம் பாதிக்கப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவில் நேற்றையதினம் கடும் மழை காரணமாக 30 வீடுகள் காற்றில் பறந்ததுடன் 150 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததோடு 75 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை 6 மணியளவில் கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக 30 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்தன. பொன்நகர் பகுதியில் குளம் ஒன்று வான் பாய்வதனால் அதிகளவான வீடுகளுக்குள் மழை நீர் உட்புகுந்துள்ளது. இதனால் வீடுகளை இழந்த 30குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியுள்ளன.

இதேவேளை, நீர் புகுந்த வீட்டின் உரிமையாளர்கள் தொடர் காலநிலை தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், கிளிநொச்சி மாவட்ட த்தில் மட்டும் இன்று ஒரே நாளில் 150 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதுடன் இரணைமடுக்குளத்துக்கு கடந்த 20 மணித்தியாலத்தில் 4 அடி நீர் வந்துள்ளதாகவும் அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளை, தண்ணீரூற்றுப்பகுதிகளில் வரலாறு காணாத கடும் மழை நேற்று மாலை வரை தொடர்ந்து பெய்துள்ளது. இதனால் முள்ளியவளை 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை மத்தி, முள்ளியவளை 1 ஆம் வட்டாரம் ஆகிய பகுதிகளில் உள்ள காட்டா விநாயகர் கோயில் வீதி மற்றும் பெருந்தெரு, கலைமகள் வித்தியாலய வீதி, முள்ளியவளை சந்தைப் பகுதிகளிலும், ஒட்டுசுட்டான் பகுதிகளிலும் கடும் வெள்ளம் பாய்ந்தோடியது. கடைகளுக்குள்ளும் பெரும் வெள்ளம் புகுந்து சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது, முள்ளியவளை சந்தைப்பகுதிக்கு முன்னேயுள்ள வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காட்டாற்று வெள்ளம் போல நீர் பாய்ந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வெள்ள நிலைமை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவிக்கையில் இன்று காலை முதல் அதிகரித்த மழை பொழிகின்றமையினால் தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் முறிகண்டிப் பகுதியில் 15 குடும்பங்கள் இடம் பெயர்ந்து அருகில் உள்ள பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றார். (து-5-21-ரி3-426-433-101)

### ஐ.நா.

இடம் ஒன்றில் வைத்து, காணாமற்போனோரின் உறவினர்கள் 25 பேரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். இவ்வாறு விசாரணையில் பங்கெடுத்த காணாமற்போனோரின் உறவினர்களே மேற்கண்டவாறு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனவர்கள், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த பின்னர் காணாமற்போனவர்கள், இராணுவத்தினரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டுக் காணாமற்போனவர்கள் தொடர்பான உறவினர்களே நேற்றைய தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

எப்படிக் காணாமற்போனார் என்பதைச் சுருக்கமாகச் சொல்லச் சொன்னார்கள். நாங்கள் அதனைச் சொன்னோம். குறிப்பெடுத்துக் கொண்டார்கள். வேறு எதையும் கேட்கவில்லை. ஒரு படிவத்தை நிரப்பித் தருமாறு தந்தார்கள் என்று விசாரணையில் பங்கெடுத்த ஒருவர் குறிப்பிட்டார்.

ஐ.நா.வுக்கு காணாமற்போனவர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யும் படிவம், விசாரணையில் பங்கெடுத்த எல்லோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பூரணப்படுத்தி இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு ஐ.நா. அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இலங்கை அரசிடமும், குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒட்டுக் குழுக்களிடமும் உங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை செய்யச் சொல்வோம். இதற்காக உங்களுக்கும் விசாரணை மேற்கொள்ளும் இலங்கை அரசுக்கும் இடையில் தொடர்பாளர்களாக நாங்கள் இருப்போம். என்று விசாரணை மேற்கொண்ட ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தாக, காணாமற்போனோரின் உறவினர்கள் குறிப்பிட்டனர்.

ஐ.நா. குழு மூலம் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதா என்று வினவியபோது, அவர்கள் எந்த உறுதியான பதிலும் வழங்கவில்லை. தொடர்பாளர்களாக அவர்கள் இருப்பதால் எமக்குப் பயனில்லை. அவர்கள் கண்காணிப்பாளர்களாக இருக்கவேண்டும். சுயாதீனமான - சர்வதேச விசாரணை நடத்தப்படுவதன் மூலமே எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியும் என்று விசாரணைக்கு முகம் கொடுத்த ஒருவர் தெரிவித்தார்.

காணாமற்போனோரின் உறவுகளுக்கு இராணுவத்தினர் - இராணுவப் புலனாய்வாளர்களினால் அச்சுறுத்தல் உள்ளது என்று விசாரணையின் போது சாட்சியமளித்த சிலர் குறிப்பிட்டதற்கு, இனிமேல் அவ்வாறு இடம்பெறாது. அவ்வாறு ஏதாவது நிகழ்ந்தால், இந்தத் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளுங்கள் என்று தொலைபேசி இலக்கத்தையும் ஐ.நா. அதிகாரிகள் வழங்கியுள்ளனர். (து-5-102)


தேவை

கல்வி நிறுவனம் ஒன்றிற்கு யாழ் நகர பகுதியில் வீடு / கட்டடம் வாடகைக்கு தேவை.
வாகன தரிப்பிடம் குறைந்தது 1200 சதுர அடி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புக்கு : 021 493 6666

நியத்த ஜய
410
2015-11-13
நீலம்
04 07 39 53 N
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை
16,148,820/=
அல்லது துரித அழைப்பு 1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 13.11.2015
வெற்றி வாரம் 1902
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
29 58 59 61
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் போதி
ரூ. 2,000,000/=

பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| குருநாகல் | 500720162-0-20 | கொழும்பு | 500740659-2-42 |
| குருநாகல் | 500722429-9-29 | யாழ்ப்பாணம் | 500720005-3-33 |
| கண்டி | 500723399-4-14 | மாத்தளை | 500720554-0-40 |
| களுத்துறை | 500725511-9-09 | அம்பாந்தோட்டை | 500720964-2-42 |
| களுத்துறை | 500731554-2-22 | வவுனியா | 500726381-6-36 |
| கம்பஹா | 500732731-0-10 | புத்தளம் | 500729158-6-26 |
| கொழும்பு | 500736810-1-11 | திருகோணமலை | 500729943-5-05 |
| கண்டி | 500737289-5-45 | | |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space LW ஐ டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

சேவைநலன் பாராட்டும் 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்களும்



உயர்திரு. நாகதீபன் நாகேஸ்வரன்
(உதவிப் பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி-யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் 38 வருடகால சேவையினை ஆற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்கின்ற எமது உதவிப் பிராந்திய முகாமையாளர் உயர்திரு நா.நாகேஸ்வரன் அவர்களின் ஓய்வு காலம் மகிழ்ச்சியாகவும், சுபீட்சமாகவும் அமையவும் வாழ்த்துகின்றோம்

Best Wishes
முகாமையாளரும், ஊழியர்களும்
மக்கள் வங்கி சங்கானை கிளை
பண்டத்தரிப்பு சேவை நிலையம்.

## கைதிகளின்

மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கண்ணீர் விட்டதுடன் தொடர்ந்து பேசமுடியாமல் தடுமாறினார்.

இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் கெயின் வோல்கர் நொதோர்கோன் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தார். இதன் போது, வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, முதலமைச்சரிடம் அரசியல் கைதிகள் விடுதலை குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டது. இந்தக் கேள்விக்கு பதிலளித்துக்கொண்டிருந்த முதலமைச்சர், ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டிருந்தபோது, பேசமுடியாமல் தடுமாறியதுடன் கண் கலங்கினார்.

பின்னர் சுதாரித்துக்கொண்ட முதலமைச்சர், தூதுவருடன் தழுதழுத்த குரலில் கலந்துரையாடலைத் தொடர்ந்தார்.

அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பைக் கைவிடுமாறு கூற உங்களால் முடியாதா எனச் சுவிஸ் தூதுவர் முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். இதற்கு, என்ன அடிப்படையில் உணவு தவிர்ப்பை நிறுத்தச் சொல்ல முடியும். அவ்வாறு செய்ய என்னால் முடியாது என மறுப்புத் தெரிவித்தார் முதலமைச்சர்.

இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட முதலமைச்சர்,

நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சந்தித்தமை பற்றி அவர்களிடம் கூறினேன். அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான எண்ணம் இருந்தாலும்கூட, அதனை நடைமுறைப்படுத்துவதை அரசியல் காரணங்கள் கட்டுப்படுத்துவதாக ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார் என்றும் அவர்களிடம் எடுத்துக் கூறினேன்.

அதேவேளை, 100ற்கும் மேற்பட்டவர்கள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். 23 பேரின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. 9 பேர் இறக்கும் நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் நீர் கூட அருந்தாமல் இருக்கும் தருணத்தில் மக்களின் பங்கு என்ன என்ற கேள்வி எழுகின்றது.

எதிர்வரும் திங்கட்கிழமை ஒரு முடிவைத் தருவதாக ஜனாதிபதி மைத்திரிபால கூறியிருக்கின்றார். எந்த முடிவும் இல்லாத நிலையில், உணவு தவிர்ப்பை நிறுத்துங்கள் என்று கைதிகளிடம் கூற என்னால் முடியாது. அதனால் தான் தயங்கிக்கொண்டிருக்கின்றேன் என்றும் அவர்களிடம் கூறினேன்.

கடந்த வருடங்களில் அரசியல் கைதிகள் 3 பேர் உயிரிழந்தார்கள். ஆனால், அவர்களின் உயிரிழப்பு குறித்து அரசு கவனத்தில் கொள்ளவில்லை. உங்களுடைய மக்கள் இறந்தால், உங்களுக்கு நட்டமே தவிர, அவர்களுக்கு நட்டம் இல்லைத் தானே என்று சுவிஸ் தூதுவர் என்னிடம் தெரிவித்தார்.

இது ஒரு பாரதூரமான விடயம். மக்கள் தமது எதிர்ப்பை அகிம்சை வழியில் எடுத்துக் காட்டுவதற்கு தான் போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள். அவ்வாறு செய்ததன் பின்னரும், அதனால் நன்மைகள் பெற முடியாமல் போய்விட்டால் எமது மக்கள் தம்மைத் தாமே வருத்திக்கொள்ள வேண்டியவர்களாகவே மாறவேண்டி இருக்கும் என்று சுவிஸ் தூதுவரிடம் எடுத்துரைத்தேன்.

தொடர்ந்து எமது மக்களுக்கு நன்மைகளைச் செய்து வருவதாகவும், இங்கு நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக வருகை தந்துள்ளதுடன், வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டங்களை உருவாக்குவதற்கு உதவி செய்வதாகவும் தூதுவர் குறிப்பிட்டார்.

சுவிற்சர்லாந்து மக்களுக்கும் எங்களுக்கும் இடையில், இருக்கும் உறவுகளை வலுப்படுத்துவதுடன், உதவித் திட்டங்களை மேலும் வழங்குவதாகவும் அவர் என்னிடம் கூறினார்–என்றார் முதலமைச்சர்.

(த-106)

## ஹெகலிய

தேடிக்கண்டறியும் குழுவின் முக்கியஸ்தர்களான லலித்குமார் மற்றும் குகராஜ் ஆகியோர் காணாமற்போய் பல வருடங்கள் ஆகிவிட்டன. எனினும் அவர்கள் இன்னும் கண்டறியப்படாதிருக்கும் நிலையில், அவர்களை அரச இராணுவப் புலனாய்வாளர்களும் பொலிஸ் புலனாய்வாளர்களுமே கடத்தியதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. வழக்கின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டவர்களில் அவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தெடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. கடந்த தவணை உத்தரவிடப்பட்டபடி நேற்றையதினம் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் சாட்சியப் பதிவுக்காக நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அது தொடர்பான கட்டளையும் நீதிமன்றினால் கடந்த சில தவணைக்கு முன்னர் அனுப்பப்பட்டுவிட்டது. ஆனால் குறித்த இருவருமே இதுவரை நீதிமன்றுக்குச் சமுகமளிக்காத நிலையில் சுனில் ஹந்துன்நெத்தி நேற்றையதினம் யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு வந்த குறித்த வழக்கில் முன்னிலையானார். தவிர்க்க முடியாத காரணங்களால் கடந்த தவணைகளில் நீதிமன்றுக்குச் சமுகமளிக்கவில்லை என்றும் கூறி தனது சாட்சியத்தைப் பதிவு செய்தார்.

அவர் தனது சாட்சியத்தில், லலித் மற்றும் குகன் ஆகியோர் கடத்தப்பட முன்னர் அரச புலனாய்வாளர்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தனர். அரச புலனாய்வாளர்கள் என்னும்போது இராணுவ மற்றும் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த புலனாய்வாளர்களே கடத்தினர் என்று கூறிய அவர், அதற்கான ஆதாரங்களையும் நீதிமன்றில் சுட்டிக்காட்டினார். 2 மணித்தியாலங்களுக்கும் மேல் அவரது சாட்சியப் பதிவு நேற்று இடம்பெற்றது.

எனினும் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ஏற்கனவே பல தடவை அறிவுறுத்தியபோதும் அதனை அவர் கருத்தில் கொள்ளவில்லை. அதனால் அவருக்கு நேற்று நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்று நேற்றுப் பணித்துள்ளது.

நேற்று வழக்கின்போது மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகளான நுவான் போபகே, ஹெனடிகொடிகார ஆகியோரும், எதிர்த்தரப்பு சார்பில் அரச சட்டத்தரணி பத்மால் டீ சில்வாவும் முன்னிலையாகினர். இது தொடர்பான வழக்கை நீதிமன்று எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

(த-4)

## வடக்கு – கிழக்கு

கூட்டமைப்பு மற்றும் பொதுஅமைப்புக்கள் என்பன அழைப்பு விடுத்திருந்தன. இதற்கமைய நேற்றையதினம் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வர்த்தக நிலையங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டிருந்ததுடன், தனியார் மற்றும் அரச பஸ் சேவைகள் என்பனவும் நேற்றையதினம் இடம்பெறவில்லை. வீதிகளில் காலையில் மக்கள் நடமாட்டம் இருந்தாலும் மதியத்துடன் அவையும் இல்லாமல் போய், வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. அத்துடன் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. இதனால் பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன. தனியார் கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் என்பனவும் நேற்று முழுமையாக மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்களும் மக்களின்றி அமைதியாகக் காணப்பட்டன.

வங்கிகளின் பிராந்தியக் கிளைகள் மூடப்பட்டிருந்ததுடன், பிரதான அலுவலகங்கள் ஒற்றைக் கதவுகளை மாத்திரம் திறந்து வைத்திருந்தன. தனியார் வங்கிகள் மற்றும் லீசிங் நிறுவனங்கள் என்பன வெளிப்புறமாக மூடியிருந்தன. இருப்பினும், அலுவலர்கள் தமது பணிகளை முன்னெடுத்துள்ளனர். வடக்கு – கிழக்குப் பிரதேசத்திலுள்ள நீதிமன்றங்களுக்குச் சட்டத்தரணிகள் செல்லவில்லை. இதனால் நீதிமன்ற நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் மாத்திரமின்றி முஸ்லிம் மக்களும் தமது வர்த்தக நிலையங்களை மூடி முழுமையான ஆதரவை வழங்கியிருந்தனர். வழமைக்கு மாறாகப் பொலிஸார் நகரப் பகுதிகளில் குவிக்கப்பட்டிருந்தனர்.

**யாழ்ப்பாண மாவட்டத்தில்**

முற்றவெளி தனியார் – வெளிமாவட்ட பஸ் சேவை நடைபெறவில்லை. எனினும் முல்லைத்தீவு மாவட்ட அரச பஸ்கள் யாழ். பஸ் நிலையத்திற்கு வருகை தந்தன. யாழ். வைத்தியசாலையின் செயற்பாடுகள் நடைபெற்ற போதும் மக்கள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. வைத்தியசாலையை அண்டிய பகுதியில் உணவகங்களும் மருந்தகங்களும் திறந்திருந்தன. ஓட்டோக்கள் தரிப்பிடங்களில் நிறுத்தப்பட்டிருந்தபோதும் சேவையில் ஈடுபடவில்லை.

**தென்மராட்சி**

கொடிகாமம் பகுதியில் மக்கள் முழுஅடைப்பை மேற்கொண்டு பூரண ஆதரவை வழங்கினர். வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டது. வாகனப் போக்குவரத்து மற்றும் இன்னபிற பிரயாண செயற்பாடுகளும் மக்களால் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் பாடசாலைகள் அரச அலுவலகங்களும் இயங்காத நிலைமையினையே அவதானிக்க முடிந்தது.

**மானிப்பாய்**

வீதிகளில் ஆள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. மானிப்பாய் பகுதியில் உள்ள ஏழு வங்கிகளில் மக்கள் வங்கி முழுதாக மூடப்பட்டும் ஏனைய வங்கிகள் ஒற்றைக் கதவு திறந்தபடியும் காட்சி அளித்தன. அலுவலக நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டுப் பிரதேச சபையும் மூடப்பட்டுக் காணப்பட்டது. பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவாகக் காணப்பட்டதனாலும் பாடசாலை நடவடிக்கைகளும் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன.

**நெல்லியடி**

மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது. வாகனப் போக்குவரத்து குறைந்தளவாக இருந்தது. நகரப் பகுதியில் ஒரு தேநீர்க் கடை தவிர்ந்த அனைத்துக் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தது. பாடசாலைகள் நடைபெறவில்லை. அத்துடன் வங்கிகள், அரச அலுவலகங்கள் இயங்கிய போதும் அவையும் ஒற்றைக் கதவுடன் திறந்திருந்தன.

**பருத்தித்துறை**

பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள் முழுமையாக முடங்கியதுடன் வைத்தியசாலைகளில் வெளிநோயாளர்கள் பிரிவுகள் இயங்கியதை அவதானிக்க முடிந்தது.

**காரைநகர்**

மக்கள் முழுமையான ஆதரவுடன் முழுக் கடையடைப்பு நடைபெற்றது. வாகனப் போக்குவரத்தும் குறைவாகவே காணப்பட்டதுடன் ஓட்டோ தரிப்பிடங்களும் வெறிச்சோடிக் கணப்பட்டது. அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலை செயற்பாடுகள் முடங்கியதுடன் நகரப் பகுதியில் ஒரே ஒரு மருந்து விற்பனை நிலையம் மட்டும் திறக்கப்பட்டிருந்தது.

**சாவகச்சேரி**

போக்குவரத்துச் சேவைகள் செயற்படாததால் மக்கள் வீதிகளிலும் பேருந்து நிலையங்களிலும் நீண்ட நேரம் காத்திருந்தனர். போக்குவரத்துச் சேவைகள் இல்லாததால் வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகளுக்குச் சிகிச்சை பெற குறைந்தளவான நோயாளர்களே வருகை தந்திருந்தனர். காலையில் திறந்திருந்த சிற்றுண்டி நிலையங்களும் சன நடமாட்டமில்லாததால் 10 மணியுடன் மூடப்பட்டன.

**சுன்னாகம்**

பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டு முழு அடைப்பு வலி. தெற்கிலும் அனுஷ்டிக்கப்பட்டது. சுன்னாகம் பகுதியில் மக்கள் நடமாட்டம் பெருமளவில் குறைந்து காணப்பட்டது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் சில ஒற்றைக் கதவில் திறந்திருந்தன. பிரதான வீதியில் கடைகள் மூடப்பட்டிருந்த போதும் உள்ளகக் கடைகள் சில திறந்தும் காணப்பட்டன. இதுபோலவே மல்லாகம் – தெல்லிப்பழைப் பகுதிகளிலும் முழுஅடைப்பு நடைபெற்றுள்ளது. அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டே காணப்பட்டன.

**மன்னார்**

மன்னார் பஸார் பகுதி மற்றும் மாவட்டத்தில் உள்ள ஒரு சில உணவகங்களைத் தவிர ஏனைய தமிழ் – முஸ்லிம் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் அனைத்தும் மூடப்பட்டு வியாபார நடவடிக்கை கள் முற்றாக நிறுத்தப்பட்டன. தனியார் போக்குவரத்துச் சேவைகள் முழுமையாக நிறுத்தப்பட்டன. கல்விச் செயற்பாட்டைப் பொறுத்தவரை பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சென்றபோதும் மாணவர்கள் சமுகமளிக்காததால் கல்வி செயற்பாடுகள் இடம்பெறவில்லை அத்தோடு தனியார் கல்வி நிலையங்களின் கல்விச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டு உணர்வுபூர்வமாக முழு அடைப்பு இடம்பெற்றது. வைத்திய சாலைகள், நீதிமன்றம், வங்கிகள் வழமை போன்று இருந்தாலும் பொதுமக்கள் இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் உள்ளூர், வெளிமாவட்டங்களுக்கான அனைத்து பஸ்களும் வழமை போன்று சேவையில் ஈடுபட்டன. மன்னார் மாவட்டத்தின் நகரப் பகுதியில் என்றும் இல்லாதவாறு பொலிஸார், இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்களுடைய நடமாட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது.

**வவுனியா**

தமிழ், சிங்கள, முஸ்லிம் உணவகங்கள் அனைத்தும் மூடிய நிலையிலேயே காணப்பட்டன. அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், வங்கிகளில் செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெற்றன. ஆனால் உத்தியோகத்தர்களின் வரவு குறைவாக இருந்தது. போக்குவரத்தைப் பொறுத்த வரை வெளிமாவட்டங்களில் இருந்து வவுனியா நகருக்குள் வரும் பஸ்கள் மட்டுமே அங்கிருந்து மீண்டும் வெளிமாவட்டங்களுக்கு திரும்பிச் சென்றன. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அரச, தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. உள்ளூர் சேவைகளும் நிறுத்தப்பட்டன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், சந்தைகள், உணவகங்கள் என அனைத்தும் மூடப்பட்டுக் கதவடைப்பை மேற்கொண்டிருந்தனர்.

அரச நிறுவனங்கள், வங்கிகள், வைத்தியசாலைகள், மருந்தகங்கள், இராணுவத்தினரின் உணவகங்கள் என்பன திறக்கப்பட்டிருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஒருசில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மட்டும் வருகை தந்திருந்தனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் தண்ணீர் ஊற்று, முள்ளியவளை, நீராவிப்பிட்டி, சிக்கராபுரம், புதுக்குடியிருப்பு, தேவிபுரம், ஒட்டுசுட்டான், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, வெலிஓயா போன்ற அனைத்துப் பகுதிகளிலும் உள்ள தனியார் நிறுவனங்கள், தனியார் பஸ் சேவைகள், வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் என்பன பூரணமாக மூடப்பட்டிருந்தன.

மாவட்ட வைத்தியசாலைகளில் அத்தியவசியமான மருத்துவ சேவைகள் நடைபெற்றிருந்தன. சகல அரச நிறுவனங்கள், வங்கிகள் என்பன திறக்கப்பட்டிருந்தன. ஆனால் மக்களுடைய நடமாட்டம் குறைவாக இருந்தால் அதற்கான சேவைகளும் குறைவானததாகவே இருந்தன.

**கிழக்கு மாகாணம்**

**திருகோணமலை**

திருகோணமலைப் பகுதியில் மாணவர்கள் முற்றாகப் பாடசாலை செல்வதைப் புறக்கணித்தனர். ஆசிரியர்கள் மட்டும் பாடசாலைக்குச் சென்றதைக் காணமுடிந்தது. திருகோணமலை நகர்ப் பகுதி, கிராமப் பகுதி என அனைத்துப் பகுதி வர்த்தக நிலையங்களையும் பூட்டி அரசியல் கைதிகளின் போரட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை. வழமையை விட மிகக் குறைவான சேவையையே வழங்கியிருந்தன. குறிப்பாக தூரப் பிரதேசத்திற்கான பஸ்களே குறைந்தளவில் சேவையில் ஈடுபட்டன.

திருகோணமலைப் பகுதியில் வங்கிகள் திறக்கப்பட்டு வழமையான சேவைகள் இடம்பெற்றுள்ளன. பொலிஸ் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டிருக்காவிடிலும் புலனாய்வுப் பிரிவினரின் நடமாட்டம் குறிப்பிடக்கூடியளவு இருந்தது. அரச அலுவலகங்கள் திறக்கப்பட்டிருந்தாலும் ஒரு சில அலுவலர்கள் பணிக்குச் செல்லவில்லை. அதேவேளை வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. இன, மத பேதமின்றி தமிழ், முஸ்லிம் என அனைவரும் முழுஅடைப்பை நடைமுறைப்படுத்தி திருகோணமலை மக்கள் அரசியல் கைதிகளுக்கு தங்கள் ஆதரவை வழங்கியிருந்தனர்.

**மட்டக்களப்பு**

வைத்தியசாலைகள் இயங்கியபோதிலும் வர்த்தக நிலையங்கள், சந்தைகள், பாடசாலைகள், தபால் நிலையங்கள் போன்றவை அனைத்தும் மூடப்பட்டிருந்தன. தனியார் பஸ் சேவைகள், இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. வங்கிகள் செயற்படுகின்றனாவா என்று பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்ட நிலையில் வங்கிகள் திறக்கப்பட்டிருந்தன. ஆனால் வாடிக்கையாளர்கள் இன்றி வெறிச் சோடிக் காணப்பட்டன. அரச அலுவலங்கள் திறக்கப்பட்டிருந்தபோதிலும் பொதுமக்கள் சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்லாத நிலை மட்டக்களப்பில் காணப்பட்டது.

**அம்பாறை**

தமிழ் – முஸ்லிம் வர்த்தகர்கள் கடைகளை மூடி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள் இயங்கியிருந்தாலும் சேவைகளைப் பெறப் பொதுமக்கள் செல்லவில்லை. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை முற்றாக புறக்கணித்தனர். முறையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தால் திறக்கப்பட்ட பாடசாலைகளும் மூடியிருக்கலாம் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். தனியார் போக்குவரத்துச் சேவைகள் முற்றாகத் தடைப்பட்டிருந்த போதிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் குறைந்தளவில் சேவையில் ஈடுபட்டிருந்தன.

(த-5-20-21-ரி2-ரி3-ரி5-ரி6-ரி7-256-35-115-122-51-17-108-106-102-109-288-9-11-101-135-50-250-10-30-40-500-56-402-433)

## பெண் தலைமைக் குடும்பங்களுக்கான தேசிய நிலையம் நேற்று திறந்துவைப்பு



கிளிநொச்சி, நவ 14

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பப் பெண்களின் மேம்பாட்டுக்கான தேசிய நிலையம் ஒன்று நேற்றுக் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணிக்குக் கிளிநொச்சிக்கு வருகை தந்த பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டாரநாயக்க கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றுக்கு அருகில் அமைக்கப்பட்ட குறித்த மேம்பாட்டு மையத்தைத் திறந்து வைத்தார்.

கடந்த ஜனவரி மாதம் கிளிநொச்சிக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில், கணவனை இழந்த பெண்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய நிலையம் ஒன்றைக் கிளிநொச்சியில் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் நேற்றுக் குறித்த நிலையம் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட சில பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன.

நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மற்றும் பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-ரி3)

# ஆஸி. தடுப்பு முகாமில் இருந்த ஈழத் தமிழ்ப் பெண் விடுதலை

## மூன்றரை ஆண்டுகளின் பின் அனுமதி

சிட்னி, நவ.14

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக ஆஸ்திரேலிய விலவூட் தடுப்பு முகாமில் இருந்த ரஞ்சனி என்ற ஈழத் தமிழ்ப் பெண் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

போரில் தனது கணவனை இழந்த 36 வயதான ரஞ்சனி தனது இரண்டு பிள்ளைகளுடன் படகுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு 2010ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை அடைந்தார்.

பின்னர் அந்த நாட்டின் பல்வேறு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட ரஞ்சினியும் குழந்தைகளும் இறுதியாக பிறிஸ்பேர்ணிலுள்ள சமூகத் தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டனர்.

அத்துடன் 2011 செப்ரெம்பரில் அவருக்கு அகதி அந்தஸ்தும் வழங்கப்பட்டது. இருந்த போதிலும் ஏ.எஸ்.ஐ.ஒ எனப்படும் ஆஸ்திரேலியப் புலனாய்வு நிறுவனத்தின் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கைக்காக அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த அறிக்கை சாதகமானதாக இருந்தால் மட்டுமே ஆஸ்திரேலியாவில் வசிப்பதற்கான நிரந்தர அனுமதி அவர்களுக்குக் கிடைக்கும்.

குறித்த காலத்தில் கணேஸ் என்ற ஈழத் தமிழரைச் சந்தித்த ரஞ்சனி, 2012 ஏப்ரலில் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளின் அனுமதியுடன் அவரைத் திருமணம் செய்து கொண்டார்.

எனினும் 2012 மே மாதம், மெல்பேர்ண் குடிவரவுத் திணைக்கள அலுவலகத்துக்கு மாதாந்த நேர்காணலுக்கென அழைக்கப்பட்ட ரஞ்சனியும் அவரது இரண்டு பிள்ளைகளும் அங்கிருந்து நேரடியாக சிட்னியிலுள்ள விலவூட் தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்கள் ஆஸ்திரேலியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்று அந்த நாட்டின் புலனாய்வுப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்திருந்தமையே இதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது.

இந்த நிலையில் ரஞ்சினி - கணேஸ் தம்பதியின் மகன் விலவூட் தடுப்பு முகாமிலேயே பிறந்தார்.

விலவூட் தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட நாள் முதல் தற்போது வரையான மூன்றரை ஆண்டு காலப்பகுதியில் ரஞ்சனியை வெளியே கொண்டுவருவதற்கு பல்வேறு தரப்பிலிருந்து முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று விடுதலை செய்யப்பட்டார் என ஆஸ்திரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (த-வ)

# திருகோணமலையில் மீனவரிடையே முறுகல்

திருகோணமலை, நவ, 14

திருகோணமலை நகரிலுள்ள சிறு மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் கரவலை மீனவர்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாகக் கடல் கொந்தளிப்பாகவுள்ளது. இதனால் ஆள்கடலுக்குச் செல்ல முடியாத மீனவர்கள் கரையிலிருந்து 800 மீற்றருக்கு அப்பால் உள்ள நரிமலைப்பார் கடல் பகுதியில் கந்தரக்குள்ளா என்று கூறப்படும் சிறு மீன்பிடி வள்ளத்தில் தூண்டில் போட்டுப் பருவகால மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர் .

இதேவேளை, டயக் வீதி டச்பே கடற்கரையிலிருந்து 750 மீற்றருக்குட்பட்ட பகுதியில் சிலர் பாரம்பரியமான கரவலை மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

மீன்பிடித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 45 கரவலைப்பாடு உரிமையாளர்கள் ஒரு வாடியில் 35 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தித் தொழில் செய்து வருகின்றனர்.

வழமையை விட இரு பகுதியினருக்கும் கூடிய மீன்கள் கிடைக்கின்றன. தமது எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடிப்பதாக இரு பகுதியினருக்குமிடையே தற்போது முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் கடலில் போடப்பட்ட கரவலையொன்று இனந்தெரியாதவர்களினால் அறுத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த வலை அறுப்பினால் பிடிபடவேண்டிய பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன் கடலில் சென்று தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை மனையாவளியைச் சேர்ந்த மகேஸ், கமலநாதன், கௌரிதேவி ஆகியோரே பதிவு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சென்று பார்வையிட்ட துறைமுகப் பொலிஸாரும், மீன்பிடித்திணைக்கள அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-10)



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கூலர் ரக வாகனம் ஏ-9 வீதியில் கொக்காவில் பகுதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. (த-101)

## சிலாபம்-குருநாகல் வீதியில் விபத்து; மாணவி சாவு

கொழும்பு, நவ 14

சிலாபம்-குருநாகல் பிரதான வீதியின் கொட்டம்பிட்டிய சந்தியில் இடம்பெற்ற விபத்தில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மாணவன் படுகாயமடைந்துள்ளதாக ஹெட்டிப்பொலப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் நோக்கிப் பயணித்த பாடசாலைச் சேவை தனியார் பஸ் ஒன்று பாதசாரிக் கடவையில் வீதியைக் கடக்க முற்பட்ட இரு மாணவர்களை மோதியதில் மாணவி உயிரிழந்துள்ளதுடன், மாணவன் படுகாயங்களுடன் யஹட்டிப்பொல கிராமிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம்வியாழக்கிழமை காலை 7.10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் யஹட்டிப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயது மாணவியே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். படுகாயம் அடைந்த 13 வயது மாணவன் உயிரிழந்த மாணவியின் சகோதரன் எனவும் யஹட்டிப்பொல பொலிஸார் கூறினர்.

பஸ்ஸின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், யஹட்டிப்பொல நீதிவானிடம் முன்னிலைப் படுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டனர். (த)

# மர்மப்பொருள் விழவில்லை வானில் எரிந்திருக்க வாய்ப்பு



இலங்கைக் கடற்பரப்பில் விழும் என எதிர்வு கூறப்பட்ட டபிள்யூரி1190எப் என்ற மர்மப்பொருள், பூமியை வந்தடைய முன்னர் வளி மண்டலத்திலேயே எரிந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

நேற்றுக் குறித்த மர்மப் பொருள் விண்ணில் இருந்து விழும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இலங்கையின் தென்பகுதி கடற்பிரதேசம் பறப்பற்ற பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதோடு, மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விண்வெளியில் இருந்து நேற்று முற்பகல் 11.50 மணியளவில் இலங்கைக்குத் தெற்கேயுள்ள 65 கிலோ மீற்றர் தொலைவில் டபிள்யூரி1190 எப் எனப் பெயரிடப்பட்ட மர்மப் பொருள் கடலில் விழும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதையடுத்து, மாத்தறை மாவட்டத்தில் உள்ள தங்காலையில் ஐரோப்பிய விண்வெளிமையத்தின் விஞ்ஞானிகள் உள்ளிட்ட ஆய்வாளர்கள் கூடியிருந்து அவதானித்து வந்தனர்.

எனினும், இந்த மர்மப்பொருள் பூமியை வந்தடையவில்லை. இது வானிலேயே எரிந்து போயிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

எதிர்பார்க்கப்பட்டது போல வளிமண்டலத் தொகுதிக்குள் எந்தப் பொருளும் நுழையவில்லை என்று ஐரோப்பிய விண்வெளி முகவரமைப்பின் விஞ்ஞானிகளுக்கு உதவும் குழுவில் இடம்பெற்றுள்ள கலாநிதி மகாநாம தெரிவித்துள்ளார். (த-வ)


WORLD DIABETES DAY
November 14

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான வாழ்விற்கு

Diabsol

(டயப்பஸோல்)



Hotline
0117 772277

www.baraka.lk

Baraka

# வோர்ணர் மீண்டும் அசத்தல் ஆட்டம்
# முதல் நாளிலேயே ஆஸி. வலுவான நிலை



ஆஸ்திரேலியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் முடிவிலேயே ஆஸ்திரேலியா 416–2 என்ற வலுவான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க வழக்கம் போல் அற்புதமாக அமைந்தது ஆஸியின் இணைப்பாட்டம்.


இலக்குச் சரிவில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது ஆஸ்திரேலியா. நூறு ஓட்டங்களைக் கடந்த அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே போர்ண்ஸின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

வோர்ணருடன் இணைந்தார் கவாயா. ஒருநாள் ஆட்டங்களின்பாணியில்அடுத்தடுத்துபவுண்டரிகள் எல்லைக்கு விரைந்து சென்றன. தொடர்ந்து மூன்றாவது முறையாக சதம் கடந்தார் வோர்ணர். இணைப்பாட்டம் நீண்ட நேரம் நிலைத்து நின்றது. நூறு, இருநூறு ஓட்டங்கள் என்று இணைப்பாட்டம் நீடித்துக்கொண்டிருக்க கவாயாவும் தனது சதத்தைப் பதிவுசெய்தார். மக் கலம் உள்ளிட்ட எட்டு வீரர்கள் பந்துவீசிப் பார்த்து விட்டார்கள்.

எந்தவித பயனும் இல்லை. சிக்சருடன் இரட்டைச் சதத்தை விளாசினார் வோர்ணர். அதற்கேற்ப துள்ளிக் குதிக்கவும் செய்தார்.

இணைப்பாட்டமாக 302 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் அதாவது ஆஸியின் ஓட்ட எண்ணிக்கை 403ஆக இருந்த பொழுது 121 ஓட்டங்களுடன் பிரேஸ் வெல்லின் பந்தில் ஆட்டமிழந்தார் கவாயா. மேலதிக இலக்குகள் எவையும் சரிக்கப்படாத நிலையில் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 416–2. வோர்ணர் 244 ஓட்டங்களுடனும் சிமித் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக கென்றி, பிரேஸ்வெல் இருவரும் தலா ஓர் இலக்கை கைப்பற்றினர். (ம)



## வடமாகாண மேசைப்பந்தாட்டத் தரப்படுத்தல் கொக்குவில் இந்துவின் மாணவன் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் ஆண்கள் பிரிவு 10வயது வீரர்களுக்கான தரப்படுத்தலில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவன் பிரசாந் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

வடமாகாணத்தின் மேசைப்பந்தாட்ட வீரர்களைத் தரப்படுத்தும் நோக்கத்துடன் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் மேசைப்பந்தாட்டத் தொடர் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்படி குறித்த தொடரின் தரப்படுத்தல் அண்மையில் வெளியிடப்பட்டது. 10 வயது ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் பிரசாந் 25 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினையும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் பாடசாலையின் மாணவன் துசியந்தன் 20 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும், அதே பாடசாலையின் யதுசன் 15 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தினையும், சென். யோன்ஸ் கல்லூரி மாண வன் சியாம் 15 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தினையும் பெற்றனர். யாழ். இந்துக்கல்லூரி மாணவன் தவிஸ்டின் மற்றும் யாழ். மத்தியகல்லூரிமாணவர்களான தனுரதன், ஹரிஸ், நியுஸ்சன் நால்வரும் காலிறுதிக்கு தகுதி பெற்றிருந்தனர். அதனால் புள்ளிப்பட்டியலில் அடுத்த அடைவு மட்டத்தில் அவர்கள் நால்வரும் உள்ளனர். (ம-23)

## யாழ். இந்து மாணவி முதலிடம் மேசைப்பந்தாட்டத் தரப்படுத்தலில்

யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் பெண்கள் பிரிவு 10வயது வீராங்கனைகளுக்கான தரப்படுத்தலில் யாழ். இந்து ஆரம்பபாடசாலைமாணவிஜெனனி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் மாணவி ஜெனனி 25 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினையும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவி நிசானி 20 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும், அதே கல்லூரியின் துசானி மற்றும் சோபிகா இருவரும் முறையே மூன்றாம் நான்காம் இடங்களையும் பெற்றுள்ளனர். கிளிநொச்சி மகா வித்தியலாயமாணவிகளான குகாயினி, யென்சிகா, அருள்விழி, ஆதித்தியா நால்வரும் காலிறுதிக்கு முன்னேறி அடுத்த அடைவு மட்டத்தில் உள்ளனர்.(ம-23)






## நாவாந்துறை சென்.மேரிஸ் – கொழும்பு நியூ யங்ஸ்ரார் இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், நவ. 14

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் இரண்டாம் பிரிவில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை நடைபெறவுள் ளது.

அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில்பிற்பகல்3மணிக்கு இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாவாந் துறை சென்.மேரிஸ்அணியை எதிர்த்து கொழும்புலெவின் நீயூ யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது. இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர்க.வி. விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ள அதேநேரம்சிறப்புவிருந்தினராக யாழ். மாவட்ட பிரதேச செயலாளர் சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

# பாகிஸ்தான் கிரிக்கெட்டில் இருந்து சயீத் அஜ்மல் உடனடி நீக்கம்



சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையை விரும்பத்தகாத முறையில் விமர்சித்தமைக்காக பாகிஸ்தானின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அஜ்மலை அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட் டுச்சபை அணியிலிருந்து நீக்கியுள்ளது.

பாகிஸ்தான் அணியின் முன்னணிசுழற் பந்து வீச்சாளராக இருந்தவர் சயீத் அஜ்மல். பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் போது இவரது பந்துவீச்சில் சந்தேகம் இருப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்படாமல் இருந்தார்.

இந்த நிலையில் சமீபத்தில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர் காணலில் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை இரட்டை வேடம் போடுவதாகவும், அஸ்வின், கர்பஜன் போன்ற வீரர்களின் பந்துவீச்சும் முறையற்ற விதத்திலேயே உள்ளது. ஆனால் 'பாகிஸ்தான் வீரர்களை மட்டும் குறிவைத்து தாக்குகிறது என்றும் விமர்சித்திருந்தார்.

இதற்கு ஐ.சி.சி. தனது கண்டனத்தை தெரிவித்திருந்தது. தற்பொழுது அவரை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அணியிலிருந்து நீக்கியுள்ளது. (ம)

# வார்த்தை மோதலால் இந்தியாவை வீழ்த்தலாமெனின் எனது அணியின் வெற்றிக்காக அதையும் செய்வேன்

## தெரிவிக்கிறார் வில்லியர்ஸ்



டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியை வசை வார்த்தைகளாலும், வார்த்தை மோதல்களாலும் வம்புக்கிழுத்து வீழ்த்த முடியுமாயின் அணியை வெற்றிபெறச் செய்ய அந்த மட்டத்துக்கும் இறங்கத்தயார் என்று தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் வில்லியர்ஸ்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் தற்பொழுது நடைபெற்று வருகிறது. ஒருநாள், ரி-20 தொடர்களை தென்னாபிரிக்கா அணி கைப்பற்றிவிட்ட போதிலும், டெஸ்ட் ஆட்டத்தில் அனைத்து வகையிலும் இந்திய அணி பலம்பெற்று விளங்குகிறது. இதனால் டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள தென்னாபிரிக்காவால் இந்திய இளம் வீரர்களை அசைத்துப் பார்க்க முடியாமல் உள்ளது.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் பெங்களூரில் இன்று ஆரம்பமாகின்ற நிலையில், இந்தியாவை எதிர் கொள்வது தொடர்பாக வில்லியர்ஸ் தெரிவித்ததாவது, டெஸ்ட் ஆட்டங்களில் இந்திய அணி மிகவும் அபாரமாக உள்ளது. துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் அந்த அணி அசத்துகிறது. அதேபோல் களத்தடுப்பை எடுத்துக்கொண்டால் நாளின் 90 பந்துப் பரிமாற்றங்களில் இடையே சிறிதேனும் சோர்வையோ அல்லது தொய்வையோ இந்திய வீரர்கள் வெளிப்படுத்துவதில்லை. இத்தகைய அணியை எதிர்கொள்வதோ அல்லது வெற்றி பெறுவதோ மிகவும் கடினம். வார்த்தைகளால் சீண்டி இந்திய அணியை வீழ்த்த முடியுமெனின் கோக்லியின் சிறு தவறுகளையோ அல்லது நுட்பங்களையோ விமர்சிக்க சிறிதேனும் தயங்கமாட்டேன். அணியின் வெற்றிக்காக எதையெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்வேன். ஆனால் வார்த்தை மோதல்களிலும் இந்தியா சிறப்பாகச் செயற்படும் என்பதை நான் அறிவேன்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அதைநான் பார்த்தேன்-என்றார். (ம)

# மெஸ்ஸி, ரொனால்டோவைவிட நெய்மர் மிகச் சிறந்த வீரர்

## தெரிவிக்கிறார் துங்கா



ஆர்ஜென்ரீனா, போர்த்துக்கல் அணிகளின் தலைவர்களான மெஸ்ஸி, ரொனால்டோவைவிட பிரேஸிலின் நட்சத்திரமான நெய்மர் சிறந்த வீரர் என்று பிரேஸில் அணியின் பயிற்சியாளரான துங்கா தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக துங்கா தெரிவித்ததாவது, உலகமே ரொனால்டோவையும், மெஸ்ஸியையும்தான் சிறந்த வீரர்கள் என தூக்கிவைத்துக் கொண்டாடுகிறது. இதில் எனக்கு சிறிது முரண்பாடும் உள்ளது. அவர்கள் இருவரும் சிறந்த வீரர்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் என்னிடம் இல்லை. ஆனால், அவர்கள் மட்டும்தான் சிறந்த வீரர்கள் என்று தெரிவிப்பது முற்றிலும் தவறானது. அனுபவம், துடிப்பான ஆட்டம், தேசப்பற்று, கோல் கணக்குகள் ஆகியவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக வைத்துப் பார்க்கின்றபொழுது ரொனால்டோ, மெஸ்ஸி இருவரையும் விட நெய்மர் சிறந்த வீரராக உள்ளார். ஆனால் எம்மில் பலர் வீரர்களைக் கணிப்பதில் தவறான அணுகுமுறையைக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (ம)

# பிபா தலைவர் தேர்தல் பிளாட்டினிக்கு மறுப்பு



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் (பிபா) தலைவருக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதப்பகுதியில் நடை பெறவுள்ள நிலையில், குறித்த தலைமைப் பதவிக்கான வேட்பாளர்களில் ஒருவரான பிளாட்டினியின் விண்ணப்பம் பிபாவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிபா கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஊழலில் சிக்கித் தவித்தது. இந்த ஊழல் தொடர்பாக அமைப்பின் முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், அதன் தலைவரான செப் பிளாட்டரும் சங்கடத்துக்கு உள்ளானார். ஆனால், அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மீறி சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்ற தேர்தலில் 5ஆவது முறையாக வெற்றி பெற்றார். ஆனால், பிபா தலைவர் பதவியில் இருந்து பிளாட்டர் விலக வேண்டும் என்று-தொடர்ந்து கடும் நெருக்கடி கொடுக்கப்பட்டது. இதற்கு சம்மதம் தெரிவித்த பிளாட்டர், அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி தலைவருக்கான தேர்தல் நடைபெறும். அதுவரை நான் தலைவராக இருந்து பிபாவின் சீர்கேட்டைக் களைவேன்-என்றார்.

இதனால் செப் பிளாட்டரின் தலைவர் பதவிக்கு பலர் போட்டியிட விரும்பினார்கள். அதில் ஐரோப்பிய கால்பந்து சம்மேளன தலைவரான மிச்செல் பிளாட்டினியும் ஒருவர். ஆனால் பிளாட்டினியின் விண்ணப்பத்தை ஏற்க மறுத்துள்ளது சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம். (ம)

# அக்மல் நீக்கம்

இங்கிலாந்துக்கு எதிரான ரி-20 தொடரில் பாகிஸ்தான் அணியில் இருந்து அதிரடி வீரரான உமார் அக்மல் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் முடிந்துள்ள நிலையில் நான்கு ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

அதன்பின்னர் இரண்டு ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடர் இந்த மாதம் 26ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உமர் அக்மல் நீக்கப்பட்டுள்ளார். அதே சமயத்தில் 39 வயதான புதுமுக வீரர் ரபதுல்லா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ரி-20 தொடருக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் விவரம் வருமாறு:- அகமட் செசாட், மொகமட் கபீஸ், ரபதுல்லா மொகமட், மலிக், சொகைப் மக்சூத், இப்திகார் அகமட், அப்ரிடி, மொகமட் ரிஸ்வான், சப்ிராஸ் அகமட், அன்வர் அலி, இமாத் வசிம், இம்ரான்கான், மொகமட் இர்பான், ரன்வீர், ரியாஸ், அமீர் யமின். (ம)






சிம்பாப்வேக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் பங்களாதேஷால் வகுக்கப்பட்ட களத்தடுப்பு வியூகமே இது. இதன் மூலம் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கு அடுத்த படியாக ஸ்லீப்ஸ் திசையில் அதிக களத்தடுப்பாளர்களை குவித்த அணி என்ற பெருமையைப் பெறுகிறது பங்களாதேஷ். (ம)

## விற்பனையாளர்கள் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மிகப் பிரமாண்டமான காட்சியறைக்கு விற்பனையாளர்கள் தேவைப் படுகின்றனர்.

- புடைவை, தாய், சேய் பொருள்கள் பற்றிய அனுபவம் உள்ளவர்கள் / புதியவர்கள் விரும்பத்தக்கது (10 பேர்)
- அனுபவம் உள்ள கணக்காளர் ஒருவரும் தேவைப்படுகின்றார்.

விரும்புவோர் 15.11.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 62/16, ஸ்ரான்லி வீதியில் உள்ள டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ் வியாபார நிலையத்துக்கு வருகை தரவும்.

தொடர்புகளுக்கு:- 0777 111 555


# முதலாவது ரி-20 ஆட்டத்திலும் பங்களாதேஷ் இலகு வெற்றி



சிம்பாப்வே பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக்கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் 4 இலக்குகளால் வெற்றிபெற்றது பங்களாதேஷ். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க வழங்கம்போல சிம்பாப்வேயின் ஆரம்பம் எடுபடவில்லை. 10 ஓட்டங்களிலேயே 3 இலக்குகளை இழந்து தவித்தது அந்த அணி. மத்திய வரிசை வீரரான வோலர் மட்டும் சிறிது அச்சுறு[illegible]னார். 200க்கும் அதிகமான சராசரியில் அவர் அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். எர்வினும் ஏதோ தன்னால் ஆன பங்களிப்பை வழங்க சிப்பாப்வே ஓரளவு கௌரவ நிலைமையை அடைந்தது. 68 ஓட்டங்களுடன் வோலர் ஆட்டமிழந்ததுதான் தாமதம் பின்வரிசை வீரர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பவிலியன் திரும்ப 131 ஓட்டங்களில் சுருண்டது சிம்பாப்வே.

சொந்த மண்ணில் பங்களாதேஷுக்கு இது ஒரு இலக்கேயில்லை. ஆனால் ஒரு ஓட்டத்துடன் கக்கியூவும் இரண்டு ஓட்டங்களுடன் ரகிமும் ஆட்டமிழக்க ஆரம்பம் சிறிது ஆட்டம் கண்டது. இருப்பினும் இக்பால் நிலைத்துநின்ற காரணத்தால் பங்களாதேஷிடம் இருந்து வாய்ப்பைப் பறித்துவிட சிம்பாப்வேயால் முடியவில்லை. இக்பாலின் இன்னிங்ஸிலும் வழக்கம்போல அதிரடி இருக்கவில்லை. ஆனால் இலக்கை எட்டக்கூடிய சராசரி இருக்கத்தான் செய்தது. 31 ஓட்டங்களு டன் ஆட்டமிழந்தார் இக்பால். மத்திய வரிசை வீரர்களும் சுமாரான பங்களிப்பு. முடிவில் 14 பந்துகள் மீதமிருக்க ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தது பங்களாதேஷ். (ம)


## அஸ்தி அடக்கம் செய்தல்

### தம்பிராசா கிருபானந்தராசா

(கிருபா அண்ணா)



நவஜீவன வளாகத்தின் முன்னாள் இயக்குநர் தம்பிராசா கிருபானந்தராசாவின் அஸ்தி இன்று (14.11.2015) சனிக்கிழமை அடக்கம் செய்யப்படவுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு முரசுமோட்டை நவஜீவன வளாகத்தில் உள்ள புனித சிற்பாசாரி ஆலயத்தில் ஆராதனை ஆரம்பமாகும். இரங்கல் உரைகளைத் தொடர்ந்து வழிபாடும் இடம்பெறும். அதன் பின்னர் பரந்தன் முல்லைச் சாலையில் உள்ள முதலாம் கட்டை, கல்லறைச் சாவடியில் அஸ்தி அடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், நவஜீவன அன்பர்கள் மற்றும் நவஜீவன பழைய மாணவர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:

திருமதி கி.மனோரஞ்சினி (ரஞ்சி அக்கா)

மற்றும் குடும்பத்தினர்.

(66832)(11.15)


## சச்சினைத் தெரியாத நிறுவனம் ரசிகர்கள் கொதிப்பு



சச்சின் தனது குடும்பத்தினர்களுக்கு இருக்கைகள் மறுக்கப்பட்டமை, தனது பொதிகளைத் தவறாக வேறு இடத்துக்கு அனு[illegible]யமை, தனது முழுப்பெயரை விசாரித்தமை தொடர்பாக இங்கிலாந்தின் விமான நிறுவனம் ஒன்றைப்பற்றி ருவிற்றரில் காட்டமாகப் பதிவிட்டிருந்தார் இந்த நிலையில் சச்சினுக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் தமது கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

சகல நட்சத்திரங்களின் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதற்காக சச்சின் சென்றுள்ள நிலையில், அவரது குடும்பத்தினரின் பயண நெருக்கடி பற்றிக் கோபமாக சச்சின் ருவிற் செய்தார். அதில் தனது முழுப்பெயரையும் கேட்டமை தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தார். சச்சினின் முழுப் பெயரைக் கேட்டமையை வன்மையாகக் கண்டித்துத் தமது கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர். கிரிக்கெட்[illegible]ன் தாயகம[illegible]ன இங்கிலாந்து, சச்சினைப் பற்றி தெரியாதுள்ளது., சச்சினின் அதீத வளர்ச்சியின் மேல் இங்கிலாந்துகொண்ட பொறாமையை இது காட்டுகின்றது என்பனவிமர்சனங்களின் சாராம்சங்களாக உள்ளன. (ம)


## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- ★ Excellent Teacher's Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 21.11.2015 முற்பகல் 10.00, பிற்பகல் 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Start On**

16.11.2015@10.00am | 18.11.2015@ 9.00am | 19.11.2015@10.00am | 20.11.2015 @ 9.00am | 23.11.2015 @ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550

HotLine(S)
0777585913, 0777222422
0776555677



NOVEMBER Special Offer 50% DISCOUNT

6th

நவம்பர் மாதத்திற்கான விசேட சலுகை

இலங்கையின் மிகப்பாரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு

ESOFT
Shaping Lives, Creating Futures.

**CERTIFICATE IN MICROSOFT OFFICE**

Unit 1 - IT Fundamentals
Unit 2 - MS Word
Unit 3 - MS Excel
Unit 4 - MS Access
Unit 5 - MS Power point
Unit 6 - Internet & E - Mail

Course Fee Rs.5,000

**CIT CERTIFICATE IN INFORMTION TECHNOLOGY**
Leading to International Diploma (UK)

Unit 1 - IT Fundamentals
Unit 2 - Microsoft Office Applications
Unit 3 - PC Hardware
Unit 4 - Network Essentials
Unit 5 - Internet & E-Mail
Unit 6 - Web Desgining
Unit 7 - Photoshop
Unit 8 - Flash and Animation

Diploma in IT (Assured By Pearson)
CIT Certificate in IT
O/L or A/L



Duration : 3 Months | FREE Book

Rs.~~19,500~~ Rs.9,750

NEW BATCHES | 2015.11.18 2015.11.16

LONDON METROPOLITAN UNIVERSITY | PEARSON | bcs Registered Course Provider | Microsoft IT Academy Program Member | ORACLE ACADEMY | intel

ESOFT METRO CAMPUS - JAFFNA
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka. | Tel : 021 - 222 4142 | web : www.esoft.lk
07737 288 42



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

கார்த்திகை 14,15 - 2015
யாழ் இந்து கூடைப்பந்தாட்ட திடல்

அனுசரணை : உதயன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.